ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ**

| முழக்கம்-21 | பாஞ்சஜன்யம்<br>ஜூலை 2012-158 | ஒலி 7 |
|---|---|---|

# திருவரங்கத்தில் திருமங்கையாழ்வார் எழுப்பிய திருமதிலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து!!!

**1. திருவரங்கம் பெரியகோயில் அமைப்பு:**

ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரும், குலசேகராழ்வாரும் திருவரங்கம் பெரியகோயிலில் பல மண்டபத் திருமதில் கைங்கர் யங்களை மேற்கொண்டனர். கருவறை தொடங்கி மூன்றாவது திருச் சுற்றாக அமைந்துள்ளது குலசேகரன் திருச்சுற்று. இந்தத் திருச்சுற்றில் தான் நாழிகைக்கேட்டான் வாசல் அமைந்துள்ளது. நாழிகைக் கேட்டான் வாசலுக்கு முன்பு அமைந்துள்ள உள்திருமுற்றத்தில்தான் கொடிக் கம்பமும், பலிபீடமும் அமைந்துள்ளன. குலசேகரன் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் பண்டைய காலங்களில் அமைந்திருந்தது சரஸ்வதி பண்டாரம் எனப்படும் நூலகம். சிறு அறைகளில் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. தற்போது அந்தச் சிறு அறைகள் இடிக்கப்பட்டு பெரியதொரு தாழ்வாரம் போல் அந்தப்பகுதி மாற்றம் பெற்றுள்ளது.

குலசேகரன் திருச்சுற்றின் தென்பகுதியில், கொடிக்கம்பத்திற்கு முன்பாக அமைந்துள்ளது ஆர்யபட்டாள் வாசல். இதனைக் கடந்து தெற்கு நோக்கி வெளி வந்தால் நான்காம் திருச்சுற்றான ஆலிநாடன் (திருமங்கையாழ்வார்) திருச்சுற்றை நாம் அடையலாம். இந்த ஆலிநாடன் திருச்சுற்றின் மேற்குப்பகுதியில் கொட்டாரமும், கந்தாடை ராமானுஜமுநியினால் பழுது பார்க்கப்பட்ட தற்போது பாழடைந்த நிலையில் காணப்படும் தானியக் களஞ்சியங்களும் அமைந்துள்ளன ***(இந்த இடத்தில் தற்போது அரியவகை விஷப்பாம்புகளும் மற்றைய விஷ ஜந்துக்களும் அடைக்கலம் கொண்டுள்ளன.)***

**2. திருமங்கையாழ்வாரின் திருப்பணிகளும், புத்த விக்ரஹத்தை கொள்ளையடித்து திருப்பணிகள் செய்ததும்.**

வாசகர்கள் இந்தத் தலையங்கத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கு முன் திருவரங்கத்தில் அமைந்துள்ள இந்த இரண்டு திருமதில்களைப் பற்றிய குறிப்புகளை உள்ளத்திலே பதித்துக் கொள்ள வேண்டும். ஆலிநாடன் திருச்சுற்றில் அமைந்துள்ளது, திருமங்கையாழ்வார் எழுப்பிய நெடுந்துயர்ந்த மதில். இது சுமார் 60அடி உயரம் கொண்டது.

‘‘திருமங்கையாழ்வார் நாகப்பட்டினத்திலிருந்த பொன்னாலான புத்த விக்ரஹத்தை அபகரித்துக் கொண்டு வந்து அவைதிகமான அந்தச் செல்வத்தை வைதிகமாக்கினார் என்று ஸ்ரீபராசர பட்டர் தம்முடைய ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே அத்புதமாக ஸாதித்துள்ளார்’’ என்று சொல்லி மகிழாத ஸ்ரீவைஷ்ணவர்களே கிடையாது. அத்தகைய புகழ்பெற்ற அந்தத் திருமதில் திருமங்கையாழ்வாரின் ஒரு வேண்டுகோளை விரைவில் நிறைவேற்றி வைக்கப்போகிறது.

**3. திருச்சேறை பதிகமும் திருமங்கையாழ்வாரின் ப்ரார்த்தனையும்.**

பெரியதிருமொழி 7-4-1 பாசுரத்தில் ‘‘செல்வத் தண்சேறை யெம் பெருமான்தாள்தொழுவார் காண்மின் என்தலை மேலாரே’’ என்று அவர் பிரார்த்தித்த வண்ணம் திருவரங்கத்தில் அரங்கனைக் காண வரும் ஸேவார்த்திகள் ஆலிநாடன் திருமதிலைத்தாண்டி குலசேகரன் திருச்சுற்றில் உள்ள நாழிகை கேட்டான் வாசலுக்கு, ரயில் நிலையங்களில் காணப்படும் Over Bridge போன்றதொரு அமைப்பு உண்டாக்கப்பட்டு அதன்வழியாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இதன் விளைவாக ஸேவார்த்திகள் அனைவரும் திருமங்கையாழ்வார் திருமுடிமேல் கால் வைத்து நடந்து செல்ல உள்ளனர். திருமங்கையாழ்வாரைக் காட்டிலும் அவர் எழுப்பிய திருமதிலே அரங்கனுக்கு அரணாக அமைந்துள்ளது. திருமங்கையாழ்வாருக்கு அமைந்துள்ள பெருமை அவர் எழுப்பிய மதிலுக்கும் உண்டு.



**நான்காம் திருச்சுற்று**

## ஆலிநாடன் திருச்சுற்று



## மூன்றாம் திருச்சுற்று

# குலசேகரன் திருச்சுற்று






**நான்காம் திருச்சுற்று (ஆலிநாடன் திருச்சுற்று):**

8 & 8a திருக்கொட்டாரம். செங்கமல வல்லித் தாயார், (தான்யலக்ஷ்மி) குருகு நாய்ச்சியார் ஆகியோருடைய ஸந்நிதிகள். பாழடைந்த நிலையில் உள்ள நெற்களஞ்சியங்கள். 42. ஸந்நிதிக்குள் செல்லும் ஆர்யபட்டாள் வாசல். 19. பரம பதவாசல்.

**மூன்றாம் திருச்சுற்று (குலசேகரன் திருச்சுற்று):**

3. ஆர்யபட்டாள் வாசல், 9. சரஸ்வதி பண்டாரம், 10. பழைய வாகன அறை, 11. திருநடை மாளிகை, 12. துரை மண்டபம், 14. பரமபதவாசல், 14a. விரஜா நதிக்கிணறு, 15, 16. திருமடைப்பள்ளி. 24, 25. பலிபீடம், கொடிமரம், 26. நாழிகைகேட்டான் வாசல், இரண்டாம் திருச்சுற்றான ராஜமகேந்திரன் திருச்சுற்றுக்குச் செல்லும் வழி.

**4. திருவரங்கம் கோயில் இணை ஆணையரின் 28.5.2012 தேதியிட்ட கடிதத்தின் வழி திருமங்கையாழ்வார் எழுப்பிய திருமதிலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து.**

அருள்மிகு அரங்கநாதஸ்வாமி கோயில் செயல் அலுவலர் தம்முடைய 28.5.2012 தேதியிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்**
**ந.க.எ.ண 3926/1421/டி5/நாள் 28.05.2012.**

**பொருள்:** மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக் கோயில், ஸ்ரீரங்கம்.

**பார்வை:** 1. முதலமைச்சர் தனிப்பிரிவு கடிதம் எண் E/79962/Ty/2012 வாள் 19.03.2012.

------

பார்வையில் காணும் முதலமைச்சர் தனிப்பிரிவில் இருந்து வரப்பெற்ற கடிதத்தில் பக்தர்களின் வசதிக்காக கொட்டாரத்தில் உள்ள காலி இடத்தில் தரை தளத்தில் 3 அறைகளும், முதல் தளத்தில் 3 அறைகளும் கட்டி பக்தர்கள் சுமார் 600 பேர் அமரவும்,

மேற்படி அறையிலிருந்து மேம்பாலம் கட்டி துரைபிரகாரத்தில் இறக்கி நாழிகேட்டான் வழியாக தரிசனம் செய்வதற்கு ஆவண செய்யுமாறு கோரப் பட்டுள்ளது. இப்பொருள் குறித்து தங்களது ஆலோசனையை கலந்து உரையாட 01.06.2012 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் அலுவலகத்திற்கு தாங்கள் தவறாது வருமாறு கேட்டுக் கொண்கிறோம்.

(ஒம்) க. தென்னரசு,
.....இணை ஆணையர்/செயல் அலுவலர், (கூ.பொ.)

உத்தரவுப்படி/அனுப்பப்படுகிறது

மேலாளர்,

பெறுநர்:

1. ஸ்ரீரெங்கநாராயண ஜீயர் சுவாமிகள், வடக்கு உத்திரவீதி, ஸ்ரீரங்கம்.
2. தலைமை அர்ச்சகர், பிரதான ஆலயம்.
3. திரு.சிங்கப்பெருமாள் உத்தமநம்பி.
4. திரு.வேதவியாஸ ரெங்கராஜபட்டர்.
5. திரு.வேதவியாஸ லெக்ஷ்மி நரசிம்மபட்டர்.
6. திரு.பராசர திருவேங்கட பட்டர்.
7. திரு.கோ.க.வா. அப்பன் ரெங்காச்சார் ஸ்வாமிகள்.
8. மிகுதி.

**5. திருக்கோயில் வளாகத்தினுள்அமைந்துள்ள ஒவ்வொரு கல்லும், மண்டபமும் மூலமூர்த்திக்கு அமைந்துள்ள புனிதத் தன்மைக்கு ஒப்பானது.**

1.6.2012 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டோர் இத்தகைய மேம்பாலம் அமைப்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்று தெரிவித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆயினும் அன்று என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை 21.6.2012 அன்று அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலினுள் அமைந்துள்ள விக்ரஹங்கள் மட்டும் புனிதம் படைத்தவை அல்ல. அந்தக் கோயிலினுள் அமைந்துள்ள



ஒவ்வொரு கல்லும் மதிலும் மண்டபமும் புனிதம் கொண்டவை. இதனை கீழ்க்கண்ட ஸரஸ்வதி நதி ஆய்வாளர் திரு கல்யாண ராமனின் Blog குறிப்பு தெளிவுபடுத்துகிறது.

**Excerpts from Dr. Nagasamy's article:**

" As long as even a single slab belonging to the ancient ruined temple is found in the site, the temple continues to exist in the eye of law and has its right to claim its possession was the historic judgment delivered by the London High Court with the reference to an ancient Hindu temple that was ruined and remained with out worship for long. The Appeal Court in London presided over by three senior judges, to which the case was taken upheld this judgment, but the case was taken to the Privy Council and the apex court also upheld the judgment. Thus three Foreign courts that command greatest respect in the world of judiciary held that the presence of even one slab in the site empowers the ancient temple to be treated as an existing entity in the eye of law, irrespective of whether the temple was in ruins or was not under worship. This decision of the London high Court was delivered hardly fifteen years ago when the then Congress Government headed by late Rajiv Gandhi was Prime Minister of India, who enthusiastically supported and got the case filed in the London high Court in the now famous London Nataraja case. The present writer appeared in the case as an Expert witness in that case on behalf of Government of India.

One of the Pivotal arguments in the case advanced by the Indian Government was once a temple; it remains always a temple. The history of the case is as follows.

A group of Bronze Idols including a Nataraja, was found in a land behind a ruined Chola temple at Pattur, in Tanjore District. The idols were found by a laborer who sold the Nataraja to an antique dealer and the image was smuggled out of India and was caught in London by the Scotland Yard Police. The Government of India filed a case in the London High Court claiming the Nataraja as a property of the ruined temple.

Among the various legal points raised in the case, a few are relevant. What constitutes the Hindu temple? Is it the structure, or the space around it or the enshrined image? When the temple has been ruined and worship ceased, whether it could claim ownership? The court agreed that not only the building and the image but also the consecrated space around the religious building constitutes the temple. The temple ritual treatises mention various causes of ruin such as vegetation on the buildings, fire, floods, earthquakes and the like besides destructions by enemy during invasion. Having examined the ritual and historical position, the court came to the decision so long as even one stone slab belonging to the ancient temple is found in the site, the temple continues to exist in the eye of law. Any ruined temple could be brought back to worship at any point of time by purificatory rites. to be certain that the vexed question of this case seems to be nearing an end. "

The Court here means the London Court. But what is important here for us is that the Government of India took a stand in London Courts was " once a temple it remains always a temple" and the observation "all consecrated place in and around the temple are sacred". These points will help us in many cases.

**6. உள்கட்டமைப்புகளை மாற்றி அமைத்திட அறநிலையத் துறைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.**

திருக்கேயில் நிர்வாகமும், இவ்வாறு மேம்பாலம் கட்டலாம் என்று இசைவுத்தெரிவுத்துள்ள ஸ்ரீரங்கத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

1. ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்கள் கூடும் திருமலையில் 'அவாவறச்சூழ்ந்தான்' திருக்கோபுரத்திற்கு உட்பட்ட பகுதியில் தடுப்புக்களைத்தவிர வேறு எந்தவித கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்படவில்லை. அதுபோலத்தான் நான்முக கோபுர வாசலுக்கு உட்பட்டப்பகுதியில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.

2. திருமங்கையாழ்வார் எவ்வளவு சிறப்புடையவராக கொள்ளப்படுகிறாரோ அத்துணைச் சிறப்புக் கொண்டது அவர் கட்டிய நெடிதுயர்ந்த மதிலுமாகும்.



3. திருக்கோயிலின் மேற்குப் பகுதியிலிருந்து எந்த நுழை வாயிலும் இல்லையென்பதை அனைவரும் அறிவர். அதேபோல் மேற்குப் பக்கமாக ஸ்ரீரங்கநாதரைச் சென்று தரிசிப்பதும் கூடாது. கோயிலின் மேற்குப் பகுதியை 'துரியோதனன்' பக்கமென்று நம் பூர்வர்கள் தாழ்ந்த நிலையில் கொண்டுள்ளனர். ஆலிநாடன் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் ஒரு திட்டி வாசல் அமைத்தால் மக்கள் சுலபமாக குலசேகரன் திருச்சுற்றை சென்றடையலாம். ஏன் இதை உள்ளூர் ஸ்ரீவைஷ்ணவர்கள் முன்வைக்கவில்லை. அப்போது அவ்வாறு வாசல் அமைப்பதற்கு ஆகமத்தில் இடமில்லையென்று உரத்த குரலில் ஒலி எழுப்பிடுவார்கள் ஸ்ரீரங்கத்து ஸ்ரீவைஷ்ணவர் கள். அதே கொள்கையின் அடிப்படையில் கொட்டாரத்திலிருந்து குலசேகரன் திருச்சுற்றிற்கு மேம்பாலம் அமைப்பதும் ஆகம விரோதச் செயலாகும்.

மேலும் வயது முதிர்ந்தவர்கள் உயரமான படிக்கட்டுகளில் ஏறி இறங்க வேண்டும். அரங்கனைத் தரிசிக்கச் செல்பவர்கள் தெற்குப் பகுதி யிலிருந்து ஆர்யபட்டாள் வாசலை கடந்து சென்றுதான் தரிசிக்க வேண்டும். ஏனெனில் திருமாலை முதற் பாட்டில் தொண்டரடிப் பொடியாழ்வார் கூறியதுபோல் 'நமன் தமர் தலைகள் மீது கால் வைத்துச் செல்வதுபோல்' ஆர்யபட்டாள் வாயிற்படியில் பன்னிரண்டு ராசிகள் மற்றும் நவக்கிரஹங்கள் அமைந்துள்ளன. அரங்கனைச் சென்றுசேவிப்போர், நவக்கிரஹங் களையும் பன்னிரண்டு ராசிகள் படுத்தும் துன்பங்களையும் பொருட்படுத்த தேவையில்லை என்று பொருளாகும். உங்கள் மேம்பாலத்தின் மீது நடந்து செல்பவர்கள் இந்த உறுதியினை எவ்வாறு கொள்ள முடியும்?

**7. சில ஆயிரம் ரூபாய்கள் செலவழித்து கோயிலின் புனிதத்தைக் காற்றிலே பறக்க விடாமல் நீங்கள் நினைத்ததை செய்து முடித்திடலாம்.**

கோடிக்கணக்கான ரூபாய்களை வீணாகச் செலவழித் திடாமல், சில ஆயிரம் ரூபாய்களில் யாத்திரிகர்கள் அமைதியாய் சென்று ஸேவிப்பதற்கு ஓர் வழியுண்டு. அதாவது ஆர்யபட்டாள் வாசல் வழியாக ஒற்றை வரிசை முறையில் இடது புறமாகச் சென்று குலசேகரன் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் சமன் செய்யப் பட்டுள்ள பண்டைய சரஸ்வதி பண்டாரம் மற்றும் வாகன

அறைகளில் உட்கார வைக்கலாம். (இந்தப் பகுதியில் ஆயிரம் நபர்கள் உட்காரலாம்.) அவர்களை விரஜா நதிக் கிணறு பெரிய திருமடைப்பள்ளி வழியாக ஒற்றை வரிசையில் கொண்டு சென்று, நாழிகைகேட்டான் வாசலின் வழியாக உள்ளே அழைத்துச் செல்லலாம். இந்த முறையைப் பின்பற்றினால் ஆகம மீறலும் இல்லை. பண விரயமும் இல்லை.

**8. மேம்பாலம் அமைப்பது சட்டவிதிகளுக்கு புறம்பானது. 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்ற பழமொழியை அதிகாரிகள் நினைவில் கொள்ள வேண்டும்.**

இல்லை! இல்லை!! இல்லை!!! 'நாங்கள் நினைப்பதை செய்தே தீருவோம்' என்றால் திருக்கடன் மல்லை போன்று மக்கள் ஒன்றுகூடி போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும். மேலும் சட்ட ரீதியாகவும் நீங்கள் மேம்பாலம் அமைக்கும் முயற்சியை கைக்கொள்ள முடியாது. அதற்குக் காரணம் 1947ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

Extracts from the Rules under the Tamil Nadu Temple Entry Authorisation Act, 1947
(G.O.Ms.No.164, FIRKA DEVELOPMENT, DATED THE 23RD MARCH 1948)

5. No Person shall......
(iii) do any act which is opposed to custom or established usage of the temple or would tend to derogate from the purity and cleanliness of the temple and its presmises.

8. The temple buildings and premised shall not be used for purposes not connected with or arising from the worship, usages and observations of such temples.

9. No Executive Authority of a temple shall be entitled to introduce innovations concerning the time, **place** or mode of worship in the temple which might prejudicially affect the rights and facilities which worshippers had generally exercised in respect of those matters before the passing of the (Tamil Nadu) Temple Entry Authorization Act, 1947 {(Tamil Nadu) Act V of 1947}.



ஒரு கோயிலில் உள்ள வழிபாட்டு முறைகளையோ, உத்ஸவங்களையோ, திருவிழாக்களையோ, பூஜை முறைகளை நிறுத்தவோ , உள்கட்டமைப்புகளை சிற்ப, ஆகம சாஸ்திரங்களுக்கு விரோதமாக மாற்றவோ, புதுவழி முறைகளை அறிமுகப்படுத்தவோ, அறங்காவலர்களுக்கோ, அறக்கட்டளைத்துறையினருக்கோ, அரசிற்கோ எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. இவை யாவும் கோயிலில் 1947ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்து வந்தது போல் தொடர வேண்டும். எவ்வித சமய உரிமைகளிலும், வழிபாட்டு உரிமைகளிலும், இவ்வறக்கட்டளைத் துறையோ, அரசோ எக்காலத்திலும் **எந்தவித குறுக்கீடுகளும் செய்யக் கூடாது.** ***(ஆனால் இன்று உட்துறை விவகாரங்களில் தலையிடுவது தான் தன்னுடைய தலையாய கடமையாக இத்துறை கொண்டுள்ளது. இது இந்த நாட்டில் வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் நாட்டை அடிமைப்படுத்திய செயலுக்கு ஒப்பாகும். மேலும் இந்த அநியாயச் செயலுக்கு நெய்யை வார்ப்பவர்கள் நம்மவர்களே.***

***ஸ்தலத்தார்கள் என்பவர்கள் மேலைப்படியில் மரியாதைகளைப் பெற்றிடும் சிறப்புரிமை பெற்ற கூட்டத்தார் மட்டுமல்ல. திருக்கோயிலின் நீண்டகால மரபுகளையும் பாரம்பரியங்களையும், பழக்கவழக்கங்களையும் பாதுகாக்க வேண்டியவர்கள். ஆனால் இன்று இவர்கள் ஓர் ஸ்தானத்தை அலங்கரிக்கும் நபர்களாக விளங்குகின்றனர். ஏன் இந்த அவல நிலை? சென்ற 50 ஆண்டுகளில் நம்பெருமாளுக்கு ஏற்பட்ட ஆபத்தை இவர்கள் தடுத்து நிறுத்த முன்வந்துள்ளார்களா? இவர்களின் ஆக்கப்பூர்வமான பணிதான் என்ன? தங்களுக்குள் பரஸ்பர விரோதம் பாராட்டிக் கொண்டு ஒருவருடைய மரியாதையை மற்றொருவர் ஏதோ ஒரு முறையற்ற வழியை பின்பற்றி இல்லையெனச் செய்வதே இவர்களுடைய பணியாக அமைந்துள்ளது. இவர்கள் ஸ்தலத்தார்களாகத் தொடர்வதற்கு இனியும் எந்த உரிமையும் இல்லை. இது குறித்து விரைவில் வழக்கு தொடரப்பட உள்ளது. ஏனெனில் ஸ்ரீரங்கத்தில் ஸ்தலத்தார்களால் நம்பெருமாளுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் தவிர்க்கப்படுவதில்லை. அவர்களிடம் சுயநலமே ஓங்கி நிற்கிறது. இவ்வாறு கூறுவதால் எந்த அபச்சாரமும் ஏற்படப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம்போலே ஆன்மீக விடுதலைக்குத் தற்போது ஒரு போராட்டம் நடைபெற வேண்டும். கோயில்களை அரசாங்கத்தின் அசுரப்பிடியில் இருந்து என்று மீட்கிறோமோ அன்றே நாம் உண்மையான ஆன்மீக சுதந்திரத்தை அடைந்தோம் என்று கொண்டாட முடியும்.)***

ஒரு கோயிலில், அதன் வழிபாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு தொடர்பில்லாத கட்டிடங்களை கோயிலில் எழுப்பு வதோ கட்டுவதோ கூடாது.

**9. தக்காரும் செயல் அலுவலரும் ஒரே நபர் எவ்வாறு செயல்பட முடியும். அதன் விளைவு என்ன?**

அறங்காவலர்கள் பதவி காலியாக இருக்கும்போது நியமிக்கப்படும் தக்கார் ஒரு வருடத்திற்கு மேல் நியமிக்கப்பட கூடாது. இதில் ஒரு பெரிய அத்து மீறலைக் கூசாமல் செய்து வருகிறது அறக்கட்டளைத்துறை. தன் துறை அதிகாரிகளையே 'தக்காராக' பல கோயில்களுக்கு நியமனம் செய்து வருகிறது. இதை விட பெரிய அநியாயம் என்னவென்றால் அந்த கோயில் செயல் அலுவலரே அந்தக் கோயிலுக்குத் தக்காராக நியமிக்கப் படுவது தான். **'திருடனும் தலையாரியும் ஒன்றானால் விடிய விடியக் கொள்ளை அடிக்கலாம்' என்ற பழமொழியை நன்கறிந்து வைத்திருக்கும் துறை அறக்கட்டளைத் துறை தான்.**

திருவரங் கத்தில் சென்ற ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட அறங்காவலர்குழு கலைக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் புதிய அறங்காவலர்குழு நியமிக்கப்படவில்லை. மாறாகச் செயல் அலுவலரே தக்காராக நியமிக்கப்பட்டு உள்ளார். ஆனால் தக்கார் என்பவராக அந்த சமயத்தைச் சார்ந்த மக்களின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கபட்டிருக்க வேண்டும். அவர் நேர்மையை கடைபிடிப்பவரானால் இவ்வாறு மேம்பாலம் கட்டுவது ஆகம விரோத செயல் என்று கூறியி ருக்கலாம். ஆனால் திருவரங்கத்தில் செயல் அலுவலரும், தக்காரும் ஒருவராகவே இருப்பதால் இதற்கு வழியில்லை.

மக்களிடையே விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்த வேண்டி யது இன்றையத் தேவைகளில் ஒன்றாகும். ஒரு போராட்டம் என்றால் ''நமக்கேன் வம்பு'' என்று ஒதுங்கி நிற்பவர்களே 99 விழுக்காடு 'பக்தர்கள்'. அதிலும் ப்ராஹ்மண சமூகத்தைச் சார்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அத்துமீறல்களுக்கு துணைபோவது மட்டுமல் லாமல் **'எல்லாம் எம்பெருமான் ஸங்கல்பம்'** என்று தப்பித்துக் கொள்ளும் எண்ணங் கொண்டவர்களாய் காணப்படுகின்றனர். இத்தகைய சூழலில் கீழ்க்கண்ட ஓர் பத்திரிகைச் செய்தி ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.



**தினமலர் (சேலம் பதிப்பு) 4.6.2012 நாளிதழில் வெளிவந்துள்ள விளம்பரம்.**

**நசியனூர், காளமங்கலம், அயோத்தியாபட்டணம் கோயில் பக்தர்களுக்கு முக்கிய அறிவிப்பு.**

எனது கட்சிக்காரர்கள், ஆலய வழிபடுவோர் சங்கம் (பதிவு பெற்றது), 2, லேக் ஏரியா முதல்தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034, அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிடுகிறேன்.

இந்துசமய அறநிலையத்துறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டு வரும் ஈரோடு மாவட்டம் நசியனூர் முத்துமரகதவல்லி சமேத ஸ்ரீ மூவேந்தர் ஈஸ்வரசுவாமி கோயிலும் நஞ்சை காளமங்கலம் குலவிளக்கம்மன் கோயிலும் கடந்த இரண்டு மூன்று வருடங்களில் கோயில் திருப்பணி என்ற பெயரில் கோயில் சிதைப்புகளும், ஆகம விரோத புணரமைப்புகள் நடந்தும், நடைபெற்றும் வருகின்றன.

**ஈரோடு, நசியனூர் ஈஸ்வரன் கோயிலில்,** மிகவும் நல்ல நிலையில் இருந்த பதினாறுகால் மண்டபம் இடித்து விற்கப்பட் டுள்ளது. கோயிலில் அறநிலையதுறையின் தடைகளை மீறி சான்ட் பிளாஸ்டிங் (Sand blasting) எனப்படும் தொழில்நுட்பம் மூலம் புராதனமிக்க கோயிலின் கல்வெட்டுகளும், சுவர்களும் சிதைக்கப் பட்டுள்ளன. புராதன சின்னங்களைப் பாதுகாக்கும் சட்டங்களை மீறி கோயிலை இடித்து விற்றவர்கள் மீது CB-CID வழக்கு பதிவு செய்து கொள்ள கோரியும், ஆகம விரோத நடவடிக்கையும் புணரமைப்பு என்ற பெயரில் செய்யப்பட்ட செயல்களை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் RPAD B RT420020685IN dated 15.03.12), கோவை இந்துசமய அறநிலையத்துறையின் இணை ஆணையரிடமும் RPAD B RT420020570IN dated 15.03.12) புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**காளமங்கலம் குலவிளக்கம்மன் கோயிலில்,** கோயில் பாரம்பரியத்தை மீறி ஆகமவிரோத கும்பாபிஷேகம் செய்தும், கோயிலின் கிழக்கு ராஜகோபுர கதவில் பிற மதத்தினர், கடவுள் நம்பிக்கை இல்லாத தலைவர்கள் மற்றும் பல பிரபல மனிதர்களின்

புடைப்பு சிற்பங்களை செதுக்கியும், கோயிலின் ஆகமவிதிகளை மீறி கோயில் கோபுரத்தின் மேல்கூரை, கோயில் கோபுரங்களை மறைத்து கூடாரம் என பல அத்துமீறல்கள் நடைபெற்றுள்ளன. புராதனமிக்க காளமங்கலம் மத்யபுரீஸ்வரர், பெருமாள் கோயில் களை தெல்லியல் நடைமுறைகளை மீறி ''புதிதாக நிர்மாணித்தல்'' என்று கூறி வரைபடம் வைத்தல், பணம் வசூல் செய்தல் போன்ற கோயில் விரோத நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை பற்றியும் ஈரோடு மாவட்ட கலெக்டரிடமும் (EM/12/01248 dated 9.4.12), இந்து சமயத் துறை இணை ஆணையரிடமும் (RPAD A RT418268221 IN dated 9.4.12) புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**சேலம் அயோத்தியாபட்டணம்** சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக திகழும் கோதண்டராமர் சந்நிதியில் புனரமைப்பு என்ற பெயரில் நன்றாக இருக்கும் பலிபீடங்களை இடித்தும், சான்ட் பிலாஸ்டிங் செய்து கல்வெட்டுகளை சிதைத்தும், பல சிற்பங்களை உடைத்தும், ஆகம விதிகளுக்கு புறம்பாக தரையில் வழுக்கும் பளிங்கு கற்களை ஒட்டியும் கோயில் சிதைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புகார்களை விரைவில் சேலம் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும் இவை போன்ற பணம் அதிகம் புழங்கும் பல கோயில்களில் திருப்பணி என்ற பெயரில் கோயிலின் சாநித்யத் தையும், தொன்மையையும், புராதனத்தையும் அழிக்கும் வகையில் அறிந்தும் (வேண்டுமென்றேயும்), அறியாமலும் (யதார்த்தமாக வும்) திருப்பணிக் குழுக்களும், இந்து சமய அறநிலையத்துறையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கோயில் திருப்பணிக்கு நன்கொடை கொடுக்கும் அன்பர்கள் மேற்கண்ட கோயில் விரோதச் செயல்கள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறிந்தபின் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கோயில் விரோத நடவடிக்கைகளுக்கு துணைபோய் பாவத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டாம்.

மேற்கண்ட கோயில்களில் நடைபெற்றன / பெறுவன போல் எங்கேனும் கோயில்களில் நடைபெற்றிருந்தால் அவை பற்றி தக்க சான்றுகளுடன் புகார்களை கீழ்க்கண்ட எங்கள் இ-மெயிலுக்கு (templesws@gmail.com) தெரிவிக்குமாறு பக்தர்களை கேட்டுக் கொள்கிறோம். சரியான புகார்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க



வழிவகை செய்யப்படும். கோயிலின் பழமையையும், புராதனத் தையும், சாந்நித்யத்தையும் பாதுகாப்பது இந்திய அரசியல் சாசனப்படி அவசியமானதாகும்.

இப்படிக்கு,
இரத்தின அசோகன்,
வழக்கறிஞர்,
6-C,இலக்ஷ்மி பவன், 609 அண்ணாசாலை,
சென்னை - 600 006.

சென்னை,
02.06.2012.

(திருக்கோயில் கதவுகளில் புடைப்புச் சிற்பங்களாக அண்ணாத்துரையும், பெரியாரும், அன்னை தெரசாவும் இடம் பெற்றிருந்தனர்.கலைவேலைப்பாடுமிக்க தூண்கள் விற்கப்படு வதற்கான ஏற்பாடுகள் முறியடிக்கப்பட்டன. இதுபோன்ற பல்வேறு அத்துமீறல்கள் அரசியல் பலத்தோடு (ராவணன் ஆண்டாலும் ராமன் ஆண்டாலும் இத்தகைய கொள்ளைகளும், அபகரிப்புக் களும், அத்து மீறல்களும் ஆகமவிரோதச் செயல்களும் நடை பெற்றுக் கொண்டே தான் இருக்கும். தினந்தோறும் பல இடங்களில் தீ விபத்து ஏற்பட்டு, காடுகள் பற்றி எரிகின்றன, நிலநடுக்கங்கள் நிகழ்கின்றன, இயற்கையின் சீற்றத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகின்றது. அணைகளிலிருந்து நீர் திறந்துவிடும் அதிகாரம் படைத்த முதலமைச்சர் மழை பெய்விப்பதற்கு வருண பகவானுக்கு ஆணையிடும் அதிகாரம் படைத்தவராக விளங்குவதில்லை. இதற்கெல்லாம் அடிப்படை திருக்கோயில்களில் அரங்கேறும் இத்தகைய ஆகம மீறல்களே இயற்கைச் சீற்றங்களுக்குக் காரணங்களாகும். தினந்தோறும் அரங்கனுக்கு மதிய உணவு (பெரிய அவசரம்) மதியம் 2.30 மணிக்கு படைக்கபடுமானால் அரிசி விலை ஏன் உயராது. மேட்டூர் அணையிலே எவ்வாறு நீர் நிரம்பும். சிந்தித்தால் விடை கிடைக்கும்.

**10. ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமை என்ன? தங்கத்தேருக்கு நேர்ந்த கதியே இந்த மேம்பாலத்திற்கும் அமைய வேண்டும்.**

திருக்கோயில் நிர்வாகம் கொட்டாரத்திலிருந்து திருமங்கை யாழ்வார் கட்டிய மதிலின்மேல் மேம்பாலம் அமைக்கும் முயற்சியை உடனடியாகக் கைவிட வேண்டும். இதற்கு ஸ்தலத்தார்களோ

அர்ச்சகர்களோ ஒப்புதல் அளித்திருந்தாலும் அது செல்லாது. ஏனெனில் அரங்கன் இந்த அண்டத்தில் உள்ளோரின் சொத்தாகும். இந்த அத்துமீறிய செயலுக்கு ஸ்ரீரங்கத்திலுள்ள அர்ச்சகப்பெரு மக்கள், ஸ்தலத்தார்கள், நாடெங்குமுள்ள வித்வான்கள், ப்ராஹ்மண ஸ்ரீவைஷ்ணவர்கள், பாகவதர்கள் என்று கொண்டாடப்படும் ப்ராஹ்மணர் அல்லாத ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருமித்த குரலில் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நம்பெருமாளுக்குத் தங்கத்தேர் அமைக்க ஒரு கொடையாளி முன்வந்தபோது ஆரம்ப கட்டத்தில் தங்கத்தேர் அமைப்பதில் எந்தத் தவறுமில்லை என்று ஒரு சில அர்ச்சகர்களும், ஸ்தலத்தார்களும் கையெழுதிட்டுக் கொடுத்தபோதும், ஹிட்லர் என்ற திருமலை ஐயங்காரால் ஆரம்பக் கட்டத்தில் ஒப்புக் கொண்டபோதிலும் அந்த முயற்சி பலருடைய வேண்டுகோளுக்கிணங்க கைவிடப்பட்டது.

நிர்வாகத்தை எதிர்த்து நாங்கள் செயல்பட மாட்டோம். எங்களுக்கு ‘கைங்கர்யமே ப்ரதானம்’ என்பதெல்லாம் போலி வாதங்களாகும். இவர்கள் அனைவரும் 'Yes Boss' கொள்கையைப் பின்பற்றுவர்கள். சுயநலவாதிகள். அரங்கனுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும் எங்கள் உரிமைக்கு பங்கம் வரக்கூடாது என்ற எண்ணங் கொண்டவர்கள். அவரவர்கள் தங்களுக்குள்ள உரிமை களுக்கு நிர்வாகத்தால் ஊறு விளைவிக்கப்படும் போது எப்படி யெல்லாம் தங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்தி வருகி றார்கள் என்பதை அனைவரும் அறிவர். ஆனால் நம்பெருமாளுக்கு ஓர் ஆபத்து என்றால் பிள்ளைலோகாசார்யர் வைபவத்தை பரக்கப் பேசும் நம்மவர்கள் வாய்மூடி மௌனியாக மாறிவிடுகிறார்கள். ஏன் இந்த இரட்டை வேடம். படிப்பது திருவாய்மொழி. இடிப்பது பெருமாள் கோயில் என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகிறது. கீழ்க்கண்ட ஸ்ரீவசனபூஷணம் நூற்பா 258ற்கு பொருள் என்ன என்பதை ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் மற்றும் மேடையில் ஸ்ரீவசனபூஷணத்தின் பெருமையை பரக்கப்பேசும் பேரறிஞர்களும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**‘‘உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணும் உறக்கமுமின்றிக்கே இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க் கும் யாத்ரையாக வேணும்.’’**

***

# பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும்

இதழ் 157இன் தொடர்ச்சி. ஆசிரியர்: மு. அருணாசலம்பிள்ளை.

இவ்விரண்டும் சிவபிரானது அட்ட மூர்த்தங்களைக் கூறும். இரண்டில் ஒன்று தொகுப்பாசிரியர் செய்ததென்றும், மற்றொன்று இந்திர காளியார் செய்ததென்றும் கருத இடமுண்டு; இரண்டும் ஒரே கருத்தைத் தெரிவிப்பன. இவ்வாசிரியர் நாமகளிடத்து ஈடுபாடு மிக்கவரென்பதை இவர் பாயிரமாக நாமகள் வாழ்த்துக் கூறுவதால் அறியலாம்.

*சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி*
*சிந்தையில் வைத்து முன்னோர் பொருள்நெறி*
*கூட்டி யுரைப்பல் பாட்டியல் மரபே.*

மேலும் இவர் மங்கலச் சொல் கூறுமிடத்து (139 மிகைச் சூத்திரம்),

*எழுத்தின் கிழத்தி நாமகள் ஆதலால்*
*பெண்ணெழுத் தல்லது முன்வைத் துரையார்.*

எனக் கூறுவதாலும் அறிகிறோம். பண்டைய இலக்கண நூல்களில் நாமகளுக்கு வாழ்த்துக் கூறித் தொடங்குவது ஒரு மரபாயிருந்தமை[1] இங்கு குறிப்பிடத் தக்கது.

இந் நூலுள் பாயிரமும் 360 சூத்திரங்களும் உள்ளன. எழுத்தியல் 96; சொல்லியல் 59; இனவியல் 205. இவற்றுள் ஒன்று வெண்பா (205); பதினொன்று கல்லாடனார் பெயரில் வந்துள்ள குறட் பாக்கள் (61-71). ஏனைய நூற்பாக்கள். ஒரே பொருளைப் பற்றிப் பலர் செய்த பாடல்கள் சேர்ந்துள்ளன; பாடினோர் பெயர்

தொகுப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில பிழை யாகலாம், சில விடுபட்டிருக்கலாம் என்று முன் காட்டினோம்; இறுதி 26 சூத்திரங்களில் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை; ஆசிரியரே செய்தவற்றுள் இவையும் அடங்கலாம்.

**பிரபந்தங்கள்**

பன்னிரு பாட்டியல் சில பிரபந்தங்களைப் பற்றிக் கூறும் கருத்துக்களைச் சிறிது அறியலாம். அது கூறும் பல சிறப்பில்லாத பிரபந்த வகைகள் இக்காலத்து வழங்கவில்லை, இலக்கிய வரலாற்றில் பெயர் கேட்டது மில்லை - சாதகம், பல்சந்தமாலை, ஒலியந்தாதி, யானைத் தொழில் முதலாயின. பிள்ளைத் தமிழ் இங்கு பிள்ளைப் பாட்டு எனப் பெறுகிறது. உலாவைக் கூறுமிடத்து இவர் பெண்பாலுக்கு ஏழு பருவமும் வயதும் கூறியது போல, ஆண் பாலுக்கும் கூறுகிறார். தலைவன் உலா வருங்கால் ஏழு பருவ மகளிரும் கண்டு காமுறுகிறார்கள் என்பது உலாவிற் போந்த பொருளாதலால், பெண்ணுக்குப் பருவமும் வயதும் உணர்த்தல் பொருத்தமே. ஆண்பாலைக் குறித்து இவ்வாறு எந்த வரலாறும் அமைய முடியாது. பெண் உலா வருவதும் ஆடவர் பார்த்துக் காமுறுவதும், தமிழர் வாழ்க்கை நெறிக்கும் இலக்கிய நெறிக்கும் மாறானது. எனவே, இவர் ஏன் ஆண்பாற்பருவம் கூறினார் (228-235) என்பது விளங்கவில்லை. இவர் குறிப்பிடும் பருவங்கள் - பாலன் 7; மீளி 10; மறவோன் 14; திறலோன் 15; காளை 16; விடலை 30 வரை; முது மகன் முப்பதுக்கு மேல். இது வழக்கில் எங்கும் இல்லாத ஓர் இலக்கணம்.

தசாங்கம் கூறும் 100 பாடல் கொண்ட சின்னப்பூ என்ற பிரபந்தம் எங்குமே வழக்கில் இல்லை. இந்நூல் தத்துவராயருடைய பிரபந்தத் திரட்டில் மட்டும் அபூர்வமாய் ஒரு தனிப் பிரபந்தமாய்க் காணப்படுகிறது - 15ஆம் நூற்றாண்டு. மிகவும் சிப்பான பிற்காலப் பிரபந்தமாகிய தூது இங்கு சொல்லப்பெறவில்லை. தனியான முதல் தூதுப் பிரபந்தம் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உமாபதி பாடிய சாத்திர நூலாகிய நெஞ்சுவிடு தூதாகும். இப்பாட்டியல் தொகுத்தார் காலத்தில் தூதுப் பிரபந்தம் தனியே எழாமையால் இவரால் குறிப்பிடவில்லைபோலும். இதனாலேயே ஏனைய பிரபந்தங்கள் இருந்து, இத்தொகுப்பாளர் அவற்றை



அறிந்து குறிப்பிட்டார் என்று நாம் கருதவேண்டும். ஆனால் எடுத்துக்காட்டே இல்லாத சின்னப் பூவை இவர் குறிப்பிடுவதால் ஒருகால் இவர் காலத்துக்கு முன் சின்னப்பூ இருந்து பின்னர் வழக்கு இழந்திருக்கக் கூடும்.

இவர் பரணியிலக்கணம் கூறியிருப்பது, இருபதாம் நூற்றாண்டுக்குரிய பரிபாஷையில் சொன்னால் ஒரு புதிராக இருக்கிறது. இராசராசன் காலத்திலெல்லாம், பரணிப் பிரபந்தம் எழுந்ததாக வரலாறு இல்லை. முதற் குலோத்துங்க சோழன் (1070 - 1122) மீது கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியே இன்று வழக்கிலுள்ள பரணிப் பிரபந்தங் களில் பழமையானது. அதற்கு முன்னும் இரு பரணிப் பிரபந்தங்கள் பாடப்பெற்றிருந்தன: கொப்பத்துப் பரணி (கி.பி. 1055), கூடல் சங்கமத்துப் பரணி (கி.பி. 1065) என்பன. எனவே இவற்றுக்கு நெடுங்காலம் முன்னமே இப்பாட்டியலாசிரியர் 4 சூத்திரங்களில் 23 வரிகளில் பரணிப் பிரபந்த இலக்கணத்தை நன்கு விரித்தெழுதி யிருப்பது எங்ஙனம் நடைபெறும் என்பது கேள்வி. இவர் செய்த இலக்கணத்தைப் பார்த்துப் பின்னால் இதன்படி இலக்கியம் செய்தனர் என்பது கொள்ளவியலாத கூற்று. ஆகவே, ஒருகால் இப்பிரபந்தம் பற்றிய சூத்திரங்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட னவோ என்ற ஐயம் எழுகிறது; அல்லது 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னமே ஏதேனும் பரணி இருந்திருக்கவேண்டும், இன்று கிடைக்கவில்லை.

*மடன்மாப் பெண்டிர் ஏறார், ஏறுவர்*
*கடவுள் தலைவ ராய்வருங் காலே*

என்னும் இலக்கணம் திருமங்கையாழ்வார் பாடிய இரு திருமடற் பிரபந்தங்களையும் அறிந்து எழுதியது என்பது தெளிவு. அரி பிறப்பு என்ற ஒரு பிரபந்தம் - திருமாலின் தசாவதாரங்களையும் சொல்லிப் பரவி, பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி அகவல் விருத்தம் ஒருபது இயற்றுதல்: இத்தகைய நூலெதுவும் இல்லை; பிற்காலப் பாட்டியல்கள் இதைத் தசப்பிராதுற்பவம் எனக் கூறும். தாண்டகம் அறுசீரிலும் எண் சீரிலும் வரும் எனப் பாட்டியல் கூறுகிறது. அப்பர் திருத்தாண்டகம் எண் சீர் மட்டுமே. திருமங்கையாழ்வார் நெடுந்தாண்டகம் எண் சீர், குறுந்தாண்டகம்

அறுசீர். அப்பர் பாடலுள் அறுசீரில் வரும் விருத்தங்கள் நேரிசை என்று பெயர் பெற்றுள்ளன.

துயிலெடை நிலை என ஒரு பிரபந்தம் சொல்லப்பட்டுள்ளது. 'மன்னன் முன்னர் விடியல் எல்லையில், தந்ததிறையரும், தாராத்திறையரும் நின்மொழி கேட்டியங்க வேண்டினார், துயிலெழுக என விளம்புதல்' என்று கூறும். இதுவே திருப்பள்ளியெழுச்சி; 'எது எமைப் பணி கொளுமாறு அது கேட்போம் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே' என்று மாணிக்கவாசகர் பாடும் திருப்பள்ளியெழுச்சி இக்கருத்துக்கு மூலமாயிருக்கலாம்; யாண்டு நிலை என்று சொல்லப்பட்ட பிரபந்தம் (328) இன்றைய பல்லாண்டு போலும்:

*வையக மன்னவன் மன்னுக பல்யாண்டு*
*எய்துக என்பது யாண்டுநிலை யாகும்.*

''இது பெரும்பான்மை நேரிசை வெண்பாவாற் பாடப்பெறும், சிறுபான்மை எல்லாப் பாவானும் பாடப் பெறும்'' - இவ்வாறு பாடிய வழக்கு இல்லை. பெரியாழ்வார் சேந்தனார் இருவர் பாடிய பல்லாண்டும் விருத்தப்பாக்களே. உழத்திப் பாட்டு குறத்திப் பாட்டு என்ற இரண்டும், பிற்காலத்தில் பள்ளு, குறவஞ்சி என்று விரிந்த நாடகப் பண்பமைந்த பிரபந்தங்களாக 17ஆம் நூற்றாண்டு தொடங்கி வளர்ந்தன. ஆசிரியர் காலத்தில் இவற்றுக்கு இலக்கியம் இருந்ததில்லை. இவ்விரண்டையும் ஊன்றி நோக்கும் போது, பரணிப் பிரபந்தத்துக்குக் குறிப்பிட்ட ஐயம் இங்கும் எழுகிறது. பன்னிரு பாட்டியல் இவற்றுக்கு விரிவான இலக்கணம் சொல்லுகிறது. அந்நூல் தோன்றிய காலத்தில் இவ்வகைப் பிரபந்தங்கள் இல்லை. பிற்காலத்தில் அவ்விலக்கணத்துக்கு முழுமையும் பொருந்துகின்ற விரிவான பிரபந்த வகைகள் தோன்றியிருக்கின்றன. இலக்கணத்தை வைத்து இலக்கியம் செய்தல் என்று கூறுவது பொருந்தாது. இவ்விலக்கியங்கள் தோன்றிய பின் இலக்கணம் செய்யப் பெற்றதென்றால், பன்னிரு பாட்டியலில் காணப்படும் சூத்திரங்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றன என்று தான் கருதவேண்டும். இக்கருத்து பின்னும் ஆராய்தற்குரியது.

(தொடரும்)



# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

*இதழ் 157இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**விளக்கரை:**

**சாரமற்றதான புறமதங்களாகிற சாத்திரமும், வேதத்தை விவரித்திடும் முன்பாகத்தை கூறும் குறைவுடைய சாத்திரமும், சாரமான பின்பாகத்தில் கூறும் பரந்து சொல்லுகிற சாத்திரங்களை எல்லாம் விட்டு மிக்க சாரமான விஷ்ணு காயத்ரியில் முதலிலே சொல்லப்பெற்ற மிகவும் அதிக சாரமான பிறவிக் கடலைத் தாண்டுவிக்கும் பெரிய திருமந்திரத்தை உபதேசித்து, அந்த மந்திரங்களில் சொல்லியுள்ள ஒழுக்கங் களைக் கடைப்பிடிக்கச் செய்து, ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இவற்றை நூல் வடிவமாக்கித் தாம் ஆசரித்தும் போந்தவைகள் ஒன்றும் தப்பாதபடி தானும் ஆசரித்துத் தன்னைப் பற்றிய சீடனையும் ஆசரிக்கச் செய்தாலன்றோ ஆசாரியன் சீடனாகிற இருவருக்கும் மோட்சம் கிடைப்பது "கெட்டவர்கள் தொடர்புடைய குரு மந்திர தேவதைகள் நல்லோர்க்கு விடத் தக்கன'' என்று மாணிக்கமாலையில் பெரியவாச்சான் பிள்ளையும் அருளிச் செய்தாரிறே. உண்மை நிலை இதுவாயிருக்க, ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கும் மூல மந்திரமான திருமந்திரத்தை உபதேசித் தவனே ஆசாரியன் என்று வாயளவில் சொல்லிக் கொண்டு, (268) "பெண்ணாசை என்னும் கடலிலே விழுந்து மோகம் என்னும் விகாரத்தையடைந்து மனைவி பிள்ளை என்னும் முதலைகளாலே கடிக்கப்பட்டு பாசம் என்னும் துன்பத்தை அனுபவிக்கிறான்"(?) என்கிறபடி மனைவி மக்கள் உறவினர் முதலியவர்களோடு குடும்பம் என்னும் பெருங்கடலிலே மூழ்கி அழுந்தித் தானும் கரையேற மாட்டாதே, தன்னைப் பற்றினவனையும் அறியாமையில் கட்டுப்பட்ட ஸம்சாரியாகும்படி செய்து;**

மூலம்:

(269) ''பாபேக்ருதேய திபவந்தி பயாநுதாப லஜ்ஜா: புந:''(?) என்கிறபடியே துர்வாஸனையாலே பாபம் பண்ணினாலும் பய அனுதாப லஜ்ஜைகளுண்டாய் க்ருபா பாத்ரராகாதபடி நமக்கு ஆசார்ய ஸம்பந்தமுண்டென்று பயங்கெடுத்து, ''காது செய்வான் கூதை செய்து கடைமுறை வாழ்க்கையும் போம்'' (திருவாய்.9-1-9) என்கிறபடியே, அதுவுமில்லாதபடி பண்ணி வ்யபசாரி சொல்லுகிற பதிவ்ரதா தர்மங்கள் போலே ஹாஸ்ய ஆஸ்பதங்களுமாய், அப்ரயோ ஜநங்களாயிருக்குமிறே. அவரில் பசையில்லை யானாலும் (270) விச்வாஸ: பலதாயக: (?) என்று, இவனுடைய த்ருடாத்யவஸாய மாத்ரத்தால் பல ப்ரதமாகாதோ? என்ன, இந்த விச்வாஸம் வேதபாஹ் யனுக்கும் உண்டிறே. (271) ''குரு உபநிஷ்டமார்கேண ஜ்ஞாந கர்ம ஸமுச்சயாத்-மோக்ஷோபந்த விரக்தஸ்ய ஜாதே புவிகஸ்யசித்'' (?) என்று வேத பாஹ்யனுக்கும் குரு விச்வாஸமும் ததுபதிஷ்டமார்க்க ப்ரவர்த்தகத்வமும், அத்தாலே மோக்ஷம் தப்பாதென்கிற த்ருடாத்ய வஸாயமும் மிகவுமுண்டிறே. ப்ரமாண பரதந்த்ரனானவனுக்கு ஆசார்யன் சாஸ்த்ரஜ்ஞனாக வேணும். ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்ந னாக வேணும். ஸத்ஸம்ப்ரதாய ஸித்தனாக வேணும் என்று இவை யெல்லாம் அபேக்ஷிதங்களாயிருக்கும். பாஹ்ய மதஸ்தர்க்கு ப்ரமாணாபேக்ஷையொன்றுமில்லாமையாலே ஆசார்ய நிஷ்டை மிகவும் பரிபூர்ணமாயிருக்கும். அதுண்டென்னுமத்தாலே பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷ ப்ராப்தி சொல்ல வொண்ணாதிறே.

---

விளக்கவுரை:

**(269) ''தீயபழக்கத்தால் பாவம் பண்ணினாலும் மீண்டும் அவற்றில் பயமும் வெட்கமும் வருத்தமும் இன்றிக்கே'' என்கிறபடி கெட்ட பழக்கத்தாலே பாவம் செய் தாலும் அச்சம் வருத்தம் நாணம் ஆகியவை உண்டாகி இறைவன் அருளுக்குக் கொள் கலமாகாதவாறு 'நமக்கு ஆசாரிய சம்பந்தமுண்டு' என்று அச்சங் கெடுத்து, ''காது செய்வான் கூதை செய்து கடைமுறை வாழ்க்கையும் போம்'' என்கிற இருக்கும் நிலையுங் கெட்டு விலைமகள் கூறுகின்ற பதிவிரதையின் தருமங்கள் போலே, நகைப்பிற்கு இடமாய், பயனற்றிருக்குமன்றோ. இத்தன்மையாம் ஆசாரியனிடம் சிட் டர்கள் ஆசரிக்கும் தருமங்களில்லையாகிலும் (270) ''ஆசாரி யனிடத்துள்ள நம்பிக்கையே பயனைத் தரும்'' என்று சீட னுக்கு ஆசாரியனிடத்துண்டான திட நம்பிக்கை மாத்திரத் தால் பயனை அளிக்காதோ? எனின், இந்த நம்பிக்கை வேதத்துக்குப் புறம்பான மதவாதிகளுக்கும் (நாத்திகருக்கும்) உண்டல்லவா? (271) ''குருவின் உபதேச வழியாலே ஞான கருமங்களால் மோட்சமும் அதனால் இப்புவியில் பற்றற்ற நிலையும் உண்டாகிறதல்லவா'' என வேத மதத்திற்குப் புறம் பான நாத்திகமதவாதிகளுக்கும் குருவிடத்தில் நம்பிக்கையும், அவ்வுபதேச வழியாலே செயல்படுகின்ற தன்மையும், அதனால் மோட்சம் தப்பாது என்ற திட நம்பிக்கையும் அவர் களுக்கும் மிகவும் உண்டன்றோ. அவ்வாறில்லாமல் உண்மை யான பிரமாணத்தின் வழிநின்ற ஆசாரியன் வேத சாத்திரங் களை அறிந்தவனாக வேண்டும். ஞான அனுட்டாந சம்பத்தை யுடையனாக வேண்டும். நல்ல உபதேச மார்க்கத்தையுடை யனாக வேண்டும் என்ற இவைகளெல்லாம் தேவையானவை யாயிருக்கும். புறமதவாதிகளுக்குப் பிரமாணங்கள் தேவை யற்றதாலே அம்மதங்களில் சாரமான உண்மைப் பொருள் ஒன்றுமில்லாமையாலே, ஆசாரிய நிட்டை மிகவும் நிறைவு டையதாயிருக்கும். ஆசாரிய நிட்டையுள்ளது என்ற மாத்திரத் தால் அவர்களுக்கு மேலான வீட்டின்பமாகிய மோட்சம் கிடைக்குமென்று கூறமுடியாதல்லவா.**



---

மூலம்:

குருமந்தர தேவதா பேஷஜ (மருந்து) விஷயங்களில் திவ்ய சக்தியுண்டானாலும் விச்வாஸ மில்லாதபோது கார்யகாரமாக தென்று, விச்வாஸாவச்யாபேக்ஷிதம் சொல்லிற்றித்தனையொழிய, சுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணி விச்வஸித்தால், அது மெய்யாக மாட் டாதிறே. ஆசார்யன் ஜ்ஞாநாதிகனாய் அவனுக்கு அத்யந்த ப்ரியத மனாயிருந்தால், சிஷ்யன் பக்கல் சில ஸ்காலித்யங் களுண்டானாலும் (சிஷ்யன் சில தவறுதல்களைச் செய்திருந் தானாலும்), ஆசார்யன் பக்கல் ப்ரேமமுண்டாய்ப் போருகிற விடத்தில், ஈச்வரன் சிக்ஷிக்க நினைத்தாலும், இவ்வாசார்யன் தன் பின்னே வைத்துக் கொண்டு ரக்ஷிக்க மாட்டானோ? என்னில், (272) ''ஸ்காலித்யே சாஸிதாரம்'' (ந்யாஸ. விம்.1) என்கிறபடியே அவை வாரா தபடி சிக்ஷித்து போகயோக்யனாம்படி பண்ணி ரக்ஷிக்குமதே ஆசார்ய க்ருத்யமித்தனை

போக்கி, தன்னையாச்ரயித்துத் தன் பக்கல் ப்ரேம முண்டாய்ப் போந்தால், அவிநீதனானாலும் (பணிவில்லாத வனானாலும்) ரக்ஷிக்க வல்லனென்று நினைக்கலாகாது. (273) ''குரு கர்ண தாரம்'' (?) என்று ஆசார்யனாகிய கர்ணதாரன், விஷ்ணு போதத்திலே யொதுங்கி ஸுஸ்திரனாயிருந்தால் (மிகவும் உறுதி படைத்தவன்) உத்தாரகனாகத் தட்டில்லை. இவன் இருகையும் விட்ட விடத்தில் நிர்பயனாய் நிர்வ்யாபாரனாயிருக்க மாட்டாதே. அகாதமான ஸம்ஸாக ரத்திலே மூழ்கித் தரைப்படில், ஸர்வ சக்தியான ஸர்வேச்வரனுக்கே அசக்யமென்று,

**விளக்கவுரை:**

குரு, மந்திரம், தேவதை, மருந்து போன்ற விஷயங்களில் மிக்க தெய்வீக சக்தியுண்டானாலும், அவற்றில் நம்பிக்கையில்லாத போது காரியமாகாதென்று நம்பிக்கை அவசியம் வேண்டுமென்று சொல்லிற்றித்தனையொழிய, சிப்பியை வெள்ளி என்று நம்பினால், அது உண்மையாக மாட்டாதன்றோ? ஆகில், ஸதாசாரியன் ஞானமிக்கவனாய் அவனுக்கு மிகவும் மேலான விரும்பத்தக்கவனா யிருந்தால் சீடனிடம் சில குற்றங்கள் உண்டானாலும், அவ் ஆசாரியன்பால் அன்புண்டாய்ப் போருமிடத்தில், இறைவன் அக்குற்றத்தைக் கண்டு தண்டிக்க நினைத்தாலும் இவ் ஆசாரியன் தன் பின்னே வைத்துக் கொண்டு காக்கமாட்டானோ? எனின், (272) ''சீடன் தவறு செய்தால் ஆசாரியனானவன் தண்டித்துத் திருத்த வேண்டும்'' என்கிறபடி அவை நிகழாவண்ணம் கண்டித்து பகவதநுபவத்திற்குத் தகுதியாம்படி பண்ணி காப்பதே ஆசாரி யனது தொழிலாகும். அதைவிட்டுத் தன்னையடைந்து தன்னிடத் தில் அன்புள்ளவனாயிருக்கின்றான் என்ற காரணத்திற்காக அச்சீடன் கெட்ட வழியில் நடந்தாலும் அவனை ஆசாரியன் காக்கவல்லவன் என்று நினைக்கலாகாது. (273). ''ஆசாரியன் என்பவன் நுண்மையான செவிப் பொறியையுடையவன்'' என்று ஆசாரியன் என்னும் செவியை தரித்தவன் விஷ்ணுவாகிய (பிறவிக் கடலைக் கடத்தும்) ஓடத்தில் ஒதுங்கி உறுதியாக இருந்தால் பிறவியைக் கடத்துப வனாகச் சொல்லக் குறையில்லை. அவ் ஆசாரியன் இரு கையும் விட்டவிடத்தில் பயமற்றவனாயும் தன்முயற்சி யில்லாத வனாக விருக்க மாட்டாமல், ஆழங்காணமுடியாத ஸம்சாரமாகிய பெருங்கடலிலே மூழ்கித் தரைப்படில், எல்லா ஆற்றலுமிக்க இறைவனுக்கே இத்தன்மையான ஆசாரியனையும் காக்க முடியாது என்று, (தொடரும்)



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 157இன் தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

''வேதத்தில் சொல்லப்படும் பல்வேறு தேவதைகளில், ப்ரத்யக்ஷத்தில் இயற்கைத் தோற்றத்தில் சூரியன், அக்நி ஆகியோரை மட்டுமே பார்க்க முடியும். இந்திரன், வருணன், வாயு போன்றோரை ப்ரத்யக்ஷத்தில் பார்க்கமுடியாது. ப்ரத்யக்ஷத்தில் காணும் ஒளிகளில் மிகப்பெரிய ஒளியாக சூரியன் இருப்பதால் சூரியனையே மற்ற தேவர்களின் பெயரால் வழிபட்டிருக்கிறார்கள். உண்மையில் சூரியனைத் தவிர வேறு தேவதைகள் எதையும் வேதரிஷிகள் காணவில்லை அவர்களைப் பொருத்தவரை எல்லாமே சூரியன் தான்'' - என்று இந்த அபத்த ஆராய்ச்சியாளர்கள் விளக்க மளிக்கி றார்கள். இவர்களின் இந்த விளக்கத்தின் உள்நோக்கம் என்ன என்பதை நாம் நன்றாகவே தெரிந்து கொள்ள முடியும். வேதகால ரிஷிகளின் சிந்தனை ப்ரத்யக்ஷத்தில் நாம் காணும் சூரியனைத் தாண்டிச் செல்லவில்லை என்று முடிவு கட்டுவதே இவர்களின் உள்நோக்கம். வெறும், மழை, இடி, மின்னல், காற்று, சூரியன் இவற்றைத் தவிர வேத கால ரிஷிகளுக்கு வேறு எதுவும் தெரியாது என்று தங்களின் வேத உரை நூல்கள் மூலம் உலகிற்குச் சொல்வது தான் இவர்களின் தலையாய குறிக்கோளாகும், அந்தக் கருத்து வெகுவாகப் பரவக்கூடுமானால் வேதத்தின் மீதும் வேத மந்திரங்களைக் கண்ட ரிஷிகள் மீதும் மக்களுக்கு உள்ள மதிப்புக் குறைந்து விடும் என்றும் அதன் பிறகு தங்கள் மதத்தைப் பரப்புவதில் தடைஏதும் இருக்காது என்றும் கனவு கண்டவர்கள் இந்தக் கயவர்கள். இவர்கள் வேதத்தை ஆராய்ச்சி செய்ய வந்ததே வேதரிஷிகளைக் காட்டு மிராண்டிகள், நாடோடிகள் என்று கூறி இழிவுபடுத்தத்தானே! இவர்களின் கருத்துக்களைக் கட்டிக்கொண்டு அழும் சில மூதேவிகள் நம் நாட்டிலும் இருக்கிறார்கள் என்பது தான் வேதனைக்குரிய விஷயம்.

கெட்ட எண்ணத்தோடு நம் வேதங்களை ஆராய்ச்சி செய்ய வந்தவர்களேயானாலும், ஆராய்ச்சியில் மூழ்கிய பின், வேதத்தில் சில விஷயங்கள் அவர்களை பிரமிக்க வைத்தன. அவர்களின் வேறு

பல ஆராய்ச்சிகளுக்கு வேதம் உதவியது. எப்படியிருந்தாலும் வேதத்தைச் சிறுமைப்படுத்துவதுதான் மேற்கத்தியர்களின் தலையாய குறிக்கோளாய் இருந்தது என்பதை அவர்களின் வேத ஆராய்ச்சி முடிவுகள் மூலம் தெளிவாக உணரமுடியும்.

சூரியனைத்தாண்டி வேதரிஷிகளின் சிந்தனை செல்ல வில்லை என்று இவர்கள் முடிவு கட்டுவது அந்த மஹரிஷிகளின் உயர்ந்த ஞானத்தையும் சீரிய சிந்தனைகளையும் குறைத்து மதிப்பிடுவதாகும். இவர்கள் நினைப்பதுபோல் வேதமந்திரங் களைக் கண்ட ரிஷிகள் மிகச் சாதாரணமானவர்கள் இல்லை. சூரியனையும் தாண்டி வெகுதூரம் வரை சென்ற இவர்களது சீரிய சிந்தனை, உலகத்தோற்றம் எப்படி நிகழ்ந்திருக்கும், இந்த பிரபஞ்சத்தை சிருஷ்டித்த அந்தப் பரம்பொருள் யார் என்பதுவரை சென்று அந்த விஷயங்களுக்குப் முடிவு சொல்கின்றவரை சென்றிருக்கின்றது என்பதை நாம் வேதத்தைக் கொண்டு அறிய முடிகிறது.

இன்று வரை பௌதிக விஞ்ஞானத்திலும், வானியல் துறையிலும் ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் எந்தக்கருத்துக்களை சொல்லியிருக்கிறார்களோ அந்தக் கருத்துக்களை வேதகால ரிஷிகள் அன்றே சொல்லி வைத்திருக்கிறார்கள்.

அளவிட்டுக் கூறமுடியாத இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ நாம் வாழும் பால்வெளி மண்டலங்களைப் போன்ற **கோடிக்கணக்கான மண்டலங்கள்** (Galaxies) இருக்கின்றன என்றும், அவற்றில் ஒன்றில் ஏதோ ஒரு மூலையில் சுழன்றுக் கொண்டிருக்கும் ஒரு சிறிய ஒளிப்பொருள்தான் நாம் தினமும் கண்ணால் பார்க்கும் சூரியன் என்றும், பல்லாயிரக்கணக்கான பால்வெளிமண்டலங் களைக் கொண்ட இந்தப் பிரபஞ்சத்தில் சூரியனைப்போலும், சூரியனைவிடவும் பன்மடங்கு ஒளியை உமிழுபவையுமான ஒளிமண்டலங்கள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன என்றும் இன்றைய வானியல் துறை சார்ந்த விஞ்ஞானிகள் தங்களின் தொலைநோக்கி மூலமும் ஆராய்ச்சி மூலமும் கண்டு சொல்கிறார்கள். இவர்கள் இன்று சொல்வதைத் தான் வேதகால ரிஷிகள் தங்களின் ஞானக்கண் என்றும் தொலை நோக்கி மூலம் கண்டு சொல்லியிருக்கிறார்கள். சூரியனுக்கு ஒளி வழங்குவதாக வேதத்தில் கூறப்படும் ஆதித்யர்களும், அஸ்வினி



தேவர்களும், மற்ற இந்திராதி தேவர்களும் சூரியனுக்கு மேலே உள்ள ஒளியை அள்ளித்தரும் பல்வேறு ஒளி மண்டலங்களின் அபிமானதேவதைகள் தான். தேவன் என்றாலே ஒளியுள்ளவன் என்று பொருள். ஆகையால் எல்லா தேவர்களுமே ஒளியுள்ள வர்கள்தான். அந்த வகையில் சூரிய சக்தியைவிட உயர்ந்த சக்திகள் சூரியனுக்கு மேல் இருக்கின்றன என்பதையும், மேலும் பல ஒளி மண்டலங்கள் பரந்த அண்டத்தில் இருக்கின்றன. என்பதையும் வேதகால ரிஷிகள் தங்களின் அசாதாரண ஞான சக்தியால் கண்டு சொல்லி வைத்திருக்கிறார்கள். (**ரஜாம்ஸி சித்ரா வி சரந்தி தந்யவ:** ரிக் - 5. 63. 5) பல உருவங்கள் உள்ளவைகளாயும் மின் உருவத்தில் உள்ளவையுமான பல உலகங்கள் சஞ்சரிக்கின்றன) அந்த எல்லையையும் தாண்டி, அதாவது, சூரியனுக்கும் மேலுள்ள ஒளி உமிழும் சக்திகளுக்கும் ஒளியும் சக்தியும் தரும் மூல சக்தி ஒன்று உண்டு என்பதைப் பற்றியும் ரிஷிகள் சிந்தித்திருக்கிறார்கள். இந்திராதி தேவர்களைப் படைத்த ஒரு மூலம் உண்டு என்றும் அதுவே உலக சிருஷ்டிக்குக் காரணமான பரம்பொருள் என்றும் அந்தப் பரம்பொருளை வேதத்தின்மூலமே அறியலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆதி மூலத்தைத் தேடும் முயற்சியில் இன்றுதான் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். சூரியனுக்கும், சூரியனுக்கும் மேலுள்ள பேரொளி உமிழும் ஒளிப்பொருள்களுக்கும் ஒளி எங்கிருந்து வந்தது என்பதை இன்று விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கியிருக்கிறார்கள்.

சூரியனைத் தாண்டி வேதகால ரிஷிகளின் சிந்தனை செல்லவில்லை என்ற அறைகுறை ஆராய்ச்சியாளர்களின் கருத்துத் தவறானது என்பதையும், வேதகால ரிஷிகளின் சிந்தனைகளை இன்றைய விஞ்ஞானிகளும் வேதத்தை ஆராய்ச்சி செய்த மேல்நாட்டவரும் எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது; என்பதையும் தெளிவுப்படுத்தவே, இன்றைய விஞ்ஞானச் செய்திகளோடு ஒப்பிட்டு சில விஷயங்கள் விளக்க வேண்டி வந்தது. மற்றபடி வேதத்தை விஞ்ஞானத்தின் உதவி யோடுதான் விளக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

இனி சூரியனுக்குப் பரத்வம் கூறுபவர்களின் கருத்து தவறானது என்பதையும் அவர்களின் கூற்றுக்கு வேதப்பிரமாணம் இல்லை என்பதையும் நிரூபிப்போம்.

''ஸந்தியாவந்தனத்தில் சூரியனை நோக்கிக்கொண்டு காலையில் மித்ரனுக்குரிய மந்திரத்தையும் நடுப்பகலில் சூரியனுக்குரிய மந்திரத்தையும் மாலையில் வருணனுக்குரிய மந்திரத்தையும் ஜபிக்கிறார்கள். சூரியனை நோக்கியே மற்ற தேவர்களுக்குரிய மந்திரங்களும் சொல்லப்படுவதால் மற்ற தேவதைகளின் பெயரில் சூரியனே அழைக்கப்படுகிறான் என்று சொல்வதில் என்ன தவறு'' - என்பது ஒரு பூர்வ பக்ஷியின் வாதம்.

மித்ரா வருணர்களின் கண் என்றே சூரியன் வேதத்தில் சொல்லப்படுகிறான். மித்ரா வருணர்களே சூரியனை இயக்கு கிறார்கள் என்பதும் வேதத்திலிருந்து அறிய முடிகிறது. மித்ரா வருணர்களை ப்ரத்யக்ஷத்தில் காணமுடியாது என்பதால் அவர் களுடைய சக்தியால் இயங்கும் சூரியனை நோக்கிக்கொண்டு அவர்க ளுக்குரிய மந்திரம் சொல்லப்படுகிறது.

**ப்ரதி வாம் ஸூர உதி$_3$தே ஸூக்தைர் மித்ரம்**
**ஹுவே வருணம் பூதத$_3$க்ஷம் |**

ரிக் - 7-65-1

(பரிசுத்தமானவர்களான மித்ரா வருணர்களே! உங்களை நான் சூரிய உதயத்தில் ஸூக்தங்களால் துதிக்கிறேன்)

இந்த மந்திரம் மித்ரா வருணர்களின் ஸூக்தத்தில் வருகிறது.

**யத$_3$த்$_3$ய ஸூர்ய ப்$_3$ரவோநக$_3$ா**
**உத்$_3$யந்திமித்ராய வருணாய ஸத்யம்**

(ரிக்- 7-60-1)

சூரியனே! இன்று நீ உதயமாகும்போது நாங்கள் பாவ மில்லாதவர்கள் என்ற சத்யத்தை மித்ரா வருணர்களிடம் கூறுவாயாக.

இந்த மந்திரம் சூரியனுக்குரிய மந்திரம் ஆகும்.

(தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 157இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

*கழிபெருங்கற் பினள்ஆடை கழியாமல் நயந்தனையே*
*வழிபடும்தூ தனும்ஆகி மடக்கோலை சுமந்தனையே*

*ததிபாண்டன் தனக்குஅழியாத் தமனியநாடு அளித்தனையே*
*விதிகாண்டற்கு உலப்பில்பல வேடம்அவை கொண்டனையே*

(இவை நான்கும் நாற்சீர் ஓரடி நால் அம்போதரங்கம். அளவெண். அற்றேல், நாற்சீர் ஈரடி அம்போதரங்கத்தொடும் இவற்றிடை வேற்றுமை யாதோஎனின், எழுத்து முதலா ஈண்டிய அடியில் குறித்த பொருளை முடிய நாட்டல் வேற்றுமை, என்னை?

*''எழுத்து முதலா ஈண்டிய அடியில்*
*குறித்த பொருளை முடிய நாட்டல்*
*யாப்புஎன மொழிப யாப்புஅறி புலவர்''*
தொல்.செய். *78*

என்பதனான் உணர்க. இந்நோக்கம் மேல்வரும் இடை எண், சிற்றெண்ணிற்கும் ஒக்கும்.)

*தாடகை உடல்உயிர் போக்கினை*
*தாபதன் மனதிடர் நீக்கினை*
*நீடுஅக லிகைபழி தீர்த்தனை*
*நேசமுள் ளவனொடு சேர்த்தனை*
*வில்லினை மிதிலையில் வளைத்தனை*
*மெல்லியல் இளமுலை திளைத்தனை*
*வல்லரவு உடல்கெட நடித்தனை*
*மருதினை முதலொடு முடித்தனை (ஒடித்தனை)*

(இவை எட்டும் முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம். இவை இடை எண்.)

உறித்தயிர்கட் டுண்டனையே
உரலிடைகட் டுண்டனையே
மறித்துநிரை காத்தனையே
வழங்கினைஐங் காத்தனையே

குடநடம்முன் பாடினையே
குழலினில்பண் பாடினையே
படர்சகடம் பொடித்தனையே
பகட்டுமருப் பொடித்தனையே

நாவலன்பின் நடந்தனையே
நடித்தனைமன் (மென்) நடந்தனையே
கோவலர்இல் இறுத்தனையே
கோள்விடைஏழ் இறுத்தனையே

புள்ளினைவாய் இடந்தனையே
புரந்தனைபா ரிடந்தனையே
தெள்ளமுதம் கடைந்தனையே
தேவருள் அங் கடைந்தனையே

(இவை பதினாறும் இருசீர் ஓரடிச் சிற்றெண். அம்போத ரங்கம் எனினும் எண் எனினும் ஒக்கும். இதனுள் பேரெண் இரண்டும் அளவெண் நான்கும் இடையெண் எட்டும் சிற்றெண் பதினாறும் அடைவே குறைவின்றி வந்தன.)

எனவாங்கு

(இது தனிச்சொல்)

இனையதன் மையவாம் எண்ணருங் குணத்தின்
நினைவருங் காவல் நிகழ்த்தினை அதனால்
நின்னது கருணையும் நீயும்
மன்னிய திருவுடன் வாழிவா ழியவே.

(இது நான்கடியாய் நேரிசையாசிரியப் பாவினால் இற்ற சுரிதகம்.



இதனுள் ஆறுஉறுப்பும் குறைவின்றி வந்தமை கண்டு கொள்க. இது யாப்பருங்கலக் காரிகை நோக்கம். என்னை?

''அவற்றொடு முடுகியல் அடியுடை அராகம்
அடுப்பது வண்ணக ஒத்தா ழிசையே''

என்பதனானும்

''அசையடி முன்னர் அராகம்வந் தெல்லா
உறுப்பும் உண்டேல் வசையறு வண்ணக
ஒத்தாழிசைக்கலி''

*(யாப்.காரிகை.செய்.11.)*

என்பதனானும் உணர்க.

திணை - பாடாண், துறை - கடவுள் வாழ்த்து, அலங்காரம் - வாழ்த்து.)

நிழல் - ஒளி, பொதி - மொட்டு. பகிரண்டம் - பேரண்டம். உளப்புஇல் - அசைவு இல்லாத, நன்னர் - நன்கு, அங்கத்து - உடலில்.

சுடராம் சொருபம் - ஒளிவடிவம், ஒருசுடர் - சூரியன், இருசுடர் - சந்திரன், அக்கினி. குணம் மூன்று - சத்துவம், இராசதம், தாமசம். புறம்போக்கி - சிவனுக்கும் அயனுக்கும் தந்துவிட்டு, இடைப்படு - படைப்பு, காப்பு, அழிப்பு ஆகியவற்றில் நடுவேயுள்ள. காவலை - காப்புத் தொழிலை.

நின்றன - அசரம். இயங்கின - சாரம். உருவளித்தோன் - பிரமன். (பிரமன்) பொன்றிய நாள் - ஊழியிறுதியில். பெரும்புனல் - பிரளய நீர். படிந்த - மூழ்கிய. உதரம் - வயிறு. காவல் - காவல் தொழில். போக்கு வரவு - இறப்பு பிறப்பு. அணு - அணுவளவு. உள்நீர்மை - மனப்பண்பு. அற்றன - இல்லாத உயிர்கள்.

முரணிய - பகைத்த. விறல் - வலி. வரன் - வரம். அரண் - காவல். இகலினை - பகைத்தால். நிருதன் - இராவணன். கணை - அம்பு. இறையவர் - அரசர். உறைவயின் - இருக்கும் இடத்தில். வடுவுரை - பழிப்புச் சொல். பறைபவன் - சொன்னவன்; சிசுபாலன். கழலிணை - இருபாதம்.

மதமலை - யானை. மடு - பொய்கை.

மாதுலன் - மாமன். மறைபயின்ற - மறைந்து வாழ்ந்த. உரகேசன் - பாம்பரசன்: ஆதிசேடன். பொறை - பாரம். கூற்றுவர் நாடு - யமலோகம். அவனி - பூமி.

கற்பினள் - திரௌபதை. மடக்கோலை - தூது ஓலை, தமனிய நாடு - பொன்னுலகம்; முக்தி. விதிகாண்டற்கு - சாத்திர மரியாதை காப்பதற்காக.

தாபதன் - கோசிகன். நேசமுள்ளவன் - கௌதமன். மெல்லியல் - சீதை. அரபு - காளியன். மருது - ஒருவகை மரம். கட்டு உண்டனை - திருடிஉண்டாய். கட்டுண்டாய் - கட்டப் பட்டாய். மறித்து - தடுத்து. நிரை - பசுக்கூட்டம். ஐங்கா - கற்பகச் சோலை. குடநடம் - குடக்கூத்து. குழல் - புல்லாங்குழல். சகடம் - சகடாசுரன். பொடித்தல் - அழித்தல், பகடு - யானை. மருப்பு - தந்தம். நாவலன் - திருமழிசையாழ்வார். மன்நடம் - நிலையான கூத்து. இறுத்தனை - தங்கினாய். விடை - எருது. இறுத்தனை - அடக்கினாய், புள் - பகாசுரன். இடந்தனை - பிளந்தாய். புரந்தனை - காத்தாய், பாரிடம் - பூமி. தேவர்உள் - தேவர் மனத்தில்.

காவல் - காப்புத் தொழில்.

பூமாது மார்பில் முயங்க அண்டத்து அப்புறமும் அகத்து அடக்கிப் பேருருவாகவும் அணுவாகவும் தென்னரங்கத்துக் கண்வளர்வோனே!

ஒளியுருவாகிய அருவமும் உருவமும் கொண்டு முச்சுடராய் முக்குணங்கள் என்று கூறும்படி அமைந்த முத்தொழிலில் படைப்பு, அழிப்பு ஆகியவற்றைப் பிரமனுக்கும் சிவனுக்கும் அளித்து விட்டு, நடுவாகிய காப்புத் தொழிலைக் கொண்டமை ஏன்?

சர அசரங்களைப் படைத்த பிரமன் அழிந்த ஊழியிறுதி யிலே, பிரளயத்தில் அழுந்திய உயிர்களைத் திருவயிற்று அடக்கிக் காத்தமைக்கு அவ்வுயிர்களால் உனக்கு என்ன கைம்மாறு கிடைத்தது? (தொடரும்)

## "Daylight Robbery Committed by the Tamilnadu HR & CE Department proven with facts and figures - How Hindus are cheated - A detailed study."

**இதழ் 157இன் தொடர்ச்சி.**

3. கோயில்களும் அவற்றில் நடைபெறும் நிகழ்ச்சி களும் நம் கண்களுக்குத் தெரியவரும். ஆனால் பல்லாயிரக் கணக்கான கட்டளைகளும் அவற்றின் சொத்துக்களைப் பற்றிய விபரங்களும் நம் கண்களில் படமாட்டா. இக் கட்டளைக ளையும் அதன் சொத்துக்களைக் குறித்து எந்த தகவல்களும் இம் 'மலைமுழுங்கித்' துறையிடமிருந்து பெற முடியாது. எத்த னையோ பசு மடங்கள், வேத, தேவார, நாலாயிர திவ்யப் பிரபந்த, ஆகம பாடசாலை களையும், அன்ன சத்திரங்களையும் காணாமல் அடித்த 'நற்பேறு' இந்தத் துறையையே சாரும்.

4. பெரிய கோயில்களின் வருமானத்தில் நிர்வாகக் கட்டணம், தணிக்கை கட்டணம் போன்றவற்றை எடுத்துக் கொள்வ தோடு இந்தத்துறை அந்தக்கோயில் பணத்திலிருந்து எந்த வரை முறையுமின்றி அரசு வேண்டும்போதெல்லாம் பெரிய தொகை களை எடுத்துக் கொள்ளும். புயல், வெள்ள நிவாரணம், கட்சிக்கு வேண்டியவர்களுக்கு இலவசத் திருமணம், பொது மக்களுக்கு அன்னதானம், பஞ்சாயத்து நகராட்சி செலவுகள், பேருந்து நிலையம் கட்டுதல், ஆணையர் பொது நல நிதி போன்ற கோயிலுக்கு எந்த விதத்திலும் தொடர் பில்லாத செலவுகளுக்கு பணம் எடுத்துக் கொள்ளப்படும்.

5. கோயில்களைப் புனர்நிர்மாணம் செய்வதாகக் கூறி, பல நூற்றாண்டு பாரம்பர்யம் மிக்க கோயில்களைப் பாழ்படுத்து கின்றது இந்த அறக்கட்டளைத் துறை. சிறிதும் தகுதி இல்லாத ஒப்பந்தக்காரர்களைக் (Contractors) கொண்டு புராதனமான, கலை அம்சங்கள் கொண்ட மண்டபங்களை இடித்தும், தங்கள் விருப்பம் போல் புதிய பளிங்குத் தரைகளை அமைத்தும், மக்கள் குளியல் அறைகளிலும், கழிப்பறைகளிலும் பொருத்தும் வழவழப்பான

சதுரக் கற்களை (bathroom tiles) சன்னிதிகளில் பொருத்தியும் கோயிலின் தொன்மையையும், பாரம்பர்யத்தையும் நாசம் செய்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜகோபுர திருப்பணியின்போது கோபுரங்களுக்கே உரிய அமைப்புகள் இடிக்கப்பட்டு சிமென்ட் பூச்சு கொடுக்கப்பட்டது. இவையெல்லாம் ஈடு செய்யா முடியா பேரிழப்புகள். இவற்றைச் செய்பவர்களை சிறையில் அடைக்க வேண்டிய பொறுப்பு உள்ள அரசே இச்செயல்களை தன் துறை மூலமாக நூற்றுக்கணக்கான கோயில்களில் தொடர்ந்து செய்து வருகின்றது.

இன்னும் இவை போல பல நிர்வாகச் 'சீர்கேடுகளை'ச் சுட்டிக் காட்ட இயலும். அவற்றை இந்த நூலில் புள்ளி விபரங்களோடு எடுத்துரைப்போம்.

கோயில் பணத்தை இப்படியெல்லாம் சூறையாடும் இந்தத்துறை கோயில் உத்ஸவமூர்த்திகளை கோயிலில் இருந்து எடுத்துச் சென்று பாதுகாப்பு என்ற பெயரில் பல கோயில்களில் இருந்து 'ஜீவப்பிரதிஷ்டை' செய்யப்பட்ட அந்தச் சிலைக ளுக்குரிய ஆராதனங்கள் ஏதும் செய்திடாமல் அன்ன ஆகார மின்றி சிறைவைத்துள்ளனர். கைகூசாமல் கோயில் பணத்தை அரசுக்கும், வெளியாருக்கும் தாரை வார்க்கும் அறக்கட்டளைத்துறை பல ஆயிரங்களை செலவழித்து ஒவ்வொரு கோயிலுக்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்தால் என்ன? அதைப்பற்றியெல்லாம் சிறிதும் அக்கறை கிடையாது இந்தத்துறைக்கு. சொத்துக்களை பாதுகாப்பதும், வருவாயை ஒழுங்காக வசூலிப்பதையும் விட்டு விட்டு மதச்சடங்குகளிலும், வழிபாட்டு முறைகளிலும் குறுக் கிடுவதும் அவற் றைச் சீரழிப்பதும் தாம் இந்த துறை தனது தலையாய கடமையாய் கொண்டுள்ளது. பல வழிபாட்டு முறைகள், நீண்ட கால பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் தேவையற்ற மாற்றங்களை புகுதித்திய முன்னாள் திருவரங்கம் கோயில் இணை ஆணையர் ஜயராமனின் செயல்களை இந்தத்துறை மேற் கொண்டிடும் செயல்களுக்கு ஓர் உதாரணமாக கொள்ளலாம்.

**அறநிலையத்துறை ஒழிக்கப்பட வேண்டும்:**

தமிழர்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டிய குறிப்பொன்றுள்ளது. பல கல்வி நிலையங்களையும், மருத்துவ மனைகளையும், வணிக வளாகங்களையும் நிறுவி அவற்றால்



பெரும் பயன் பெற்று வருகின்றனர் கிறிஸ்துவ சமயத்தினர். திருமடங்களும், ஆதீனங்களும் நடத்தி வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், திருமடங்களையும், வேத, ஆகமப் பாடசா லைகளையும் உண்மைக்குப் புறம்பாக தான் நடத்தி வருவதாக கூறித்திரியும் இந்த அறக்கட்டளைத் துறை இவ்வறுபது ஆண்டு காலங்களில் எத்துணை மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி உள்ளது? எத்துணை மருத்துவமனைகள் இந்தத்துறையால் தொடங்கப்பட்டு நடை பெறுகின்றன? எத்துணை பொறியியல் கல்லூரிகள், கலைக்கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் தொடங் கப்பட்டுள்ளன? எத்துணை வேத, ஆகம, தேவார, திவ்யப்பிரபந்த பாடசாலைகள் தொடங்கப் பட்டன?

கோயில்களுக்கு உள்ள பலகோடி ரூபாய்கள் பெருமானங்கொண்ட சொத்துக்களின் உண்மை வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வந்தாலே அவை ஆயிரம் கோடிகளையும் தாண்டும். ஆண்டுதோறும் பல கல்லூரிகள் தொடங்கப்பட்டு ஏழை இந்துக்களுக்கு படிப்பு வசதிகள் செய்து தர முடியும். மாவட்டந்தோறும் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டு சிறப்பான இலவச சிகிச்சை அளிக்க முடியும். கோயில்களை தூய்மையாகவும், பண்டையச் சிறப்போடும் போற்றிப் பாதுகாக்கவும் இயலும். கோயிலைச் சார்ந்தவர்கள் வாழ்வில் பெரும் முன்னேற்றமும், கலை, தமிழ் இலக்கியம் தேவார திவ்ய ப்பிரபந்தம் போன்றன மீண்டும் தமிழர் இல்லங்கள் தோறும் மலரும். இன்னும் பற்பல நற்பயன்களை பெரும் நல்ல வாய்ப்பினை தங்கள் கோயில்களைத் தாங்களே நிர்வாகம் செய்யாததால் இந்துக்கள் பல தலைமுறைகளாக இழந்து நிற்கின்றனர்.

இவ்வாறு தங்களுக்குரிய கோயில்கள் மூலம் தாங்கள் முன்னேறினால் அந்தக் கோயில்களிடம் இந்துக்கள் மிகுந்த நன்றி உணர்வோடு இருப்பதோடு மட்டுமல்லாமல் அக்கோயில்கள் மீது பற்று உடையவர்களாக என்றும் இருப்பர். இஃது இலவசங்களை அள்ளிக்கொடுத்தும், வாக்கு வங்கி அரசியலில் ஈடுபட்டும் பிழைப்பை நடத்திவரும். அரசியல் கட்சிகளுக்குப் பேரிடரை விளைவிப்பதோடு மட்டுமல்லாமல் கோயில்களிலிருந்து அவர்கள் கொள்ளை அடிக்கவும் இயலாதபடி செய்து விடும். இத்தகைய காரணங்களால் தான், தமிழக அரசியல் கட்சிகள் ஒன்று போல,

கோயில்களை இந்துக்களிடம் திரும்பத் தரக்கூடாது என்பதில் ஒற்றுமையுடன் செயல்படுகின்றனர்.

இந்த அறநிலையாத் துறையின் செயல்பாடுகளால் கோயில்கள் தம் பாரம்பர்யச் சிறப்பையும், சொத்துக்களையும், புனிதத் தன்மையையும் இழந்து நிற்கின்றன. இத்தகைய அத்து மீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தால் தமிழக இந்துக்களுக்கு எந்தக் காலத்திலும் ஈடு செய்ய இயலாத இழப்புகள் ஏற்படும். இந்து மக்களின் வழிபாட்டுத் தலங்களை மட்டும் குறி வைக்கும் அரசின் இத்தகைய செயல்கள் இந்து மக்களின் அரசியல் சாஸன அடிப்படை உரிமைகளுக்கு முரணானவை.

அரசியல் சாஸனம் பிரிவு26இல் கூறியபடி இந்து மக்களே தங்கள் கோயில்களையும், அறநிலையங்களையும் நிர்வகிக்க வேண்டும். அத்தகைய நிர்வாகத்தில் ஊழலும், நிர்வாக குறைபாடுகளும் வராமல் செய்ய மிகச் சிறப்பான நிர்வாக கட்டமைப்புகளை இந்து மதத்தைச் சார்ந்த பெரியோர் களும், சட்ட, நிர்வாக வல்லுனர்களும் ஏற்படுத்தித் தர வேண்டும். இது கடினமான செயலன்று. இந்த இன்டர்நெட் யுகத்தில் வெளிப்படையான நிர்வாகத்தை மேற்கொள்வதும் அவற்றில் தனி நபர் ஊழல் செய்திடாமல் பார்த்துக் கொள்வதும் எளிமையான செயல்களே.

பல ஸம்பிரதயங்களைச் சார்ந்த இந்து மதத் துறவிகள், மற்றும் பெரியோர்களின் வழிகாட்டுதலும், வழிபாடு, நிர்வாகம் முதலியனவற்றில் அவர்களால் நன்கு உருவாக்கப்பட்ட கட்ட மைப்புகளே இறுதி முடிவுகளை எடுக்கும் நிர்வாக அமைப்பாக இருந்திட வேண்டும். கோயிலைச் சார்ந்த முறையீடுகளுக்குத் தீர்வாக நீதிமன்றங்களை நாடுவதை இந்துக்கள் அறவே கைவிட வேண்டும். 'ஆயிரம் உண்டிங்கு சாதி இதில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி?' என்று பாரதியார் வினவியதை நினைவில் கொள்ள வேண்டும். அரசின் பொறுப்பும் தேவைப்படும் காலங்களில் நீதிமன்றங்கள் மூலமாகவே ஒரு தணிக்கை மேற்பார்வை என்ற அளவிலேயே செயல்பட வேண்டும். அத்தகைய பொறுப்பும் எல்லா மதங்களுக்கும் பொதுவாக ஒன்று போல் செயல்படுத்தப் படுவதுதான் உண்மையான மதச் சார்பின்மைக்கு அடையாளம்.

* * *



# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 157இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**213. ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி:**

ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி என்பது, வழியைப்பார்த்து அவ்வழி எதத்தால் உண்டாகிய அச்சத்தால் தலைவி கூறுஞ்சொல். பார்த்தல் - கருதல்.

**214. காமமிக்க கழிபடர் கிளவி:**

காம மிக்க கழிபடர் கிளவி என்பது, வேட்கைமிக்கு சிந்தித்துச் சொல்லுஞ்சொல்.

இக்கிளவிச் செய்யுட்குக் கருத்து: கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறல்.

நாச்சியார் திருமொழியில் சிலபதிகங்கள் காமமிக்க கழிபடர் கிளவியின் பாற்படும்.

**215. தன்னுட்கையா றெய்திடு கிளவி:**

தன்னுட்கையா றெய்திடு கிளவி என்பது, தலைவி தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன் மேலிட்டுச் சொல்லுஞ்சொல்.

**216. நெறி விலக்குவித்தல்:**

நெறிவிலக்குவித்தல் என்பது, தலைவி தலைவன் வரும் வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

**217. குறி விலக்குவித்தல்:**

குறி விலக்குவித்தல் என்பது, தலைவி தலைவன் வரும் இரவுக் குறியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

**218. வெறி விலக்குவித்தல்:**

வெறிவிலக்குவித்தல் என்பது, தலைவி, தாய் வெறியாடு தல் கொண்டாள் என்று தலைவர்க்குக் கூறி வரவு விலக்கெனத் தோழியொடு கூறல்.

திருவாய்மொழி 4-6 பதிகம் வெறிவிலக்குத்துறையைச் சார்ந்தது.

**219. பிறர் வரைவு விலக்குவித்தல்:**

பிறர் வரைவு விலக்குவித்தல் என்பது, தலைவி பிறர் வரைவைத் தலைவர்க்குக்கூறி வரவு விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

**220. குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்:**

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் என்பது, பெரியோரை வரைவு கூறி வர நமர் எதிர்கோடலைச் செய்யென்று தலைவி பாங்கியொடு கூறல்.

*'பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி*
*அருமறை செவிலி யறிந்தமை கூறலும்*
*தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும்.'*

ஆக இரண்டும்,

*'அலர்பார்த் துற்ற வச்சக் கிளவியும்*
*ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியும்.'*

ஆக விரண்டும், நெறிவிலக்குவித்தல் முதலிய நான்கும் ஆகிய எட்டும் அச்சத்திற்கு உரியன.

*'பாங்கி இறைவனைப் பழித்தலும்*
*துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலும்'*

ஆகிய இரண்டும் உலர்த்தற்கு உரியன.

*'தலைமக னுர்க்குச் செலவொருப் படுதலும்*
*பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி*
*இறையோன் றன்னைநொந் தியற்பட மொழிதலும்*
*கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்*



*தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டலும்*
*காம மிக்க கழிபடர் கிளவியும்*
*தன்னுட் கையா றெய்திடு கிளவியும்*
*குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலும்.*

ஆகிய எட்டும் ஆற்றாமைக்கு உரியன.

**இத்துணையும் பதினொன்றாநாட் செய்தியென் றுணர்க.**
**வரைதல் வேட்கை முற்றிற்று.**

### வரைவு கடாதல்

**வரைவு கடாதல்:** தலைவியை மணஞ் செய்துகொள்ளலே நலமெனத் தலைவனுக்குப் பாங்கி வற்புறுத்திக் கூறல்.

மறுநாள் வந்த தலைவனைப் பார்த்துத் தோழி சில பகர முன்வந்தனள்: ''எங்கள் இல்லத்தில் தலைவியின் மணத்தைப்பற்றி பேச்சுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எம் தாய்மாரிடம் யாங்கள் பெரிதும் துன்புறுகின்றோம்.தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணத்தையறிய விழைந்த தாய்க்குத் தலைவி சிங்கத்தைக் கண்டு பயந்தனள் என யான் பொய்யுரைப் புகன்றேன். நீர் தலைவிக்குச் சூட்டிய முல்லை மாலையின் மணத்தினால் தலைவியின் களவொழுக்கத்தைத் தாய் அறிந்து கோபக் குறியோடு உள்ளனள். நீர் அவள் வேட்கை நோயைத் தணிப்பதற்குத் தக்க வழி தேடா மையின், அதைப்போக்க வெறியாட்டாளனை வினாதலில் எம்மனோர் மனஞ் சென்றுள்ளது. நிற்க. என் தலைவியின் அழகுக்கு ஆவல் கொள்ளாதார் யார்? அவளை மணம் பேசக் கருதி பலபேர் வந்து கொண்டிருக்கின்றனர். ஆதலில் நீர் அந்தணரோடும், தக்க பரிசோடும் வந்து தலைவியை மணஞ்செய்து தருமாறு கேட்கில் எம்மனோர் உம்மை மறுக்காது நலம் புரிவர். வேங்கைமலர் பூத்தன. திங்களை அரவ ஆபரணம் (பரிசேடம்) வளைந்தது. இதுவே மணத்திற்குத் தக்க காலமாகும். நீர் அவளைப் பிரிந்து சென்ற குறையை என்னிடம் கூறின் யான் பழிப்பனோ என நாணி உம்பிழையை என்னிடமும் கூறாது வாளா இருக்கும் என் தலைவியின் அறிவுடைமையை என்னென்று இயம்புவேன்.''

இவையனைத்தையும் கேட்டும் தலைவன் மணம் புரிய இசைந்திலன். ஆகவே, தோழி தலைவனை நோக்கி ''நீர் இவண் வருவதைத்

தாய் ஒருவாறு அறிந்தனள். அவள் இப்போது இங்கு வரினும் வரலாம். ஆதலின் உம் விளையாட்டிற்கு, நீர் வேறிடத்தைக் குறித்துக்கொள்ளலே தகுதி'' யென்றனள்.

**பன்னிரண்டாம் நாள் செய்கை முடிந்தது.**

தலைவியைத் தலைமகன் மணப்பதற்குத் தக்க வழிதேடலே நம் கடமை எனத் தீர்மானித்த தோழி, பகலில் வருந்தலைவனை இரவில் வா என்றும், இரவில் வரும் தலைவனைப் பகலில் வா என்றனள்.

**பதின் மூன்றாம் நாள் செய்கை முடிந்தது.**

பகலிலும், இரவிலும் வருவாய் என்றும், இருவேளை களிலும் இங்கு வரவேண்டாமென்றும் பலவாறு சொல்லித் தலைவனைத் தடுத்தனள். அப்போதும் அவன் தன் களவொழுக் கத்தை விட்டானில்லை. ''இக் களவொழுக்கம் உம் குலத்திற்கும், குணத்திற்கும், கீர்த்திக்கும் தக்கதன்று. நீர் வரும் வழியில் முதலைகள் பெரிதும் உள்ளன. தலைவியோ கலங்கியும், தெளிந்தும், பெருமூச்செறிந்தும், கைவளைக் கழல மெய் இளைத் தும் துன்புறுகின்றனள். அத்துயர் அவளால் ஆற்றிக்கொள்ளும் தன்மையில் இல்லை. அன்னை முதலியோர் அருகிலே இருக்கின்றனர். முன்னிலும் காவல் மிக்கிருக்கின்றது தலைவி நின்னைக் கனவிற் கண்டு, விழிப்பிற் காணாமையின் கலங்குகின் றனள். அவள் உடல் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது என இதைப்போன்ற பலவும் தோழி தலைவனுக்குக் கூறி அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தை இன்னொரு முறை அவனுக்குப் புலப்படுத்தினாள்.

**வரைவு கடாதல் (துறை இலக்கணம்)**

அஃதாவது, பாங்கி தலைவனொடு வரைவுகூறி வினாதல்.

''பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.''

என்னுஞ் சூத்திரவிதியால் **வரைவுகடாதல் நான்கு** வகைப்படும்.

(தொடரும்)



# திருமங்கையாழ்வார் பாசுரங்களின் விளக்கவுரையில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள்

*இதழ் 157இன் தொடர்ச்சி. கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

**37. இப்பிள்ளையைப் பெற்றதனால் நல்வாழ்வு பெற்றேன் என்று மகனைக் கொண்டாடுபவரைப் போல**

*ஆவியே! அமுதே! எனநினைந்துருகி*
*அவரவர்பணைமுலைதுணையா **
*பாவியேனுணராதுஎத்தனைபகலும்*
*பகுதுபோயொழிந்தனநாள்கள் **
*தூவிசேரன்னம்துணையொடும்புணரும்*
*சூழ்புனற்குடந்தையேதொழுது * என்*
*நாவினாலுய்யநான்கண்டுகொண்டேன்*
*நாராயணாவென்னும்நாமம்.*
*(பெரியதிருமொழி - 2)*

என் நாவில் - ''ஆவியே அமுதே என்று மகளிரை என்நாவினால் அழைத்த நான், 'இப்பிள்ளையைப் பெற்றதனால் நல்வாழ்வு பெற்றேன்!' என்று தம் மகனைக் கொண்டாடுபவர் களைப் போல, இந்நாவினாலன்றோ எம்பெருமான் திருநாமத்தைச் சொல்லி உய்தலைப் பெற்றேன்?'' என்று தம் நாவினைப் புகழ்கிறார். இன்று தாம் பெற்ற பேற்றுக்கு உதவிய நாவினைப் பிறிதோருடல் எடுக்கும் போதும் 'என் நா' என்று நன்றியறிதலோடு உறவு பாராட்டலாம் அன்றோ, எம்பெருமானை விடுத்து மகளிரைப் புகழ்ந்து கொண்டு திரிந்த இந்த உடலேடே. உய்ய நான் கண்டு கொண்டேன்.

**38. இரண்டு சந்திரர்கள் உதித்தாற் போலே**

மைவண்ணநறுங்குஞ்சிக்குழல்பின்தாழ
மகரம்சேர்குழைஇருபாடுஇலங்கியாட *

*எய்வண்ணவெஞ்சிலையேதுணையாஇங்கே*
*இருவராய்வந்தார் என்முன்னேநின்றார்**
*கைவண்ணம்தாமரை வாய்கமலம்போலும்*
*கண்ணிணையும் அரவிந்தம் அடியும்அஃதே**
*அவ்வண்ணத்தவர்நிலைமைகண்டும்தோழி!*
*அவரைநாம்தேவரென்று அஞ்சினோமே.*
*(திருநெடுந்தாண்டகம் 21)*

பட்டர் வ்யாக்யானம்.

தோழி தலைவியிடம், ''இவ்வாறு அவன் திருக்குழல் அழகில் ஈடுபட்டாய். இவ்வளவுதானே நீ ஈடுபட்ட செய்தி! என்று வினவ, மகரம் சேர் குழை இருபால் இலங்கி ஆட - ''அவன் உறுப்பழகில் மட்டுமன்றி அணி அழகிலும் ஈடுபட்டேன் அல்லேனோ?'' என்கிறாள் தலைவி. 'குழலழகர்' (608) என்கிற எம்பெருமானுடைய திருக்குழலழகில் மட்டும் ஈடுபடாது, பக்கத்தில் அவன் திருக்காதுகளில் சாத்தின அணிகலனிலும் அழகிலும் ஈடுபட்டேன் என்கிறாள். அக்குழலின் கறுப்பிலே கண்கள் இருண்டு திருமுகமண்டலம் கண்ணுக்குப் புலனாகாத நேரத்திலே அவ்விடத்தில் இரண்டு சந்திரர்கள் உதித்தாற் போலத் திருமகரக் குழைகள் இருந்தன.

**40. இரணியனைக் கண்ட நரசிம்மத்துக்குக் கோபம் மாறாதிருந்தாப் போல**

*அலைத்தபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய்* அவுணன்*
*கொலைக்கையாளன்நெஞ்சிடந்த கூருகிராளனிடம் **
*மலைத்தசெல்சாத்தெறிந்தபூசல் வன்துடிவாய்கடுப்ப**
*சிலைக்கைவேடர்தெழிப்பறாத சிங்கவேள்குன்றமே.*
*(பெரியதிருமொழி 1-7-2)*

அப்பிரதேசத்தில் வேடர்கள் கையில் வைத்து ஒலிக்கும் அச்சம் தரும்துடி ஒலியும், யாத்திரிகர்களைக் கொள்ளையிடும் ஆரவார ஒலியுமே எப்பொழுதும் ஒலிக்கும். எம்பெருமான் உகந்தருளின நிலங்களிலே இவ்வோசைகள் கேட்கப்படுதலின், ஆழ்வாருக்கு வேடர்கள் கையிலுள்ள துடிஒலியும், அவர்கள் மக்களைக் கொள்ளையிடும் ஆரவாரஓசையும்கூட, வேறுபாடின்றி



உள்ளத்தில் இடம்பெற்று அவரால் பாடப்படுவனஆயின. நரசிம்மத்தின் சீற்றம், அங்கு உள்ளாருடைய சீற்றம், அவர் செய்யும் கொள்ளைத்தொழில்யாவும் வேறுபாடற ஆழ்வார் திருவுள்ளத்தில் இடம்பெறுவனஆயின. சிங்கவேள் குன்றமே-நெஞ்சமே! அதனை நாம் தொழுதும்.

**41. இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பொன்னரிமாலையை அணிந்தாற் போல**

*மைவண்ணநறுங்குஞ்சிக்குழல்பின்தாழ*
*மகரம்சேர்குழைஇருபாடுஇலங்கியாட**
*எய்வண்ணவெஞ்சிலையேதுணையாஇங்கே*
*இருவராய்வந்தார் என்முன்னேநின்றார்**
*கைவண்ணம்தாமரை வாய்கமலம்போலும்*
*கண்ணிணையும் அரவிந்தம் அடியும்அஃதே**
*அவ்வண்ணத்தவர்நிலைமைகண்டும்தோழி!*
*அவரைநாம்தேவரென்று அஞ்சினோமே.*
*(திருநெடுந்தாண்டகம் 21)*

**பட்டர் வ்யாக்யானம்.**

**'தம் த்ருஷ்ட்வா சத்ரு ஹந்தாரம் மஹர் ஷீணாம் ஸுகாவஹம்| பபூவ ஹ்ருஷ்டாவைதே ஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே** (அரக்கர்களாகிய கரன் தூஷணன் முதலியோரை வேட்டைஆடின பெருமானுடைய, போரிட்டதால் களைப்பு நோக்காடு அமைந்த திருமேனியிலே அரக்கர்களுடைய அம்புகள் பட்ட புண்களுக்கு மருந்தாக அவரை ஆரத்தழுவுதலைப் பெற்றுப் பிராட்டி நல்வாழ்வு பெற்றாள்.) 1. தம் - அரக்கர்கள் நிரம்பிய பகுதியிலே உன்னை அழைத்துச் செல்ல அஞ்சுவேன் என்றவரை. 2. தம்- **'ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்'** - (ஆண் வடிவில் உள்ள பெண்) 'ஆணுடை தரித்த பெண்' என்று பிராட்டியாலே ஆடவர் பலர் முன்னால் அம்பு போன்ற சொற்களாலே எய்யப்பட்ட அன்று தொடங்கித் தம் திருவுள்ளத்திலே எண்ணிக் கொண்டிருந்து, பதினாலாயிரம் அரக்கரையும் அடியோடு அழித்துவீழ்த்திக் குருதிப் பெருக்கிலே மிதக்க விட்டு, பின் பிராட்டியை நோக்கித் தம் வீரத்தை உறுதிப்படுத்திக்காட்டி அருளினவரை. 3. தம் - **'ஆதித்ய இவதே**

**ஜஸ்வீ'** - (கதிரவனை ஒத்த ஒளியுடையவர்) முதலிய சொற்றொடர் களாலே, வீரத்திற்கு இவரை எண்ணினால் மேல் விரல்களை மடக்கி எண்ணமுடியாதபடி முடக்கப்பட்ட சிறுவிரல் ஒன்றே ஆம்படி வீரத்துக்கு ஒப்புயர்வற்றவரை. 4. தம் - பிராட்டியொடு படுத்திருந்த காலத்தில் அவள் தலையிலணிந்த உதிரிப்பூ விழுந்தாலும் அதனையும் பொறாது திருமேனி சிவக்கும்படியான மென்மையை உடையவரை. 5. தம் - வீரஇலக்குமியை மணந்த மணக்கோலத் தொடு காண்டற்கினிய மிக்க மென்மையை உடையவரை. 7. தம் - முனிவர்களுக்குத் தாம் வழங்கிய உறுதிமொழி கடலோசைபோலப் பொருளுடன் புணராதது ஆகாதபடி அதனைச் செயலிலே செய்து காட்டி உள்ளத்தில் செய்ய வேண்டிய கடமையைச் செய்த நிறைவு உடையவரை.

சத்ருஹந்தாரம் - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பொன்னரி மாலையை அணிந்தாற்போலப் பகைவருடைய அம்புகள் தம் மீது தைத்தனால் உண்டான புண்களால் அணி செய்யப்பட்ட மேம்பட்ட நலன் செய்யும் வடிவினை உடையவர் ஆனவரை. த்ருஷ்ட்வா - வெயிலின் வெப்பம் தாளாதவர்க்குக் குளிர் நீர்க்குளத்தில் மூழ்குதல் போல, அரக்கர்களுடைய அம்புக் குவியல்களால் நிரம்பிய திருமேனியைத் தன் முழுப் பார்வையாகிற பனிநீரிலே முழுமையாக முழுகச்செய்து; 'சத்ருஹந்தாரம்' என்பது, பகைவர்களை அழித்த மையால் வந்த புதுஒளி உடைமை. எல்லா உயிர்களுக்கும் நலன் பயக்கும் எம்பெருமானுக்குப் பகைவரும் உளரோ எனின், 'ஜ்ஞாநீத்வாத்மைவ' (என்னை அறிந்தவன் எனக்கு ஆத்மா), '**மம ப்ராணாஹி'** - (எனக்கு உயிர்), 'பத்தர்' (2729) முதலிய தொடர் களாலே அடியார்களுடைய பகைவர்களையே தன் பகைவராகக் கருதுபவன் என்பது. 'மஹர்ஷீணாம் ஸுகாவஹம்' - போர்த் தொடக்கம் தொட்டு '**கிம் பவிஷ்ய தி'** - (யாது இனி நிகழப் போகிறதோ) என்று வயிற்றைப் பிடித்துக்கொண்டு துயருற்றவரா யிருந்த முனிவர்களுடைய அச்சம் தீரப் பகைவர்களை அடியோடு கொன்று விட்டு, அவர்களுக்கு இன்பம் பயப்பராய் உள்ளவரை. 'மஹர்ஷீணாம் ஸுகாவஹம்' - தம்மால் புரக்கப்படுவாருக்கு நலன் விளைத்துத் தம் இருப்பை விளைவித்தவரை.

(தொடரும்)



# மதுரகவி திருஅரங்கர் தத்தை விடு தூது

ஆசிரியர்: ஸ்ரீ.உ.வே. இரா. கோவிந்தராஜன்

செந்தமிழில் அமைந்துள்ள சிற்றிலக்கிய வகைகளில், தமிழ் மக்களுடைய மனத்தை மிகுதியாகக் கவர்ந்தவை சில. கோவை, உலா, தூது, பிள்ளைத் தமிழ் முதலிய சிற்றிலக்கியங்கள் சிறந்தனவாக விளங்குகின்றன. அவை பாட்டுடைத் தலைவன் சிறப்புக்கள் மாறுபடுவதற்கேற்பச் செய்திகள் மாறுபடுவதையன்றி நூலமைப்பில் மாறுபடாதவை. கோவை இலக்கியங்களில் உள்ள துறைப்பொருளும் கிளவியமைதியும் பெரும்பாலும் ஒரே அமைப் பாகவே உள்ளன. உலாவில் ஏழு பருவ மகளிர் வருணனையும் பிறவும் அத்தகையனவே. பிள்ளைத் தமிழிலும் பத்துப் பருவங்களும் ஒரு திறத்தனவாகவே உள்ளன. தூது நூல்களிலோ தூது விடுக்கப்படும் பொருளுக்கேற்பச் செய்திகளும் பொருள மைப்பும் மாறுபட்டே உள்ளன. ஆகவே தூது இலக்கியங்களில் புதுமைகள் மிகுதியாகக் காணப் பெறும்.

மேலும் உலா, கோவை, பிள்ளைத்தமிழ் போன்ற நூலமைப்புக்கள் தமிழுக்கே சிறப்பாக உரியன. இந்திய மொழிகள் பலவற்றிலும் சிற்சில வேறுபாடான அமைப்புடன் தூது காணப் பெறும். பல மொழிப் புலவர்களும் விரும்பி நூல் யாத்தற்குரிய அமைப்பு முறை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. சமஸ்கிருத பாஷையில் தூது இலக்கியங்களை, ஸந்தேசம் எனவும், தூது காவ்யங்கள் எனவும் உரைப்பர். அவை காப்பிய வகையில் சேர்த்து எண்ணப் பெறுவன.மகாகவி காளிதாஸரால் இயற்றப் பெற்ற மேகஸந்தேசம் படிப்பவர் உள்ளத்தைக் கவரும் இனிய காப்பியமாக விளங்கி வருகின்றது. அதனைப் பின் பற்றிய பல ஸந்தேச நூல்கள் சமஸ்கிருத பாஷையில் வந்துள்ளன.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளிலும் வங்காளம், சிங்களம் முதலிய பிற மொழிகளிலும் பல ஸந்தேச நூல்கள் உள்ளன.

உலகில் தூதனுப்பும் முறை பல படியாகப் பயன்படுகின்றது. அகத்துறையில் தலைவன் தலைவியரிடையேயும், நண்பர்களிடையேயும் புறத்துறையில் பகையரசர் இடையேயும் தூது விடுத்திடும் மரபு உலகில் உள்ளதை உணரலாம். செய்யுள் வழக்கில் காப்பியங்களிலே சில தூதுச் செய்திகள் காணப் பெறுகின்றன. போர்புரியத் தொடங்குமுன் மன்னர்கள் பகையரசர் களுக்குத் தூது விடுத்த செய்திகளை இராமாயணம், பாரதம், கந்தபுராணம், போன்ற நூல்கள் வெளிப்படுத்துகின்றன. இத் தூது விடும் முறையும் தூதுவர் இலக்கணமும் திருக்குறளிலே சொல்லப் பெற்றுள்ளன. இவை புறப்பொருள் சார்ந்த தூதுக்களாகும்.

தலைவன் தலைவியருள் தூது விடுவதைச் சீவக சிந்தாமணியில் குணமாலை ஒரு கிளியைச் சீவகன்பால் தூது விடுத்ததாக உள்ள வரலாறும் (சீவக 1000 - 1002), நளன் சரித்திரத்தில் நளன் அன்னத்தை தூதனுப்பிய வரலாறும் தெரிவிக்கின்றன. பெரிய புராணத்தில் சுந்தரர் - பரவையார் ஊடலைத் தீர்க்க இறைவனே இருமுறை தூது சென்ற செய்தியும் உண்டு.

ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு உணர்த்தும் ஆற்றலுடைய மக்களைத் தூது விடுத்தலே உலக வழக்கில் தகுதியுடைதாயினும், செய்யுள் வழக்கில் அஃறிணைப் பொருட்களையும் அங்ஙனம் தூது விடுப்பதாக அமைதல் மரபு. நாயொன்றைத் தூது விடுத்த செய்தியும் உள்ள தென்பர்.

தலைவன் தலைவியர் இங்ஙனம் தூது விடுதற்குக் காரணம் அவர்களுடைய காம மயக்கமே என்பர் இலக்கண ஆசிரியர்கள். தூது விடப்படுவனவாக அமைக்கப் பெறும் பொருள்கள் தூதாகச் சென்று வர வேண்டும் என்பது அவர்கள் கொள்கையன்று. அங்ஙனம் தூது செல்வதும் நிகழத் தக்கதன்று. விரக தாபத்தால் பலபடியாகப் புலம்பும் ‘காமம் மிக்க கழிபடர் கிளவி’ வகைகளுள் இதுவும் ஒன்று. அல்லாமலும் கவிஞர் தம்முடைய கவித் திறமையைக் காட்டுவதற்கு நிலைக்களனாக அமைத்துக் கொண்ட அமைப்பாகிய இது கற்பனைக்கு இலக்கியமேயன்றி, இயற்கைக்கு ஒவ்வாதது. சுவையானவற்றை எல்லாம் ஒன்றாகிக் காட்டும் நாடக வழக்கிற்கு இஃது இனமாகும். சங்க இலக்கியங்களில், நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு என்பனவற்றில் அஃறிணைப்



பொருள்களைத் தூது விட்டதாக அமைந்த பாடல்கள் சில உள்ளன. தேவாரத்திலும், திவ்வியப் பிரபந்தத்திலும் அத்தகு பாசுரங்கள் உள்ளன. கலம்பகம் முதலிய பிரபந்தங்களிலும் உண்டு.

தூது விடுவதையே பொருளாக உடைய தனிப் பிரபந்தங்கள் பிற்காலத்தில் எழுந்தன. **தமிழ்ப் பிரபந்த இலக்கணத்தைக் கூறும் பாட்டியல் நூல்களுள் இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத்திரட்டு, சிதம்பரம் பாட்டியல்** என்னும் நூல்களில் மாத்திரம் தூதின் இலக்கணம் காணப்படுகின்றது.

*‘‘பயிறரும் கலிவெண் பாவி னாலே*
*உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்*
*சந்தியின் விடுத்தல் முத்துறு தூதெனப்*
*பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே’’*

என்பது இலக்கண விளக்கச் சூத்திரம்.

‘பாட்டியற் புலவர் நாட்டினர்’ என்ற குறிப்பால் முந்தைய பாட்டியல்களிலும் இவ்வகைச் சிற்றிலக்கியத்துக்குரிய இலக்கணம் சொல்லப் பெற்ற தென்று கொள்ளுவதற்கு இடம் உண்டு. அவை இன்னவை என்று இப்போது அறிய இயலவில்லை.

*பிரபந்தத் திரட்டெனும் பாட்டியல் நூல்*

*‘‘எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை*
*சகிகுயில்நெஞ் சம்தென்றல் வண்டு - தொகைபத்தை*
*வேறுவே றாப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்(பு)*
*ஊறிவா என்றல்தூ து’’.*

எனத் தூதின் இலக்கணத்தை அமைக்கின்றது. இதன்கண் தூது விடுத்தற்குரிய பத்துப் பொருள்களும் (எகினம் (அன்னம்), மயில், கிளி, மேகம், பூவைப்புள், தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு) சொல்லப்பட்டுள்ளன. இப்பத்துப் பொருள்களையும் தூது விடவேண்டும் என்ற வரையறைக்கு மூலம் இன்னதென விளங்க வில்லை. கவிஞர்கள் இப்பத்தும் அல்லாத வேறு பல பொருட் களையும் தூதாக விட்டு நூலியற்றினர். இப்பத்திலும் மயில், குயில், பூவை, என்பவற்றைத் தூதனுப்பியதாக அமைந்த பழைய நூல்கள்

இப்போது கிடைக்கவில்லை. (மலையாள மொழியில், கோகில, மயூர, சக்ரவாக ஸந்தேசங்கள் உள்ளன).

மேலே குறித்த எல்லைக்குள் அடங்காமல், பணவிடு தூது, துகில்விடு தூது, மான்விடு தூது, வனசவிடு தூது (தாமரை), நெல்விடு தூது, விறலிவிடு தூது, அன்புவிடு தூது, என்னும் பல நூல்கள் தமிழில் உள்ளன.

நூற் போக்கிலே புலவர்களால் புலப்படுத்தப்படும் தூதுப் பொருட்கள் பல. மலர்கள், பறவைகள், விலங்குகள், முதலிய பலவற்றையும் அவ்வரிசையில் காணலாம். புகையிலை விடு தூது என்னும் நூலொன்று ஐயரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மிதிலைப்பட்டிக் கவிராயர் ஒருவர் தம் பகைவனாகிய ஒருவன் மீது வசையாகப் பாடிய 'கழுதை விடு தூதும்' தமிழில் உண்டு. தூதுப் பிரபந்தங்களில், ஒரே வகையிலேயே பல உள்ளன. பணவிடு தூது, நெஞ்சுவிடு தூது, விறலிவிடு தூது, என்பன இதற்கு எடுத்துக் காட்டாம்.

தத்தைவிடு தூது (சிவந்த வாயை உடைய கிளி), பிரபந்தத் திரட்டு, இரத்தினச்சுருக்கம் என்ற நூல்களில் வரையறுக்கப்பெற்ற பத்தினுள் ஒன்றாகும்.

திருவரங்கப்பெருமான் மீது பாடப்பெற்ற இந்தக் கிள்ளை விடு தூது அன்றி, அழகர் கிள்ளைவிடு தூது, திருப்பேரூர்க் கிள்ளை விடு தூது, நாராயணசாமி பிள்ளை மீது கிள்ளைவிடு தூது, போன்ற நூல்கள் தமிழில் உள்ளன.

சமஸ்கிருத மொழியிற் பல கிள்ளைவிடு தூதுக்கள் உள்ளன. அவற்றுள் 1. கீரதூதம், 2. சுகசந்தேசம், 3. காங்கமன்னி நம்பூதிரி என்பார் இயற்றிய சுகசந்தேசம், 4. அரங்காசாரியர் இயற்றிய சுகசந்தேசம், 5. மாதவ சந்திரவித்யா ரத்னர் இயற்றிய சுகதூதம் என்பவை அறியப்படுகின்றன. பெருமைகள் பல படைத்த அரங்கமா கோயில் கொண்ட எம்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, தம்மை நாயகியாய் பாவித்து அனுமந்தந் பட்டி, மதுரகவி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தத்தையைத் தூது விடுவதாக விடுத்துப் பாடியதே திருவரங்கர் தத்தைவிடு தூது என்னும் நூலாகும். (தொடரும்)

# திருவேங்கடவன் உலா

**ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.)**

தமிழ் மொழியில் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பாடப்பட்டு வருகின்ற பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையின என்று புலவர் கூறுவர். அவற்றுள் உலா என்பது ஒன்று ஆகும். இச்சொல்லுக்குப் பொருளாவது ஊர்ப்புறம் சென்று சுற்றி வருதல் என்பது, இது பவனி என்றும் கூறப்படும். ''பவனிக்கு வல்விரைந்து பல்லக்கில் வாரும்'' (155.)- என இந்நூலில் வந்துள்ளமை காண்க. பாட்டுடைத் தலைவன் தனது ஊர்தியில் அமர்ந்து பெருந்தெருவில் உலாப் போந்ததாகவும் எழுவகைப் பருவப் பொதுமகளிர் அவன்பால் ஈடுபட்டுத் தமது உள்ளத் தெழுந்த காதற் கருத்துக்களை எடுத்து மொழிந்ததாகவும் புலவர்களால் கற்பனைத் திறங்கள் பலவற்றை தன்னுள்ளே கொண்டதாக விளங்குவதே உலா என்னும் பிரபந்தமாகும்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் பாடாண்திணைக்குரிய நூற்பாக்களும், ''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'' என்பது இப்பிரபந்தத்தைக் குறிக்கின்றது. 'தோற்றமு' மென்றது அக்காமந் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும், அதாவது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம் என்பது. மேலதற்கு அடுத்த நூற்பாவாகிய ''வழக்கொடு சிவணிய வகைமை யான'' என்பதினும் இப்பிரபந்தம் பற்றி அவர் கூறிய விளக்க வுரையாவது- ''இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க் கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது'' என்பதாகும். இத் தொல்காப்பியச் நூற்பாக்களால் இவ்வுலாப் பிரபந்தம் புறப்பொருளின் பகுதியாகிய பாடாண் திணையைச் சார்ந்தது என்பதும், இப்பாட்டுடைத் தலைவன் தேவரும் மக்களும் ஆவர் என்பதும், அவர் தமது

ஊர்தியில் அமர்ந்து ஊரில் உலாப் போந்தகாலை அவ்வுலாச் சிறப்பினைக் கண்ட பரத்தைமகளிர் அவரை நயந்த பக்கமாகப் பாடப்படுவது என்பதும் இது மிக்க பழமையான வழக்குடையது என்பதும் தெரிகின்றன. தேவர் பாட்டுடைத் தலைவனாக அமைந்ததற்குத் திருக்கயிலாய ஞானவுரை என்னும் ஆதியுலாவும், மாந்தர் பாட்டுடைத் தலைவனாக அமைந்ததற்கு மூவருலாவும் உதாரணங்களாகக் கொள்ளுவர்.

இப் பிரபந்தம் உலாப்புறம் என்றும் பறவுலா என்றும் பெயர் பெறுவது உண்டு. புறப்பொருள் திணைப்பகுதியைச் சார்ந்த பிரபந்தம் என்றும், தலைவன் ஊர்ப்புறத்தே சென்ற உலாவைக் குறிக்கும் பிரபந்தம் என்றும் புலவர்கள் இதற்குப் பொருள் கொள்ளுவர். இப் பிரபந்தம் தெய்வங்களின் மீது பாடப்படுங்கால் திருவுலாப்புறம் என்று இதனை வழங்குதல் உண்டு. தமிழ் நாட்டில் உள்ள பல பெருந் தெய்வத் தலங்களுக்கு இத்தகைய உலாப் பிரபந்தங்கள் ஏற்பட்டு அவ்வத் தலங்களின் தெய்வங்களுக்கு ஏற்பட்ட திருத்தேர் விழாவினைச் சிறப்பிப்பனவாகவும் அக்காலத்தில் சேவிக்கத் தக்கனவாகவும் விளங்குகின்றன.

இப்பிரபந்தத்தின் இலக்கணத்தைப் பிற்காலத்ததாகிய பன்னிரு பாட்டியல் சிறிது விரித்துக் கூறுகிறது.

*''முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி''*
*பேதை முதலா எழுவகை மகளிர்கண்*
*டோங்கிய வகைநிலைச் சூரியான் ஒருவனைக்*
*காதல்செய் தலின்வரும் கலிவெண் பாட்டே''*

என்ற இந்நூற்பாக்கள் இவ்வுலாப் பிரபந்தம் கலிவெண்பாட்டால் பாடப்படுவது என்றும், முதனிலை பின்னிலை என்று இரு பகுதிப் படும் என்றும், எழுவகைப் பருவமகளிர் பிரபந்த நாயகனைக் காதலித்துரைத்த கட்டுரைகளை உடையது என்றும் விளக்கு கின்றன. ஈண்டுக் குறித்த முதனிலையை

*''குடிநெறி மரபு கொளல்கொடை விடியல்*
*நன்னீ ராடல் நல்லணி அணிதல்*



*தொன்னக ரெதிர்கொளல் நன்னெடு வீதியின்*
*மதகளி றூர்தல் முதனிலை யாகும்''.*

*''ஆதி நிலையே குழாங்கொளல் என்றெடுத்து*
*ஓதிய புலவரும் உளரென மொழிப''*

என்ற இந்நூற்பாக்கள் உணர்த்துகின்றன. இவற்றால் இப்பிரபந் தத்தின் முதற்பகுதியில் பிரபந்தத் தலைவன் குடிப்பிறப்பும் மரபும் கொடையும் நீராட்டும் அணிகலன் பூணுதலும் நகர் எதிர் கொள்ள ஊர்திகள் இவர்ந்து செல்லுதலும் கூறப்படும் என்றும், இது முதற் பகுதியாகும் என்றும், இதுவே 'குழாங்கொளல்' என்ற பிறிது பெயரினைப் பெறும் என்றும் தெரிகின்றது. இதன் பின்னிலையாவது

*''ஏழு நிலையும் இயம்புங் காலை*
*பேதை பெதும்பை மங்கை மடந்தை*
*அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்*
*பாற்படு மகளிர் பருவத் தாதல்*
*நோக்கி உரைப்பது நுண்ணியோர் கடனே.''*

என்ற நூற்பாவின்படி பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு வகைப் பருவ மகளிர்களையும் அவர்களின் மனவிகார விளைவுகளையும் வருணித்துரைப்பது என்று அறியலாம்.

இப்பாட்டில்

*''பேதைக்கி யாண்டே யைந்துமுத லெட்டே''*
*''பெதும்பைக்கி யாண்டே யொன்பதும் பத்தும்''*
*''மங்கைக்கி யாண்டே பதினொன்று முதலாத்*
*திரண்ட பதினா லளவுஞ் சாற்றும்''*
*''மடந்தைக்கி யாண்டே பதினைந்து முதலாத்*
*திடம்படு மொன்பதிற் றிரட்டி செப்பும்''*
*''அரிவைக்கி யாண்டே யறுநான் கென்ப''*
*''தெரிவைக்கி யாண்டே யிருபத் தொன்பது''*
*''ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது*
*பேரினம் பெண்டுக் கியல்பென மொழிப.''*

பொய்கையார்.

என்ற நூற்பாக்களால் பேதை முதலிய ஏழு பருவங்கட்கும் உரிய ஆண்டளவுகளைக் கூறுகின்றது. பிங்கல நிகண்டு

''பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணென
மற்றிவை யேழும் பொற்றொடி மாதர்க்
குருவம் பற்றிய பருவமாண் டேழொடு

இப் பிரபந்தத்தைப் பற்றித் திருமலையிலுள்ள கோயில் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பட்டுள்ள செய்தி தமிழறிஞர்க்கு மிக்க வியப்பூட்டுவதாகும். அக்கல்வெட்டு ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முற்பட்ட பழமையுடையது ஆதலாலும் இப்பிரபந்தத்தின் சிறப்பினை அறிந்து கொள்ளுதற்கு உதவும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சிலாசாஸனங்கள். 2-வது தொகுதி எண் 136. (எண் 336. திருமலைக் கோயில்) (On the north wall of the second prakara in Tirumala Temple.)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஆயிரத்து நானூற்று ஒருபத்து எட்டிந்மெ(மே)ல் செல்லாநின்ற நள வருஷம் அபரபக்ஷத்து த்விதியை திதியும் புதவாரமும் பெற்ற பூசந்துனாள் திருமலையில் ஸ்தானத்தாரெ(ரே)ாம் திருமலை திருப்பதியில் கந்தாடை அப்பச்சியார்.

2. அண்ணாவுக்கு சிலாசாஸனம் பண்ணி குடுத்தபடி திருவெ(வே)ங்கடமுடையான் பதினஞ்சு னாளைக்கொருக்கால் வெள்ளிக்கிழமைனாள் புழுகுகாப்பு முறைதெ(தே)ாறும் புழுகு காப்பு சாத்தி அருளிற வெ(வே)ளையிலே கந்தாடை இராமானுஜ அய்யங்கார் பெ(பே)ரில் உலாவும்.

3. கெ(கே)ட்டருளி ...............

இக்கல்வெட்டு திருமலைக் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் உள்ளது. இது விசயநகர மன்னராகிய சாளுவ நரசிம்மராயருடைய ஆட்சிக் காலத்தில் அமைந்ததெனத் தெரிகின்றது. இதன் இரண்டாவது வரியி னிறுதியில் ''கந்தாடை இராமாசனுச அய்யங்கார் பேரில் உலாக்



கேட்டருளி'' என்றும் ஏழாவது வரியின் தொடக்கத்தில் 'இராமானுச அய்யங்கார் உலாக் கெ(கே)ட்டருளி' என்றும் குறித்துள்ள ஓர் உலாப் பிரபந்தம் ஏற்பட்டிருந்த தென்றும், திருவேங்கட முடையான் ஒரு திங்களில் ஒரு பக்ஷத்துக்கு ஒருமுறை வெள்ளிக் கிழமை நன்னாளில் புழுகுக்காப்புச் சாத்தித் திருமஞ்சனம் கொண்டருளும் பொழுதில் அவ்வுலாப் பிரபந்தத்தைக் கேட்டருளி அதிரஸப்படி அமுது செய்தருளுவதற்காக நிபந்தம் செய்யப்பட்ட தென்றும், அக்கட்டளையிட்டார் கந்தாடை அப்பாச்சி அண்ணா அய்யங்கார் என்றும் குறித்துள்ளது.

திருவேங்கடமுடையான் கேட்டருளுதற்கென்று அமைந்த உலாப் பிரபந்தம், திருவேங்கடவுலாவேயாகும். திருவேங்கடத் திருப்பதியின் பெயரால் நிலவித் திருவேங்கடமுடையான் பெருந்திருநாள் திருத்தேருலாவினைச் சிறப்பித்துப்பாடி, அப்பெருமான் பவனி கொண்டருளத் தொடங்கும் திருமஞ்சன காலத்தில் சேவித்தற்குரியதாக அமைந்துள்ளமையால் பெருமாள் திருச்செவி சாற்றி அருளுதற்குரிய உரிமைப் பேறுடைத்தாயது இப் பிரபந்தமேயாகுமென்பது ஒருதலை.

இனி, கல்வெட்டுள் ''கந்தாடை இராமாசனுச அய்யங்கார் பேரில் உலா'' என்றிருத்தல் என்னையோ எனின், அக்கல்வெட்டு ஏழாவது வரியில் ''இராமானுச அய்யங்கார் உலா'' என்றே இருத்தலால், அத்தொடர் ''கபிலர் பாட்டு'' என்ற தொடர் போலச் செய்யுட் கிழமைப் பொருளதே யாமெனக் கொண்டு இராமானுச அய்யங்கார் பாடிய உலா என்று பொருள் கூறின், இத்திருவேங்கட வுலாப் பிரபந்தம் திருவேங்கட முடையான் திருவடித் தொண்டு பூண்ட ஆசாரியப் பெரியார் ஆகிய கந்தாடை இராமானுச அய்யங்கார் பாடி அப்பெருமான் திருச்செவி சாற்றியருள 'அருளப்பாடு' கொண்டது எனக் கொள்ளலாகும். திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறியருளியவாறு 'ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடப் பெருமான்', ஆசாரிய புருஷராகிய கந்தாடை இராமானுச அய்யங்கார் திருவாக்காக அமைந்த இவ்வுலாவையும் திருச்செவிக் கொள்ள இசைந்தருளினான் என்னலாம்.

இனி, இப் பிரபந்தத்தின்கண் 191-ஆம் கண்ணியில்

*''அஞ்சனவெற் பாளற் ககலாம லூழியஞ்செய்*
*மஞ்சன காலத்திரா மானுசனும்''*

என்று அப் பெரியார் குறிக்கப் பெற்றுமிருத்தலின் அப்பெயரைச் சுட்டியுள்ள இப் பிரபந்தத்தை அவர்க்குப் பல ஆண்டுகள் பின் வந்த கந்தாடை அப்பாச்சி அண்ணா அய்யங்கார், அவர் பெயரால் அமைந்ததென மேலோட்டமாகக் குறிப்பித்தனர் என்னவுமாம். இக்கல்வெட்டின் வாசகம் இவ்வாறு இருதிறனாக இருந்ததாயினும், இதன் கருத்து திருவேங்கட முடையான் திருமஞ்சன காலத்துத் திருச்செவி சாற்ற அருளப்பாடு கொண்டது இத் திருவேங்கட வுலா என்பதே யாமெனக் கொள்ளுக.

மேற் காட்டிய கல்வெட்டினும் இந்நூலினும் குறிக்கப்பட்ட கந்தாடை இராமானுச அய்யங்கார் என்பார், வைணவ சம்பிரதா யத்தில் பெரிய ஜீயர், வரவரயோகி, அழகிய மணவாளமுனி எனப் பாராட்டப்பட்ட மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தி யாகிவிசய நகர மன்னனாகிய சாளுவ நரசிம்மன் காலத்தில் அவன் போற்றுதலைப் பெற்றுத் திருவேங்கடத் திருமலையில் இராமானுச கூடத் தலைவராகவும், தென்கலை வைணவாசாரியாராகவும் விளங்கியவர் என்பது அம் மன்னன் காலத்துக் கல்வெட்டுக்களால் அறியலாம். இந்நூலின் தொடக்கத்துள்ள குருபரம்பரைத் துதியும் நூலினுள் குறித்துள்ள வைணவ சம்பிரதாயச் செய்திகளும் இந்நூலாசிரியரின் பழுத்த வைணவப் பிரபத்தியையும் புலமையும் காட்டுகின்றன. தலவிசேடம் கூறும் பகுதியில் ஏழுமலைகளையும், அங்குப் பேறு பெற்ற முனிவர்களையும், தீர்த்த வைபவங்களையும், சுப்பிர மணியன் சிவனாருரைப்படித் திருமலையில் திருமாலைத் தொழுது வரங்கொண்ட திறத்தையும், பெருமாள் திருக்கோனேரித் தென்கரையில் வைகுந்த விமானத்தில் எழுந்தருளிய திறத்தையும் தன் புராணச் செய்திக்கு ஒப்புக் கூறியுள்ளார். பின்னர் திருவேங்கட முடையான் அற்புதத் திறங்களைப் பாவிப் பாராட்டு முறையில், செண்பக வாசற் கோன் - (36ம் கண்ணி), 'அத்தாணிப் புளியினான் (37)' 'மலைகுனிய நின்றான் (37)' ''புழுகொழுகு மேனியான்'', காணிக்கை நித்தல் பத்தாயம் நிரப்புவான் (40), ''தொண்டரெலாம் வந்து பதங் கண்டு போமென்று கரங் காட்டுவான் (41) என்று



பாடிய புகழுரைகள் திருமலையில் அப்பெருமான் கொண்டருளிய திருக்கோலம் பற்றிய செய்திகளாகும். இவைகள் திருமலையிலுள்ள கல்வெட்டுக்களிலும் பலபடியாகக் காணப்படுகின்றன.

இப் பராவுதற் பகுதியில் ''வெறுங்கை வேடன் பெரிய வேங்கடத்து வாணன்'' (42) என்று ஒருபெயர் குறித்துள்ளார் இப்பிரபந்தகாரர். இதற்குரிய வரலாறு சம்ஸ்க்ருதம், தெலுங்கு கன்னட மொழிகளிலுள்ள வேங்கடாசல மாஹாத்மியம், இதிகாசமாலை ஆகிய நூல்களிலேனும் தல புராணத்திலேனும் காணப் பெறவில்லை. ஆயினும் ஸ்ரீராமாநுஜருடைய மாதுலராகிய பெரிய திருமலை நம்பியின் முன்பு திருவேங்கட முடையான் ஒரு வேட்டுவச் சிறுவனாகத் தோன்றியருளிய ஐதிஹ்யம் ஒன்றுண்டு. அவர் தம் ஆசிரியராகிய ஆளவந்தாரின் ஆணைப்படித் திருமலையில் திருவேங்கட முடையானுக்குக் கைங்கரியம் புரிந்து வந்த காலத்தில் பாபநாச தீர்த்தத் துறையினின்றும் திருமஞ்சன தீர்த்தம் குடம் பளுவு குறைந்துள்ளதனைக் கண்டு வியந்து திரும்பிப் பார்த்த அளவில் ஒரு வேட்டுவச் சிறுவன் தன் தோளில் வில்லும் அம்பு முடையனாய்த் தீர்த்தக் குடத்தில் தான் அம்பாவிட்ட துளைவழித் தாரையாய்ச் சொரியும் நீரினைத் தன்னிருகையாலும் முகந்துண்டு வருதலைக் கண்டார். எம்பெருமானுக்குரிய திருமஞ்சன தீர்த்தத்தை வேட்டுவச் சிறுவன் இழவிழிவு செய்தா னென்று வருந்தி நிற்க, வேட்டுவச்சிறான் பரிவுடன் அவர் முன்னெய்தி ''தாத்தா'' என அருமையாய் விளித்து ''நான் அம்பு விடும் எல்லையில் ஆகாச கங்கையுள்ளது: அது நமக்கு உகந்த தீர்த்தமாம்'' என்று கூறிக் கடிதின் மறைந்து விட்டான் என்பது அவ்வைதிஹ்யம். 'நமக்கு உகந்த தீர்த்தமாய்' என்றமையால், திருவேங்கடமுடையானே இங்ஙனம் தோன்றிக் கூறியருளியதாகப் பெரியோர் கருதினர். வில்லும் அம்புங்கொண்ட இவ் வேட்டுவத் தோற்றம், இங்குக் குறித்துள்ள 'வெறுங்கை வேடன்' என்ற பெயருக்குப் பொருந்துமாறில்லை. இப் பிரபந்தகாரர் அவ்வேட்டு வத் திருக்கோலத்தில் பெரிதும் ஈடு பாடுடையராய் இந்நூலின்கண் பின்னும் இருமுறை ''கன்ன மிட்டு வேடு பகிர்ந்த வெறுங்கையான'' (390), என்றும், ''வெறுங்கை வேடனெனும் பேரினிமேல் வேண்டாவோ'' (417) என்றும் கூறுகின்ற ராதலின் இவ்வரலாறு பிறிதாதல் வேண்டும். ''கன்ன மிட்டு வேடு பகிர்ந்த

வெறுங்கையான்'' என்றுள்ள தொடர் இதன் வரலாற்றை ஒருவாறு புலப்படுத்துகிறது. இதற்குப் பொருள் காணில், ''களவுத் தொழில் கொண்ட வேடுவர் தாம் களவு கொண்ட பொருள் பகிர்தலின், வெறுங்கையனாக்கிய வேட்டுவ'' னென்று கருத்துக் கொள்ளுதலே பொருத்தமாகும். இவ்வாறாயின் திருவேங்கடமுடையான் முன்பு கள்வர் மலையாக விருந்த வடவேங்கடத்தில் கோயில் கொண்டருளிய தலைநாளில், அவர் குழுவினுள் தானும் கலந்து இணக்க முற்றுக் களவுத் தொழில் புரிந்து தாம் கொண்ட கொள்ளை பகிர்தலின்கண் அத்தொழிலுக்குப் புதியோனாகிய தான் களவிற் கன்றிய அவர்களால் ஏமாற்ற முற்று வெறுங்கை யனாயினன் என்பது கருத்து ஆகும். இவ்வரலாறு அக்காலத்துப் பெருவழக்கா யிருந்தமை பற்றியே இப் பிரபந்தகாரர் அத்துணைப் பாராட்டிப் பரவியுள்ளார்.

அகநானூறு ஆகிய சங்க நூலில் ''கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான், மழபுலம் வணக்கியமாவண் புல்லி, விழவுடை விழுச்சீர் வேங்கடம்'' (61) என்றும், ''கல்லா விளையர் பெருமகன் புல்லி, வியன்றலை நன்னாட்டு வேங்கடம்'' (83) என்றும் குறித்துள்ளமையால் வடவேங்கடம் பண்டு கள்வர் நிலமாக இருந்தமையும், 'புல்லி' என்ற கள்வர் தலைமகன் ஆட்சியின் அமைந்தமையும், அக்கள்வர்கள் கெய்வம் பராவி விழாக் கொண்ட செய்தியும் தெரிகின்றன. ஆதலின் பின்பு அங்குக் கோயில் கொண்டருளிய எம்பெருமான் அந்நிலத்து வேட்டுவருடன் அவர் வினைமேற் கொண்டு அவர் வியக்க வினையாடல் புரிந்தனன் போலும். பெரிய திருமலை நம்பி முன்பு தோன்றிய அவ்வேட்டுவத் திருக்கோலமும் அந்தக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நோக்கின் அத்திருவிளையாட்டின் நிகழ்ச்சியும் சிறப்பும் நன்கு புலப்பாடாகும்.

இப்பிரபந்தகாரர் இப்பிரபந்தமுடையானை ''வடமலை யான்'' (காப்பு) ''வடமாமலையான்'' (261), 'வட மலையான்' (607) என்று பலபடியாய்ப் பாராட்டுவர். இஃது என்னெனின், தொல்காப்பியப் பாயிரம், இசை நுணுக்கம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபுத்தூர் பாரதம் முதலிய தொன்னூல்கள் இவ் வேங்கடம் தமிழ் நாட்டின் வடக்கு எல்லை மலையாக அமைந்ததை தெளிவித்தற்கேயாகும். (தொடரும்)



# பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய புலவரான நெல்லை நகர் அருளாளதாசர்

ஆசிரியர் மு. அருணாசலம்.

அளவாற் பெரிய பாகவத புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்தவர் இவ்வாசிரியர். இவர் நெல்லிக் கதிபதி. இவர் பெயர் வரதன்; வரதராச ஐயங்கார் எனவும் வழங்கும்; குணச் சிறப்பினாலும் நூல் செய்த சிறப்பினாலும் அருளாளதாசர் என வழங்கப் பெற்றார். சிறப்புப்பாயிரம் இதை உணர்த்துகிறது.

*எதுகுலத்து வருமுறையோன் சரிதையைநற்சுகன் இசையால்*
*உதவு சொலைத் தமிழினால் உரைத்தவன்வண் திருவரங்கம்*
*பதியமர் வேத்திரக்கரத்தோன் பழமறையோன் வரதன் நெல்லிக்*
*கதிபதியாய் உயர்ந்திருபே ரருளாள நாதனரோ. 1:53*

இப்பாடலால் இவர் திருவரங்கத்தில் வாழ்ந்தவர் என்றும், இவர் வரதன் என்று சொல்லப்படும் அருளாளநாதன் என்று பெயர் பெறுகிறார் என்றும் அறிகிறோம். இதற்கு அடுத்த பாட்டு, நூல் செய்த காலம் கூறுவது (காலம் என்ற தலைப்பில் பார்க்க). அப்பாடல் இவரை நெல்லிநகர் வரதராசன் என்றும், நூலை வாசுதேவ கதை என்றும் கூறுகிறது; வாசுதேவன் - வசுதேவர் புதல்வனான கண்ணன். பாகவதம் பகவானுடைய கதையைச் சொல்வது; பகவான் - கிருஷ்ண பகவான் ஆவார். இப்பாகவதம் கிருஷ்ண பகவான் கதையையே அதிகமாய்ச் சொல்லுவதால் 'வாசுதேவ கதை' என்று பெயர் பெற்றது; நூலின் பல இடங்களில் இந் நூற்பெயர் 'வாசுதேவ கதை' என்றே சொல்லப்படுகிறது.

நூலின் இடையிலும், இந்தக் கதையை வடமொழிப் பதி னெண்ணாயிரம் சுலோகத்தைத் தமிழில் நெல்லி வரதையன் 9000 விருத்தப்பாடலாகச் சொன்னான் என்று பாடல் சொல்லுகிறது. (14:5).

*இதுசலால் உருக்கு மணிக்குநா ரதன்தான்*
*இசைத்ததை நைமிசா ரணியத்து*
*அதிற்சவு னகனே முதல்வரெண் பத்தெண்*
*ணாயிரர் முனிவர் கேட்பச்*
*சதுர்மறைச் சூதன் உரைத்திடும் நூல்சுலோக*
*மாம்பதி னெண்ணா யிரமும்*
*விதிதமிழ் நெல்லி வரதையன் சொன்னான்-*
*விருத்த மொன்பான் சகசிரமே.*

வடமொழிப் புராண பாகவதம் வியாசர் செய்தது. 36,000 சுலோகமுடையது. மகாபாகவதம் என்று இது வழங்கும். இதில் 25 கீதைகள் உள்ளன. ஆறு அவதாரக் கதைகள் இதில் சொல்லப் படுகின்றன. பெரும்பாலும் அனுஷ்ட்டுப்புச் சுலோகத்தாலும் சிறுபான்மை மற்றவற்றாலும் செய்யப்பட்டுள்ளது. அத்தியாயம் 600. இதில் அத்தியாயம் ஒவ்வொன்றின் தலைப்பிலும் ஒரு கடவுள் வாழ்த்து உண்டு. நாரத முனிவர் ருக்குமிணிப் பிராட்டியாருக்கு இதைச் சொன்னார். பின்னர் பரீட்சித்து மன்னனுக்குச் சுகமுனிவர் கூறினார், இதுவே பதினெண் புராணத்துள் ஒன்று என்பர். இதையே அருளாளதாசர் தமிழில் பாடினார்.

வரதராச ஐயங்கார் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஐயங்கார் என்பது இன்னும் பிற்காலச் சொல். 17ஆம் நூற்றாண்டில் பல பிரபந்தங்கள் பாடிய மணவாளதாசர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்று வழங்கப் பெறுகிறார். இதற்கு முன் இச்சொல் லுக்குச் சிறப்பான ஆட்சி இருந்ததாகத் தெரியவில்லை. வரதன், வரதராசன், வரதையன் என்றே இவர் சொல்லப் பெறுகிறார். 16ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஐயங்கார் என்ற சொல்லாட்சி பெருகிவிட்ட படியால், ஐயன் ஐயங்கார் ஆகிவிட்டார். பாடல்கள் சொல்லுகின்ற வரதர் எப்படி அருளாளதாசர் ஆனார் என்பது தெரியவில்லை. தாசர் என்று பெயர் சூட்டிக் கொள்வது அக்காலத்தில் வைணவத்தில் ஒரு சிறப்பாய்க் கருதப்பட்டது போலும். பிள்ளை உறங்காவில்லிதாசர் (12ஆம் நூற்றாண்டு), கூரகுலோத்தம தாசர் (14ஆம் நூற்றாண்டு), அரிதாசர் (16ஆம் நூற்றாண்டு), மணவாளதாசர் (17ஆம் நூற்றாண்டு) முதலான பெயர்களை நோக்குக.

**புராண பாகவதம்**

இத்தமிழ்ப் பாகவத புராணம், வாசுதேவ கதை என்றும்



புராண பாகவதம் என்றும் பெயர் பெறும். 130 படலங்களும் 9147 செய்யுட்களும் உடையது. செவ்வைச் சூடுவார் பாகவதத்தைப் போல இதில் ஸ்கந்தப் பாகுபாடு இல்லை. முதலில் கடவுள் வாழ்த்துப் பகுதி ஆறு பாடல், முறையே ஆலிலையிற் பள்ளி கொண்ட குழவி, யாவும் தானாகி நின்ற தலைவன், பரமபதத்து ஒளி கொளரி, தசரதனடியில் வீழ்ந்த செம்மல், வாசுதேவன், அரங் கேசனார் மகிழ்திருப்பணி செய் ஆயனார் என்று வணக்கம் சொல்கிறார். முதல் படலம் திருவரங்கப் படலம் 155 பாடல். முதல் வாழ்த்து காவிரிக்கு.

*சீராரும் இந்திரை மண் மகள் சேர்ந்து போற்ற*
*ஓரா யிரவாய்ப் பணிமீது உறைவானை உள்கி*
*நீராயுழ னந்திரு பாலும் நிறைந்து நேர்ந்த*
*காராளன் பொழில்சூழ் திருக்காவிரி வாழி வாழி.*

பிறகு அரங்கனாரைப் பாதாதிகேசமாகப் பல பாடல்களில் வாழ்த்துகிறார். அரங்கவீசர் அடியிணை, பீதாம்பரம், உந்திமலர், உதரபந்தனம், கவுத்துவம், வாயும் முறுவலும், கண்டம், கண் ணிணை, திருமுகச் செவ்வி, நீலமேனி, மகுடம், பஞ்சாயுதங்கள், பின் அரங்க நாயகி, பூதேவி, நீளை, கோதை-சூடிக் கொடுத்தவள், பிரணவ விமானம், அனந்தன், கருடராசன், சேனாபதி, அனுமன், வாயில் காவலர்; பிறகு தலங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார். முதலில் அரங்கம். பின் 83 பாடல்களில் 108 திருப்பதிகளுக்கும் வாழ்த்துக் கூறுகிறார். அடுத்த பாடலில் இத்தலங்களில் எழுந் தருளியுள்ள மலர் மங்கை நிலமங்கை சூழுந் தேவர். அடுத்த பாடல் பிரகலாதன் முதல் விபீஷணன் வரையுள்ள பாகவதர்கள். பின்னர் பன்னிரு ஆழ்வார், இராமானுசர், நாதமுனி, உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானார், கூரத்தாழ்வான், பெரியநம்பி பிள்ளை ?, நம்பிள்ளை, மணவாள மாமுனி; நாதமுனி, சீரங்க நாராயண முனி, பராசரபட்டர், வேதவியாச பட்டர், கந்தாடை யண்ணன்; வதிட்டையாயன் (2 பாடல்கள்). பின்னர் மீண்டும் கண்ணனைப் பல பாடல்களால் துதித்து, சுக முனிவரையும் வணங்கி, சாத்துவிக மகாபுராணமாகிய இதைச் சொல்லத் தொடங்குகிறார், இவ்வாறு, பாயிரம் என்று சொல்லத்தக்க திருவரங்கப் படலத்துள்ள 155 பாடல்களில், இவர் மிக விரிவாகத் துதி சொல்லியிருக்கிறார். தமிழில் இவ்வளவு

அதிகமான கடவுள் வாழ்த்துப் பகுதி வேறெந்த நூலிலும் இல்லை. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் யாவும் வாழி என்ற முடிவையே கொண்டவை. மேலும் இங்கு, பெரும்பான்மைப் பகுதி, பாடல் தோறும் யாப்பை மாற்றி இவர் பாடிவருவது ஒரு விசித்திர அமைப்பு.

இது மட்டுமல்ல. இந்தப் பாகவதம் 132 படலங்கள் உடையது என்று சொன்னோம். ஆசிரியர் ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் ஒரு திருமால் வணக்கப் பாடல் சொல்லியிருக் கிறார். இவற்றையும் திருவரங்கப் படலப் பாடல்களையும் சேர்த்தால் இது 300 பாடல்களுக்கு மேற்பட்ட ஒரு சிறந்த திருமால் தோத்திர நூலாகும். பல சமயம் இரண்டு துதிப் பாடல்களைத் தருகிறார். முதல் பாடலில் துதிமின் தொண்டீர் என்கிறார். இரண்டாம் பாடல் வரும்போது, 'என் மனனே, உலகே ழயின்றவன் நாமம் பகர்தி' என்பது போன்ற தொடர்களால் நெஞ்சுக்குச் சொல்லுகிறார். சிற்சில இடங்களில் அந்தந்தப் படலத்தில் கூறப் போகும் பொருளைச் சுருக்கி இவ்வாறெல்லாம் செய்த கண்ணனை வணங்குகிறேன் என்கிறார். பன்னிரு நாமங்களையும் சொல்லி வணங்கும் பாடல்கள் பல. ஒரு பாடல்:

கேசவன் நாராயணன் உயர்மாதவன்
கிளர் கோவிந்தன் விண்டு
மாசகன் மதுசூதன் திருவிக்ரமன்
மன்னு வாமன் அவிர் மலியும்
தேசுறு நிகரில் சீதரன் இருடிகேசன்
ஒண்பதும நாபன் சீர்
வீசிய தாமோதரன் என உரைமின்,
வினையற உயர் பதத் துறலாம்.

ஒரு பாடலில் பன்னிரு மாதப் பெயர்களும் அமையப் பாடுகிறார்.

வாமமவிர் சித்திரை வை காசியானி கலையாற்றி
வெண்ணைக்காடி யாவணிக்கு ணின்று கஞ்சத்
தீமையன் மண் விழப் புரட்டாசியற் பசிசு
பாலன் சிரந்துணியவே ஆழியைவிடு நற்றேவன்
சோமகுல அந்தகன் சேய்முனர் நடுங்காத் திகைத்தாள்
தூசிடைமாளா தருளுந் துளபமார் கழியான்



பூமன் வனிதைக் காய்மாசில் சாபங்குனியப் போரினில்
தெசமுகனைச் செற்றானைப் போற்றி செய்வாம்.

பல இடங்களில் தசாவதாரங்களையும் குறித்துப் பாடுகிறார்.

ஊரிலி யுருவம் இலிகுணமிலிபே
ரிலியிழை கருமமொன்றிலியால்
ஆருனை யறிவார் அறிந்தவர் பிறவி
அளக்கரின் வீழ்ந்திடா வண்ணம்
சீறாறு மீன்கூ ருமகிரி மான் குறள்
மழுச் சிலையலா யுதராய்
நேரில் யாதவனா யிவணினிற் றோன்றி
நிகரிலாக் கற்கியு மாவாய்.

ஒரு துதிப் பாடலில் முத்தி நகர் ஏழையும் குறிப்பிடுகிறார்.

மாசில் அயோத்தி மதுராபுரி மாயா
காசி உயர்காஞ்சி கவின்சேர் அவந்திகா
ஏசில் கடற் றுவரையோ டிவ்வெழு நகரின்
ஆசகல் முத்தியருள் அச்சுதன் பதம்பணிவாம்.

ஒரு பாடலில் எண்களை நிரல்பட வைத்துச் சொல்கிறார்.

ஒருதனி முதல்வன் இருசுடராகி
உயர்ந்திடு மூர்த்திகள் மூன்றாய்
அருமறை நான்காய் ஐந்து பூதமுமாய்
ஆறுசாத் திரங்களாய் ஏழு
பரவையாய் எட்டுப் பருப்பதமாகிப்
பவமிலா நவக்கிர கத்தின்
சுருபமாய் நிலத்தில் தசவவ தாரம்
ஆகிய சோதியைப் பணிவாம்.

கம்பராமாயணத்தில் நாந்திச் செய்யுள் என்னும் நாடிய பொருள் கை கூடும் என்ற பாடலைத் தழுவி இவர் தம் நூலுக்கும் இரு பாடல்கள் அமைத்திருக்கின்றார். முதல் பாடல் பின் வருவது:

நீதிசேர் செல்வம் வாய்க்கும், நிவந்த மெய்த்தருமம் நீளும்,
ஏதமின் ஞான மெய்தும், இந்திரை இனிது நோக்கும்,

*சேதிப ராச னோடச் செருவென்று விதற்ப னல்குங்*
*கோதையை மணந்த மாயோன் சிலைவலி கூறு வோர்க்கே.*

நாச்சியார் அவதாரப் படலத்தில் நாச்சியார் திரு அவதாரம் செய்து வளர்ந்து வருகின்ற நிலையைக் கூறுமிடத்து, பிள்ளைத் தமிழுக் குரிய பெரியாழ்வார் கருத்துக்கள் பலவற்றைப் பாடலில் அமைத்துப் பாடுகின்றார். தாலப் பருவத்துக்குரியது பின்வரும் பாட்டு:

*தாலேலோ வினைதானி லாதவள்*
*தாலேலோ சுதை தங்கு பொற்குயில்*
*தாலேலோ கமலா சனத்தவள்*
*தாலேலோ திரு வென்று சாற்றினார்.*

தொடர்ந்து விளையாட்டு. செங்கீரையாடுக செம்மையுற, சப்பாணி கை கொட்டுக சந்தமுற, தவழ்ந்தே விளையாடுதி, தோள் வீசி நடந்திடு, தளரும் நடை நீ நட, அச்சோ புயலே, புறம்புல்குதி, அப்பூச்சி கண்டாடுக, அம்புலி வா என ஓதுதி, அக் காக்கை பொன்னால் தாயார் அமர் கோல் கொடுவா, தும்பி மலர் ஓது என்றெல்லாம் தாயார் போற்றுவதாகக் கூறுகிறார். விளையாட்டைச் சொல்லும்போது சிறுபோது சிறுசோறு அடுதல், கழங்காடுதல், அம்மனை பாடியாடுதல், பந்தாடுதல், ஊசல் ஆடுதல், நீராடல், மலர் கொய்தல் என்பதைத் தனித்தனி விரித்துரைக்கிறார்.

இயற்கையை இவர் வருணிக்கத் தலைப்படும்போது எங்கும் மரவகைகளை அடுக்கிச் சொல்வார். (7:32-35)

**பாகவதக் கதை**

இந்தப் பாகவதத்தின் கதைப் போக்கும் தொடர்பும் விளங்கும் பொருட்டுக் கதையைச் சுருக்கி இங்கே தருகிறோம். ஆறாம் அத்தியாயத்தில் நாச்சியார் திருஅவதாரப் படலம் என்ற பெயரோடு கதை தொடங்குகிறது. கண்ணனுடைய தேவியாகிய ருக்குமிணிதேவி விதர்ப்ப நாட்டு மன்னன் மகளாகப் பிறந்து மணப் பருவம் அடைந்தபோது நாரதமுனிவன் வருகிறான். (6). 78 படலம் வரையில் அவளுக்கு நாரதமுனிவன் கூறும் வரலாறு ஆகும். முனிவன், கஜேந்திர மோட்சம், வராக அவதாரம், கபில முனி



வரலாறு, நரசிங்க அவதாரம், துருவன், மச்சாவதாரம், கூர்மாவதாரம் (7-13) ஆகியன சொல்லுகிறான். அடுத்த (14) அண்டப் படலம் என்பதில் பூலோகம் முதலான உலகங்கள் தீவுகள் முதலியன மற்றப் புராணங்களில் உள்ளது போல விரிவாகச் சொல்லப்படுகின்றன. பின்னர் பிருதுச் சக்கரவர்த்தி, இடபராசன், வாமன அவதாரம், அஜாமிளன், உருக்குமாங்கதன், அம்பரீடன், பரசுராம அவதாரம், இராகவன் அவதாரம் ஆகிய வரலாறுகள் சொல்லப்படுகின்றன (15-22). அடுத்த 42 படலங்கள் (23-64) கண்ணன் பிறந்தது முதல் அவனுடைய படத்தை ருக்குமிணி காண்கிற வரையில் கண்ணனுடைய வரலாற்றை நாரதமுனிவன் கூறுவதாக உள்ளன. தேவகிப் படலம் (23) கம்சன் தங்கையாகப் பிறந்த தேவகியின் மணமும் அவள் பெற்ற குழந்தைகளைக் கம்சன் கொன்ற செய்தியையும் கூறுகிறது. தேவர்கள் திருமாலை வேண்ட அவர் பூவுலகில் தேவகி வயிற்றில் கருவாய் வந்து தங்குகிறார். சிறையிலிருந்த வசுதேவர் ஆயர்பாடியில் நந்தகோபன் மனைவி யசோதையினிடம் அக்குழந்தையைக் கொண்டு போய் விடுகிறார். உரோகிணி பெற்ற பெண்ணைத் தேவகியின் பெண் என்று எண்ணிக் கம்சன் கொல்ல முயலும்போது, அக்குழந்தை மாயையாக மாறி உன்னைக் கொல்லத் திருமால் குழந்தையாகப் பிறந்திருக்கிறான் என்று சொல்லி மறைகிறது. கம்சன் தன் துன்மந்திரிகளோடு ஆலோசித்து அக்குழந்தையைக் கொல்ல வழி என்ன என்று தேடுகிறான் (24). பூதனைவதை, சகடாசுரன், காரியாசுரன், குக்குடாசுரன் வதை (25-28).

கண்ணன் வெண்ணெய் திருடுதல், அவன் வாயினுள் உலகத்தைக் காணுதல் (29). ததிபாண்டன் முத்தி (30). மருதமரமாக வந்த அசுரர், பகாசுரன் அகாசுரன்வதை (31-33). கண்ணன் தானே ஆயர் சிறுவராயும் கன்றுகளாயும் இருந்து மாயை காட்டுதல் (34). தேனுகன் வதை, காளியமர்த்தனம், பிலம்பன் வதை, கோபியர் ஆடை கவர்தல், வனத்தில் இருந்த வேதியர் மனைவியருக்கு அருள் செய்தல், கோவர்த்தன கிரியைத் தூக்கல், மழையிலிருந்து காத்தல், குழலூதுதல் (35-42). அம்பிகா வனத்தில் நந்தனை நாகம் பற்றி விழுங்கக் கண்ணன் திருவடிபட்ட மாத்திரத்தில் நாகம் வித்தியாதரனாகி விமானத்தில் ஏறிச் செல்லுதல் (43). கும்பகன் பெண் நப்பின்னையை ஏழு விடைகளை அடக்கி

மணத்தல் (44). அருட்டாசுரன், கேசி வதை வியோமனன் வதை (45-47). அக்ரூரன், சமந்தக மணியின் வரலாறு (48). தாருகன்வதை (49). சுதாமகாவுக்கு அருளுதல், திரீவக்கிரி என்ற கூனிக்கு அருளுதல் (51). இந்திர தனுசை யொத்த ஒரு வில்லை யெடுத்து வளைத்து ஒடிக்க, சூழ்ந்த சேனையை அழித்தல் (52). கஞ்சன் செய்யும் கொலை முயற்சி, குவலயா பீடம், சாணூரன், கம்சன் வதை (54-56). உக்கிர சேனன் முடிசூடுதல், சாந்தீப முனிவர்க்கு இறந்துபோன பிள்ளையை வருணனிடமிருந்து பெற்றுக் குருதட்சணையாகக் கொடுத்தல் (57-58). கண்ணன் மதுரையில் இருக்கும்போது அங்கிருந்து உத்தவன் ஆயர்பாடி சென்று கண்ணன் பழகிய ஆயர் கன்றுகள் இடங்கள் பார்த்து வருதல் (59). பாண்டவர்க்கு நேர்ந்த இன்னல்களை அக்ரூரன் சொல்லக் கண்ணன் கேட்டறிதல் (60). கம்சன் வதம் கேட்டு அவன் மாமனாகிய சராசந்தன் படையோடு வந்து கண்ணனிடம் போரிட்டுத் தோற்று ஓடுதல் (61). அசுரர் கோமான் சிரகாளன் என்பவன் முனிவருக்குத் தீமை செய்வது கேட்டு அவனோடு பொருது அவனை அழித்தல் (62). காள எமன் வதை (63). இரேவகன் என்னும் அரசன் மகள் இரேவதியை மணத்தல் (64). நாரத முனிவன் கண்ணன் குணாதிசயங்களை உருக்குமிணிக்கு எடுத்துக் கூற அவள் அவனை மணக்க உறுதி கொள்கிறாள். அவளுடைய விரகதாபம், ஒரு தோழி கண்ணன் வடிவத்தைப் படத்தில் எழுதுகிறாள் (65). விதர்ப்பராசன் மந்திரிகளோடு கலந்து மகளுக்கு ஏற்ற மணவாளன் கண்ணனே என முடிவு செய்கிறான். ஆனால் அவனுடைய மகனான உருக்குமி சிசுபாலனுக்கு அவளைக் கொடுக்கத் துணிந்து மறுநாளே ஓலை போக்குகிறான். உருக்குமிணி ஒரு புரோகிதன் மூலம் கண்ணனுக்கு ஓலை அனுப்புகிறாள். மறுநாள் சிசுபாலன் வரவும் உருக்குமி தங்கைக்கு மணக்கோலம் செய்யுமாறு கட்டளையிடுகிறான். உருக்குமிணியும் அன்னையுமாக அம்பிகை கோயில் சென்று வழிபட்டு வரும் வழியில் கண்ணன் வர அன்னை உருக்குமிணியைக் கண்ணன் கையில் கொடுக்க அவன் அவளைத் தேரேற்றிச் செல்கிறான் (66-70). சூழ்ந்த சேனைகளை முறியடித்துச் செல்லும்போது உருக்குமியைப் பலராமன் மார்பில் அடித்துத் தலையை முறிக்கப்போகும்போது உருக்குமணிக்காக அவனை விடச் செய்கிறான். (தொடரும்)

# சொல்லும் பொருளும்

ஆசிரியர் மு. அருணாசலம்.

**இதழ் 157. 'பண்டாரம்' என்னும் சொல்லின் தொடர்ச்சி.**

இக்குருமாரும் சந்நியாசிகளும் மாணிக்கவாசகர் கூறுகின்ற மூல பண்டாரமாகிய ஞானச் செல்வத்தைச் சேமித்து வைத்துள்ள மையால் பண்டாரம் எனப்பட்டனர் என்று கொள்வதே சிறப்பு. 14ஆம் நூற்றாண்டில் சிற்றம்பல நாடி பண்டாரம், பழுதை கட்டி சம்பந்த பண்டாரம் என்றெல்லாம் பெயர்கள் வழங்கும், இந்த மரபில் வந்தபல ஆசாரியர்களை வெள்ளியம்பல வாணத் தம்பிரான் (1700) பண்டாரம் என்றே குறிப்பிடுவார். அக்காலத்தில் இச் சொல்லுக்குப் பொருள் அருட்செல்வம் உடையவர். பிற்காலத்தில் இப்பண்டாரங்களிடையே பொருட்செல்வம் பெருகி அருட் செல்வம் குன்றவே, பண்டாரம் என்ற சொல் இழிவானது என்ற கருத்துத்தோன்றி, ஆசாரியராயிருந்த அதே பண்டாரம் பண்டார சந்நிதியாகிறார். பண்டாரம் என்று சொன்னால் குறைவு என்று நினைக்கிறார்; நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வாசாரியர்க ளெல்லாம் பண்டாரமென்றே கையெழுத்திட்டார்கள். பண்டார சாத்திரம் என்ற தொடர்கூட ஆசாரியர்களாயிருந்த பண்டாரங்களின் மரபில் வந்தவர்கள் செய்த ஞான நூல்கள் என்றே பொருள்படும்.

**பண்பாடு**

இது ஒரு புதுச்சொல், அகராதிகளில் இச்சொல்லைக் காண முடியாது. இச்சொல்லை முதல்முதல் தனியான ஒரு பொருள்பட அமைத்தவர் டி.கே.சி. ஆவார். ஆங்கிலங் கற்றோர், அவ்வறிவு காரணமாக, சில ஆங்கிலச் சொற்கள் தரும் திரண்ட கருத்தைத் தமிழில் அப்படியே சொல்ல இயலாமல் இடர்ப்படுகின்றனர். ஓர் ஆங்கிலச் சொல்லின் பொருட் சாயல் அத்தனையும் மற்றொரு மொழியில் ஒரே சொல்லாகக் காட்டிவிட முடியாது. தமிழிலும்

அப்படியே முடியாது. தமிழ்ச்சொல் ஒன்றின் பொருட் சாயல் அத்தனையும் ஒரே ஆங்கிலச் சொல்லால் காட்டவும் முடியாது. இது மொழிகளின் இயல்பு. ஆங்கிலத்தில் சில சொற்கள் பார்க்கிறோம். ஒன்று சிவிலிஸேஷன்-நாகரிகம் என்று தமிழில் சொல்லுவோம். இது பொருந்தக்கூடும். மற்றொன்று கல்ச்சர் என்பது. இது பெல வடிவங்களுடன் தொடர்புடையதாய்ப் பல பொருள் தந்து நிற்பது. இதனுள் நாகரிகமும் உண்டு, பெருமையும் உண்டு, ஒழுகலாறும் உண்டு. சால்பும் உண்டு. பொருளைச் சிந்திக்காதவர்கள் நாகரிகமென்றே சொல்லி வந்தார்கள். சிந்தித்தவர்கள், இதிலுள்ள இடர்ப்பாட்டை உணர்ந்து கலாசாரம் என்று சொல்லி வந்தார்கள். இது அதிக இடர்ப்பாட்டினைத் தந்தது. கல்ச்சர் என்பதனோடு தொடர்புடைய பல சொற்களை நோக்கும்போது கலாசாரம் என்ற தொடர் பயன்படவில்லை. இந்த நிலையில் ஒரு சமயம் டி.கே.சி. யவர்கள் ராஜகோபாலாசாரியர் உடனிருந்த சமயம், கல்ச்சர் என்ற சொற்பொருளின் பல கோணங்களையும் சிந்தித்து ஆராய்ந்தார், அவர் கல்ச்சரே வடிவானவர். ஆதலால் அச்சொற்பொருளில் மனம் சென்றது இயல்பே. கலாசாரம் என்ற சொல் ஒருவருக்குமே பிடிக்கவில்லை. 'Culture come through cultivation' என்று சொல்லி, இரண்டு ஆங்கிலச் சொற்களுக்கும் வேர் ஒன்றே என்றும் சொன்னார். (பண்படுத்துவதால் பண்பாடு விளைகிறது.) பண்புடைமை பண்படுத்துதல் என்ற பேச்சுக்களெல்லாம் வந்தன. பண்படுத்தப்பட்டது பண்பாடு (பண் - செய்தல், நன்கு செய்தல், சீர்திருத்துதல் என்ற பொருள்கள் தொனிக்கச் செய்வது; பாடு - தோன்றுவது) என்று புதிதாகக் கூறினார். அப்போது பிறந்தது பண்பாடு என்ற சொல். நாகரிகத்திலும் பொருளாழமுடைய பண்பையும் சால்பையும் உள்ளடக்கிய ஒரு தத்துவமாக இதைக் கூறலாம். ராஜாஜியும் நன்றாயிருக்கிறது என்று ஒப்புக்கொண்டார். இருவருமே பிறகு இத்தொடரை அதிகம் உபயோகிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு ஆட்சிக்கு வந்தது பண்பாடு என்ற சொல்.

பின்னால் ராஜாஜியின் 'நமது பண்பாடு' என்ற கட்டுரையும் வெளியாயிற்று. 1938 வரையில் பண்பாடு என்ற சொல்லை யாரும் காதால் கேட்டதில்லை. எழுத்திலும் பார்த்ததில்லை. பிறகுதான் இப்



புதுப்படைப்புக்குப் பெரும் ஆட்சி ஏற்பட்டு, இதைச் சொல்லா தவரே இல்லை என்ற நிலைக்கு வளர்ந்திருக்கிறது. இதுவே இச்சொல்லின் வரலாறு.

**பயல்**

இன்று சாமானியமாய் அலட்சியத்தையும் அவமதிப்பையும் காட்டி ஒருவனைச் சுட்டுவதற்கு வழங்கும் சொல்லாக இது இருக்கிறது. சுட்டப்படுபவன் சிறுபிள்ளையாகவும் இருக்கலாம், பெரிய ஆளாகவும் இருக்கலாம். இச்சொல்லுக்கு மூலம் வேறு. அதில் இந்த இழிப்புப் பொருள் இல்லை. பை (பைம்மை) பசுமை, இளமை என்ற பொருளுடையது. இளம் பிள்ளையைக் குறிப்பிட இது பைதல் என்ற வடிவம் பெற்றது. பைதல் வெண்பிறை என்பது தேவாரம்; சிறுகிறிப் பைதலே என்பது திருவாய்மொழி. (பைது என்ற வடிவத்துக்கும் பசுமை என்ற பொருள் பண்டை நூல்களில் காணப்படுகிறது.) பைது உடையவன் பைதல் ஆனான். நாளடைவில் பைதல் பையல் ஆயிற்று. த - ய ஆக மாறுவது இயல்பு. முதல் எழுத்திலுள்ள ஐ காரம் ஒலி சுருங்கி அகரமாக நின்று விட்டது; பயல் ஆயிற்று. இது சொல் வடிவத்தில் ஏற்பட்ட மாறுதல். பொருளும் அப்படியே இளமை இளைஞன் என்றதால் வந்த அலட்சியம், அவமதிப்பாகி, இளைஞனுக்கு மட்டுமல்லாமல் பின் யாருக்கும் பொருத்திச் சொல்லும் சொல்லாகி விட்டது. பையன் என்று சாதாரணமாக இகழ்ச்சிக் குறிப்பு எதுவுமில்லாமல் வழங்கும் சொல், பையல் என்ற சொல்லிலிருந்து மருவி வந்திருக்கும். பையன் என்றால் சிறுவன் என்று பொருள். புதல்வனைக் குறிக்கவும் இச்சொல் வழங்குவதுண்டு.

பயல் என்ற வடிவம், இரட்டையர் பாடிய தில்லைக் கலம்பகத்தில் (14ஆம் நூற்றாண்டு) வருகிறது. 'உமக்கு நானொரு பயல் அலவோ'. இங்கும் பொருள் அடிமை, தொண்டன் என்பது. இதே வடிவத்தில் இச்சொல் பிங்கல நிகண்டிலும் வருகிறது. பையல் என்ற வடிவம் 'அங்குசப் பையல் யான்' என்ற அடியிலும் காணப்படுகிறது. பயல் - கீழானவன் என்று 19ஆம் நூற்றாண்டுக் குரிய நாமதீப நிகண்டு குறிப்பிடுகிறது. தில்லைக் கலம்பகமே முதல் ஆட்சி தருகிறது.

**ஆசிரியர் குறிப்பு:**

*தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ் திருவரங்கத்துளோங்கும் **
*ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார் **
*எளியதோரருளுமன்றே என்திறத்துஎம்பிரானார் **
*அளியன்நம்**பையல்** என்னார் அம்மவோ! கொடியவாறே!*
*(திருமாலை -37)*

தொண்டரடிப்பொடியாழ்வார்அருளிச்செய்த திருமாலையில் **பையல்** என்ற சொல் காணப்படுகிறது. இதற்கு விரிவுறை வரைந்த பெரியவாச்சான்பிள்ளை, உய்யக்கொண்டாருடைய சிஷ்யரான மணக்கால் நம்பி கூறிய வார்த்தைகளாகக் கீழ்க்கண்டவற்றை குறிப்பிடுகிறார்.

மணக்கால்நம்பி கதவைச் சாத்திக்கொண்டு ரஹஸ்யார்த்தோபதேசம் செய்தபோது, அவரது சிஷ்யரான திருமகிழ்மாலை மார்வன் வந்து கதவைத் தட்ட, மணக்கால்நம்பி ''நம் பிள்ளையான திருமகிழ்மாலை மார்வனுக்குத்திற'' என்று அருளிச்செய்தார்.

''பிள்ளைப்பிள்ளையாழ்வான் வாயாலே தம்பி அப்பிள்ளையாழ்வான் நம் பையல்' என்னப்பெற்றேன்'' என்று அப்பிள்ளையாழ்வான் அருளியதையும் அநுஸந்திப்பர்.

**பாதுகாத்தல்**

காத்தல், காவல், காப்பு என்ற சொற்களெல்லாம் கா என்ற வினைச் சொல்லடியாகப் பிறந்த தொழிற் பெயர்கள். இதன் பொருள் நன்கு தெரிந்தது. காத்தல் என்ற சொல்லுக்குப் பழமையான எல்லா இலக்கியங்களிலும் ஆட்சியுண்டு. இனி, பாதுகாத்தல் என்ற சொல் பண்டையிலக்கியங்களில் ஆட்சி பெறவில்லை. முதன் முதலாகத் திருவாசகத்தில்தான் இச்சொல்லுக்கு ஆட்சியைக் காண்கிறோம். 'பைதலாவதென்று பாதுகாத்து இரங்கு பாவியேற்கு' (பைதல் - துன்பம்) என்ற திருச்சதக வரியில் இச்சொல்லைக் காண்கிறோம்.

பாது என்ற முதலுக்குத் தமிழில் எந்தப் பொருளும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வடமொழியில் பாது என்பது ஒரு வியங்கோள் வினை; அதன் பொருள் காக்க என்பதாகும்.

(தொடரும்)



# கற்கோயில்கள் (கற்றளிகள்) பல்லவர் - பாண்டியர் காலக் கோயில்கள்

**ஆசிரியர்: கே.ஆர். சீனிவாசன்.**

வாதாபி சாளுக்கியர்கள் குடவரைக் கோயில்களை உருவாக்கிய காலகட்டத்திலேயே கற்றளிகளையும் (கட்டுமானக் கோயில்கள்) எழுப்பினர். ஆனால் காஞ்சிப்பல்லவர்களோ, ஒற்றைக்கல்லாலான கோயில்களை எழுப்பிய மரபினை அடுத்து, பின்னொரு காலத்தில்தான் கற்றளிகளை எழுப்பும் மரபினைத் தொடங்கினர். இந்த மரபு இரண்டாம் நரசிம்மவர்ம ராஜசிம்மன் காலத்தில் (கி.பி. 700-728) தோன்றியது எனலாம்.

தங்கள் அரசியல் பகைவர்களான சாளுக்கியர்களுடனான போட்டியின் விளைவாக, சிற்ப-கட்டிட வேலைப்பாடுகளில் தனித்தன்மையான சாதனைகளை வெளிப்படுத்தும் ஆர்வத்துடன் பல்லவர்கள் செயற்பட்டனர். சாளுக்கியர்கள், மிக எளிதாக மென்மையான மணற்பாறைகளைக் கொண்டு வடிவமைத்ததற்கு நேர்மாறாக, தொண்டை மண்டலத்தில் இருந்த பல்வேறு வகையான கருங்கல் பாறை, அடுக்குப்பாறை போன்ற இயற்கையான கடினமான பாறைகளைக் குடைந்து தோண்டி வடிவமைப்பதில் ராஜசிம்ம பல்லவன் பல சோதனைகளை மேற்கொண்டான். மேலும், பாறைக்கட்டிடக்கலை எனில் அது பாறைகளும் குன்றுகளும் உள்ள இடங்களில் மட்டுமே கோயில்களை உருவாக்குவதாகும். பல்லவர்களின் தலைநகரமான காஞ்சி போன்ற பாறைகள் எதுவுமில்லாத பிற இடங்களில் இத்தகைய கோயில்களை உருவாக்க முடியாது. இரண்டாம் நரசிம்மவர்ம ராஜசிம்ம பல்லவன் கோயில் உருவாக்கத்திற்குப் பல்வேறு வகையான கடினமான பாறைகளைப் பயன்படுத்தியமையை அவன் உருவாக்கிய கோயில்களில் இருந்தே அறியலாம். மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலுக்கு 'லெப்டினைட்' என்ற கரிய, கடினப்பாறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பான பாறைகளைக் குடைந்து முகுந்தநாயனார் கோயிலையும், வெண்மையும் சாம்பல் நிறமும் கலந்த சற்றுமென்மையான பாறை

கொண்டு ஒலகனேஸ்வரர் கோயிலையும், மகாபலிபுரத்தில் அவன் உருவாக்கி னான். கடினமானதும் இளஞ்சிவப்பு நிறமுடையதுமான அடுக்குப் பாறையில், தளகிரீஸ்வரர் கோயிலைப் பனமலையில் உருவாக்கினான். கடினமான இத்தகைய பாறைகளில் கோயில் எழுப்பும் பணிக்குக் கடும் உழைப்பும் காலமும் அதிகம் தேவை என்பதை மனத்திற்கொண்டு, காலவேகத்தையும் செயல் வேகத்தையும் ஒழுங்குபடுத்தி முறையான திசையில் செலவிட்டு, தனது போட்டி யாளர்களை விஞ்சாது போயினும், அவர்களுக்கு இணையாகச் செயல் பட எண்ணிய ராஜசிம்மபல்லவன் முடிவாக, மென்மையான பாறைமரபிற்கு வந்து சேர்ந்தான். தன் தலைநகரில் கோயில்கள் உருவாக்குவதற்கு மிகவும் பாரமற்றதும் தரமற்றதும் சொரசொரப் பானதும் எளிதில் தகர்ந்து விழக்கூடியதுமான உள்ளூர் மணற் பாறைகளைத் தேர்ந்தெடுத்தான். அத்தகைய மணற்பாறை கட்டு மானங்களில்கூட, கடினப்பாறைகளைப் பயன்படுத்தும் அவனுடைய முன்னோர் மரபு முற்றிலுமாகக் கைவிடப்படவில்லை. கடினப்பாறைகள், அதிஷ்டானத் தின் ***(அதிஷ்டானம்: விமானம், மண்டபம் அல்லது இவை போன்ற கட்டுமானத்தின் அடிப்பகுதி; சுவர்கள், சதுரத் தூண்கள் அல்லது தூண்கள் போன்றவற்றைத் தாங்கி நிற்கும் தெளிவான கட்டிடக்கூறு. வெளிப்படத் தெரியும் வார்ப்புத் தளங்களை கொண்டது.)*** அடிப்பகுதி, உச்சிப்பகுதி எனப்படும் உபானம் ***(உபானம்: அடிப்பகுதி அல்லது அதிஷ்டானத்தின், பாதம் அல்லது மிகவும் கீழேயுள்ள பகுதி; செங்குத்தான எல்லைக்கு அப்பாலும் நீட்டிக்கொண்டிருக்கும் இதன்மேல், ஜகதி அமைந்திருக்கும், விமானத்தில் மிகவும் கீழே அமைந்துள்ள வெளித் தெரியும் பகுதியாகும் இது; வெளித்தெரியும் உச்சிப்பகுதி கலசமாகும்,)***, பட்டிகை ***(பட்டிகை: மேடை அல்லது அதிஷ்டானத்தின் நீட்டிக்கொண்டிருக்கும் உச்சிப்பாளம். இது செங்குத்தாக மேலிருந்து கீழே அமையும் வரியுடன் ஒத்திசைந்து காணப்படும்; குறிப்பிடத்தக்க பருமனை உடைய ஒரு பெரிய வார்ப்பு.)***ஆகியவற்றில் பாளங்களாகப் பயன்படுத்தப் பட்டன. காஞ்சியில் உள்ள புகழ்பெற்ற கைலாசநாதர் கோயிலும் ஏனைய கோயில்களும் இவ்வகையில் உருவானவை. இந்தக் குறிப்பிட்ட பண்பில் பல்லவர்கள், சாளுக்கியர்களுக்குப் பின்தங்கி யிருந்த போதிலும், பல்லவர்களின் ஒற்றைக்கல் ரதங்கள் அமைப் பில் உருவான கற்றளிகள், குறிப்பிடத்தக்க பல சிறப்புக்களைக் கொண்டு விளங்கின. வடிவம் பற்றிய மேலான சிந்தனைகளை ஒற்றைக்கல் ரதங்கள் அவர்களுக்குத் தந்ததுடன் அளவீடும் வரைவுத்திட்டமும் இணைந்து, கற்றளிகளைச் சிறப்பாகவும் மிகவும் நேர்த்தியாகவும் உருவாக்க அவை



உதவின. சாளுக்கியர்களின் கற்றளிகளை விடவும் அளவிலும் செய்நேர்த்தியிலும் பல்லவர் படைப்புகள் சிறந்து விளங்குகின்றன.

மகாபலிபுரம் கடற்கரைக்கோயில், மூன்று கருவறை களையும் அவற்றின் துணை அமைப்பான மண்டபங்களையும் பிரகாரச் சுற்றுக்களையும் கோபுர நுழைவாயில்களையும் கொண்ட தாகும். அந்த மூன்றுள் க்ஷத்திரியசிம்மேச்வரம் என்று அழைக்கப் படும், கிழக்குப் பகுதியில் கடலைப் பார்த்தவண்ணம் உள்ள பெரிய விமானமும், அதன் பின்புறத்திலுள்ள ராஜசிம்மேச்வரம் எனப்படும், மேற்குப் புறத்தில் கிராமத்தை நோக்கிய வண்ணம் உள்ள சிறிய விமானமும் சிவனுக்குரியன, இவை இரண்டிற்கும் இடையில் நெருக்கிப் புகுத்து வைக்கப்பட்ட மேற்கட்டுமான மில்லாத செவ்வக வடிவிலான மண்டபக்கருவறை ஒன்று காணப்படுகிறது; அது நரபதிசிம்ம பல்லவ விஷ்ணு கிருஹம் என்று அழைக்கப்படுகிறது. தாழ்வான வெளியில் தெரிபாறை ஒன்றில், முன்னமே செதுக்கப்பட்ட, கிடந்த கோலத்தில் இருக்கும் விஷ்ணு சிற்பத்தை உள்ளடக்கியதாக இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோயில் வளாகத்தைக் கட்டியவனான ராஜசிம்ம பல்லவ மன்னனின் விருதுப்பெயர்கள் இந்த விமானங்களுக்கு உரிய பெயர்களாகக் கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளன. சிறிய விமானத்தின் முன்பாகத் துணை மண்டபங்களும் கோபுரமும் கட்டப்பட்டுள்ளன; முழு அமைப்பும் பொதுவான ஒரு பிரகாரச் சுவரால் சுற்றிலும் சூழப்பட்டுள்ளது. கிழக்கிலுள்ள பெரிய விமானத்திற்கு அதற்கென்று தனியாக ஒரு கூடுதல் பிராகாரம் உள்ளது. இது, கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பக்கத்தில் திறப்பாக உள்ளது. சிறிய விமானம், மூன்று தளங்களுடன் முழுவதும் சதுர அமைப்பிலானது. ஆனால் கிரீவமும் சிகரமும் எண்கோண வடிவில் உள்ளன; உச்சியில் கலசம் உள்ளது. அடித்தளத்தின் உச்சி, ஹாரம் இன்றி உள்ளது. மேல்தளத்தில் சங்கு ஊதும் பூதங்கள் நான்கு மூலைகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தில் நான்கு பக்கங்களிலும் ஹாரம் காணப்படுகிறது. அடித்தளத்தின் முன்னால் அர்த்தமண்டபத்தின் மேலும் ஹாரம் இடம் பெற்றுள்ளது. பிற்காலச் சிவன் கோயில்களில், உச்சித்தளங்களில் நந்திகளுக்கு பதிலாகப் பூதவடிவங்கள் இடம்பெற்றன. ஒவ்வொன்றுக் கும் ஏற்ற வகையில் தளங்கள் உயரமாக அமைய, மேற்புறத் தளமானது அதன் கீழ்த் தளத்தைக் காட்டிலும் உயரமாக அமைந்து, கீழ்ப்புறத் தளத்தின் ஹாரத்தின் மீது தெளிவாக அமைந்துள்ளது. எண்கோண வடிவ கிரீவம், சிகரம் ஆகியவற்றின் மீதுள்ள கலசம், நன்கு பளபளப்பு

ஏற்றப்பட்ட கருமையான தீக்கல்லால் செய்யப்பட்டுள்ளது. சுவர்களில் உள்ள சதுரத் தூண்களின் அடிப்பகுதியில் எகிறிப்பாயும் சிங்க உருவங்கள் அமைந்துள்ளன. இது ராஜசிம்மன் கோயில்களில் காணப்படும் சிறப்பியல்பாகும்.

கிழக்கில் உள்ள நான்கு தளங்களைக் கொண்ட விமானமும், கிரீவம் வரையில் சதுரமான அமைப்பில் உள்ளது. அதற்கு மேல் உள்ள சிகரமும் தீக்கல்லாலான கலசமும் எண்கோண வடிவில் உள்ளன. கூடங்கள், சாலாக்கள் ஆகியவற்றின் ஹாரம், இரண்டாம், மூன்றாம் தளத்தின் மீதும், அடித்தளத்தின் முன்னாலுள்ள அர்த்த மண்டபத்தின் மீதும் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. நான்கு மூலைகளிலும் உட்கார்ந்த நிலையில் சிங்க உருவங்கள் அவற்றில் மிகுதியும் இடம்பெற்றுள்ளன. சிறிய விமானத்தில் இருப்பதைப்போல சிவன் கோயில் என்று குறிக்க இதிலும் மேல்தளத்தில் உட்கார்ந்த நிலையில் சங்கு ஊதும் நான்கு பூதங்கள் உள்ளன. இந்த விமானத்திற்கு உரிய சிறப்புக் கூறாகக் காணப்படும் மிக நெருக்கமாக அமைந்துள்ள பிராகாரம் அடித்தளத்தை விடவும் குறைந்த அளவே உயரமுடையது. மூலை களில் கர்ணகூடங்களையும், பக்கங்களின் நீளங்களின் மீது சாலாக்களையும், இப்பிராகாரம் கொண்டுள்ளது. விஷ்ணு மண்டபத்தின் மேற்பகுதியில் அதே அளவு உயரத்தில், மேற்குப்பக்கப் பின்புற இடைவெளியின் ஒரு பகுதி மட்டும் ஹாரம் கூறால் நிரப்பப்பட்டுள்ளது. கிழக்குப்பகுதியில் நீளவாக்கில் உள்ள பிராகாரச்சுவரில் கடற்கரையை நோக்கிய நுழைவாயிலின் மீதுள்ள மைய சாலா, எஞ்சியதைவிடவும் பெரியதாக அமைக்கப் பட்டுள்ளது. துவாரசாலா அல்லது சிறிய கோபுரத்திட்டம் அமைப்பைப் போன்று உருத்தோற்றம் கொள்ளச் செய்வதற்காக இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏற்ற அளவுடன் பொருத்த மாக அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த தளங்களும், கீழ்ப்புற, மேற்புறத் தளங்களின் மீது ஹாரம் இல்லாமையும் ஒன்று சேர்ந்து இந்த மெல்லிதான அமைப்பிற்கு அழகையும் பொலிவையும் தந்துள்ளன. அதே நேரத்தில், அடித்தளத்தைச் சுற்றிலும் குறைந்த அளவு உயரத் தோடு நெருக்கமாக அமைந்துள்ள பிராகாரமும், சாய்வான மேல் முகட்டின் மீதுள்ள ஹாரங்களும் சேர்ந்து, கூடுதலான ஒரு தளம் இருப்பது போன்ற புறத்தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. முழுமை யான உயரத்திற்கும் ஏற்ற, பொருத்தமான அளவில் அடிப்பகுதியை இது பெரிதாக்கியுள்ளது. இரண்டு விமானக் கருவறைகளின் பின்புறச் சுவர்களிலும் வழக்கமான சோமாஸ்கந்த மூர்த்தியின் படைப்புச் சிற்ப



வரிசைகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன், பதினாறு பட்டைகளுடன் செங்குத்தான வரிகளால் அலங்கரிக்கப்பட்டதும் மெருகேற்றப் பட்டதுமான தீக்கல்லாலான லிங்கம், வழக்கமான அடிப்பகுதி (ஆவுடையார்) இன்றி, கர்ப்பகிருஹத்தின் நடுப்பகுதியில், தரையின்மீது நிறுவப்பட்டுள்ளது.

இக்கோயில் சுவர்களின் மீதுள்ள சிற்பங்கள், உப்பும் ஈரமும் மிகுந்த கடல் காற்றால் படிப்படியாக அழிக்கப்பட்டு வந்தாலும், கட்டுமான அளவீடுகளும் ஒப்பனை நேர்த்தியும் கடலின் இயற்கைப் பின்னணியும் ஒன்று சேர்ந்து, இக்கோயில், இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த நினைவுச்சின்னங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. வழக்கமாகக் காணப்படும் எழும்பி நிற்கும் சிங்க உருவ அடிப்பகுதியையுடைய சதுரத்தூண்கள் தவிர பெரிய விமானங் களின் சுவர்களின் மீதும் பிராகாரச் சுவர்களின் மீதும் யானை, ஆட்டுக்கடா, நாகம், நாக தேவதை, பூதம் ஆகிய பிற வகையிலான அடிப்பாகம் உள்ளதையும் காண்கிறோம்.

கலங்கரைவிளக்கக் குன்றின் உச்சியிலுள்ள ஒலகனேசுவரர் கட்டுமானக்கோயிலின் மேற்கட்டுமான தளங்கள் இப்போது காணப் படவில்லை. அடித்தளத்தின் வெளிப்புற அறை, அர்த்த மண்டபம் ஆகியவை மட்டும் இன்றும் எஞ்சி உள்ளன. (இது முன்னர் கலங்கரை விளக்காகப் பயன்பட்டது. தற்போதைய கலங்கரை விளக்கு கி.பி.1900ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.) அவற்றில் சிற்பங்களும் மாடங்களும் வெளிப்புறச் சுவர்களில் சதுரத்தூண்களும் இன்று எஞ்சியுள்ளன. தெற்குப் பகுதியின் மைய மாடத்திலுள்ள தட்சிணா மூர்த்தி படிமம் இதில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். தென்னிந்தியக் கோயில் விமானங்களில் தட்சிணா மூர்த்தி படிமம் இடம்பெறும் வழக்கம் இங்கிருந்தே தொடங்குகிறது. கருவறையின் வெளி மூலைகளையும் அர்த்த மண்டபத்தையும் பகுதிகளாகப் பிரிக்கும் சதுரத் தூண்களின் அடிப்பாகத்தில் நிமிர்ந்து நிற்கும் யாழி இடம்பெற்றுள்ளது. இது, ஒலகனேஸ்வரர் கோயில் ராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது என்பதை எடுத்துக் கூறும் முக்கியக் கூறாகும்.

இதேபோன்ற இளஞ்சிவப்பு நிறக்கடினப் பாறையிலான பனமலைக்குன்று (தென்னார்க்காடு மாவட்டம்) தளகிரீசுவரர் கோயில் வித்தியாசமான வரைபடி அமைப்பில் உருவானதாகும். இதன் அடிப்பகுதியும் தளங்களும் சதுரமாக அமைய, கிழக்கு நோக்கி அமைந்துள்ள அடித்தளத்தின் தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கங்களில்

அதிஷ்டானத்தின் நீட்சியாக அமையும் தொடர்புடைய பகுதிகளின் மேல்புறத்தில் சிறிய நீள் சதுரமான கருவறைகள் உள்ளன. கிழக்குப் பக்கத்திலுள்ள தொடர்பான நீள்சதுர இணைப்பு, அதன் ஊடே செல்லும் நடைபாதையுடன், முக்கிய கருவறைக்கான அந்தராள நுழைவுப் பகுதியாகவும் அமைகிறது. பக்கவாட்டில் உள்ள கிழக்கு நோக்கிய இரண்டு கருவறைகளும் மேற்கு நோக்கிய பின்புறக் கருவறையும் மையக்கருவறையைப் போல, சிவனுக்குரியதாக உள்ளன. மையக்கருவறையிலே லிங்கபீடமின்றி தரையில் அமைக்கப்பட்டுள்ள பட்டைகளையுடைய லிங்கத்தின் உச்சிப் பகுதிக்குமேலே தெரியும் படியாக, பின்புறச்சுவரில் உயரமான மாடத்தில் சோமாஸ்கந்த மூர்த்த சிற்பம் உள்ளது. வழக்கமாக ராஜ சிம்மனின் பிற கோயில்களில் காணப்படுவதைப்போல, பின்புறச் சுவரில் உயரத்தில் அமையும் சோமாஸ்கந்த மூர்த்தத்தை நடுப் பகுதியில் அமையும் லிங்கம் மறைந்து நிற்கும் தன்மைக்கு இது மாறுபட்டதாகும். விமானம் நான்கு தளங்களையுடையது; நீள்சதுர பக்கங்களையுடைய கருவறையின் இருதளங்களைக் கொண்ட சாலா மேற்கட்டுமானம், கர்ணகூடத்தின் ஹாரம் பகுதியுடனும் அடித்தளத்தின் பிற கூறுகளுடனும் மிக நன்கு பொருந்தி அமையுமாறு திறமையுடன் கட்டப்பட்டுள்ளது. உச்சித்தளம் தவிர ஏனைய மேற்களங்களில் ஹாரம் காணப்படுகிறது. செங்கல், சுண்ணாம்பு சாந்து ஆகியவற்றாலமைந்த பழைய மூலவடிவத்தின் நவீன மீட்பு ஆக்கங்களாகிய கிரீவமும் சிகரமும் மூல வரைபடத் திட்டத்தின்படி எண்கோண அமைப்பின் அடித்தளத்தின் சுவர்களின் மூலைகளிலும், இணைக்கப்பட்ட கருவறைச்சுவர்களின் மூலைகளிலும், ராஜசிம்ம மன்னனின் கோயில்களுக்கேயுரிய தனிப்பண்பான, உறுதிமிக்க நிமிர்ந்து நிற்கும் யாழிகளை அடிப்பாகத்தில் கொண்ட சதுரத்தூண்கள் அமைந்துள்ளன. உச்சித்தளத்தின் மூலைகளில் பூதவடிவங்கள் இடம் பெற்றுள்ளன. கடினத்தன்மை மிக்க பாறையில் கட்டுமானப்பணி எளிதல்ல என்பதால் முகுந்தநாயனார் கோயிலைப் போலவே, இங்கும் வேறு சிற்பங்க ளின்றி சுவர் உள்ளது. திருமூர்த்தி கோட்பாட்டை விளக்குவது போல, அந்தராளத்தின் உட்புறச் சுவர்களில் பிரம்மா, விஷ்ணு சிற்பங்களும், துவாரபாலகர் சிற்பங்களும் மட்டும் உள்ளன; ஆனால் பிரம்மாவும் விஷ்ணுவும் முக்கியத்துவம் குறைந்து காணப்படுகின்றனர். பார்வதியுடன் சிவன் நடனமாடும் கோலத்தில் உள்ள, பல்லவர் சுவர் ஓவியத்தின் மங்கிய எச்சம் வடக்கு வெளிப்புறக் கருவறையில் காணப்படுகிறது.



மகாபலிபுரத்திலுள்ள முகுந்த நாயனார் கோயிலும் சிவந்த கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இது, அடிப்பாகம் சதுரமாகவும் மேற்புறத்தில் எண்கோண வடிவிலான கிரீவ சிகரமும் உடைய திராவிட வகையைச் சார்ந்த இருதள (துவிதள) விமான அமைப்பில் கடினமான கட்டுமானத்தில் உருவாகியுள்ளது. இதில் விமானமும் அதன் முன்புறம் மண்டபமும் உள்ளன. சிகரத்தின் மேற்பகுதிகளும் கலசமும் அழிந்துவிட்டன. சுவர்கள் எளிமையாகவும், பகட்டு ஏதுமின்றியும், சதுரத்தூண்கள் எளிமையாகவும், அடிப்பகுதியில் யாழிகள் ***(யாளி: சிங்கம்போன்ற உருவம்)*** இல்லாமல் கரடு முரடாகவும், வடிவமைக் கப்பட்டுள்ளன. கருவறையின் பின்புறச் சுவரில் காணப்படும் சோமாஸ்கந்த புடைப்புச் சிற்பமே, இக்கோயிலுக்குரிய முதன்மைத் தெய்வமாகும்.

காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயில் வளாகம், ராஜசிம்ம பல்லவ மன்னனும் அவன் மகன் மூன்றாம் மகேந்திரனும் இணைந்து உருவாக்கியதாகும். கிழக்கு நோக்கிய ராஜசிம்மேச்வரம் எனப்படும் (தற்பொழுது கைலாசநாதர் விமானம் எனப்படுவது) முதன்மை விமானம் நான்கு தளங்களை உடையது.

கிரீவம்வரை உள்ள அடிப்பகுதி சதுரமாகவும், மேலே உள்ள கிரீவமும் சிகரமும் எண்கோண வடிவத்திலுமுள்ளன. இரட்டைச் சுவர்களால் ஆன அடித்தளத்தின் வார்ப்பாக உள்ள அடிப்பகுதியின் நான்கு பக்கங்களும், நான்கு மூலைகளிலும் நன்றாக வெளித் தெரியும்படி அவற்றின் மீது சிறிய கருவறைகளுடன் கூடிய அமைப்பைக் கொண்டுள்ளன. பிரதான அடித்தளத்தின் வெளிப் புறச் சுவரோடு நன்கு பொருந்துமாறு இவை ஒட்டி உள்ளன. பனமலைக் கோயில் அமைப்பின் வளர்ச்சி நிலையாக இது காணப்படுகிறது. நான்கு மூலைகளிலுள்ள அதிஷ்டான பக்கக் கிளைகள் சதுரமாக அமைந்து அவற்றில் நான்கு பக்க சிகரங்களைக் கொண்ட சதுர அமைப்பிலான சிறிய இருதள விமானங்கள், காணப்படுகின்றன. நான்கு பக்கங்களிலும் உள்ளவை, நீள் சதுர வடிவில் அமைந்து, தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கங்களில் சாலா சிகரங்களைக் கொண்ட நீள் சதுர வடிவிலான சிறிய இருதள விமானங்கள் காணப்படுகின்றன. இதோடு தொடர்புடையதாக கிழக்கில் உள்ளதும், நீள் சதுர வடிவில் அமைந்து, மேல் கட்டுமானத்தில் சாலா அமைப்பினையும், மையக்கருவறைக்குச் செல்லும் அந்தராள இடைப்பகுதி ஒன்றையும் கொண்டுள்ளது. பிரதான கருவறையை ஒட்டியுள்ள இந்தக் கருவறைகளின் கூடங்களும், சாலா சிகரங்களும்

பனமலைக்கோயிலில் காணப் படுவதைப்போல அடித்தள வெளிப் புறச்சுவரின் பிரஸ்தாரத்தின் ***(பிரஸ்தாரம்: தூண் தலைப்பு அமைவு; சுவர்களின்மீதும், தூண்களின்மீதும் அமையக்கூடிய வார்ப்புகள்; உத்தரம், வஜனம், வல்லபி, கபோதம், ஆலிங்கம், அந்தரி போல்வன.)*** மேலேயுள்ள ஹாரம் அமைப்புடன் பாராட்டத்தக்க வகையில் அணைத்து அமைக்கப்பட்டுள்ளன. இந்த விமானங்களின் தரைப்பகுதிக் கருவறைகள் சிவனின் பல்வேறு தோற்றங்களைக் கொண்டுள்ளன. இவற்றின் தென்கிழக்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய யாவும் மையக்கருவறையைப் போன்று கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளன; தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு ஆகியவை மேற்கு நோக்கி உள்ளன. கருவறையின் தரைப்பகுதி முழுவதிலும் பொருந்தி இருக்கும் படியான அளவில் பெரிய, வட்டமான ஆவுடையாருடன் பதினாறு பக்க செங்குத்துப் பட்டைகளாலான ஹரலிங்கம் மையக்கருவறையில் உள்ளது. கருவறையின் பின்புறச் சுவரில், சிறப்பான மாடம் ஒன்றில் வழக்கமான சோமாஸ்கந்தமூர்த்தம் செதுக்கப்பட்டுள்ளது; சிவனும் உமையும் அமர்ந்திருக்க இருவருக்கும் நடுவில் சின்னஞ்சிறு குழந்தையாகக் கந்தன் உமையின் மடியில் இருக்க, பின்புறம் இருபக்கங்களிலும் பிரம்மாவும், விஷ்ணுவும் நிற்கின்றனர். கர்ப்ப கிருஹத்தின் உட்புறச் சுவர்கள் எளிமையாகவும் சதுரமாகவும் உள்ளன. வெளிப்புறச் சுவர்களை ஒட்டியுள்ள விமானங்களின் இடையில் பகுதிகளாகத் தெரியும் புறச்சுவரில் தேவ தேவிகளின் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஒட்டியுள்ள விமானங்களின் வெளிப்புறச் சுவர்களிலும் இதே போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. இரண்டு சுவர்களுக்கும் இடையில் உட்புறமாகக் குறுகிய, மேலே மூடப்பட்ட திருச்சுற்றுப் பாதை உள்ளது. அடித்தளத்தின் அடர்த்தியான இருசுவர்களின் உச்சிப்பகுதிகளை இணைக்கும் பாளங்களின் மீது மேற்கட்டுமானத் தளங்கள் கட்டப்பட்டுள்ளன. இரட்டைச்சுவர்களும் பக்கங்களிலும் மூலைகளிலும் சிறிய விமானங்களால் முட்டுக் கொடுத் துத் தாங்கப்படும் அமைப்பும் சேர்ந்து இந்த விமானத்தின் அடர்ந்த மேற்கட்டுமானத்தைத் தாங்கும் பணியைச் செய்வதாக உள்ளன. மிகப் பெரியதான இந்த விமானத்தின் அளவிற்கும் உயரத்திற்கும் ஏற்ற விகிதத்தில் அமையுமாறு அடிப்பகுதி உள்ளது. அடித்தள பிரஸ்தாரத்தின்மீது, ஹாரம் கூறுகளிடையில் பஞ்சாரங்கள் இடம்பெறவில்லை.

(தொடரும்)



# ஹரிதாஸரின் இருசமய விளக்கம்

*இதழ் 157இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

*23.* தெளிந்திடுமப் பதமுதவும் பிரமத் தின்சீர்த்
திருமுகந்தோ டொடைகமலச் செய்ய தாளில்
துளங்கியவே தியரரசர் வணிகர் மற்றைச்
சூத்திரராம் குலங்கட்குத் தோற்ற மென்றும்
கிளர்ந்திடுஞ்சீர் புனையாச்ச வற்க மூலக்
கிரந்தத்தும் அதனின்வி யாக்கியான மாகி
வளர்ந்தபுகழ் விக்கியா னேச்சு ரத்தும்
மாநிலத்தோர் அறியவகுத் துரைக்கும் மாதோ.

**பொருள்:** தெளிவிசும்பாகிய பரமபதத்தையாளும் பரப்பிரம்மமான ஸ்ரீமந் நாராயணனின் திருமுகத்திலும் தோளிலும் தொடையிலும் திருத்தாளிலும் முறையே பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வகுப்பினரும் தோன்றினர்; என்று யாச்சவற்க மூலநூலும், அதற்கு உயர்ந்த புகழ் வியாக்கியானமாகிய விக்யானேச்சுரன் இப்புவியோர் யாவருமறிய விரித்துரைத்தன. மாதோ - அசை.

*24.* இவ்வகையா கியமிருதிப் பொருளுக் கேற்க
இன்னமொருத் தரந்தன்னை யியம்பக் கேளாய்
தவ்வறுசீர் முத்தியையிச் சித்தி யோக
சாதனையி ருந்தவொரு சன்னி யாசி
அவ்வழியோ கந்தவறிச் சிவலோ கத்தை
அடைந்தனன்சங் கரசிவனென் றமைந் பேரும்
மெய்வழியே பெற்றுலகில் தான்முன் னாளில்
மெய்யெடுத்த விதமெல்லாம் விவேகஞ் செய்தான்.

**பொருள்:** இத்தகைய ஸ்மிருதிப் பொருளுக்கேற்ப இன்னுமொரு விருத்தாந்தம் சொல்கிறேன் கேளாய்: குற்றமற்ற பெருமை பொருந்திய சிறந்த முக்திப் பேற்றை விரும்பி யோக சாதனையிலி

ருந்தனன் ஒரு சன்னியாசி. அந்த யோகம் சிறிது தவறிவிடவே, அதனால் சிவலோகத்தை யடைந்தனன். அப்போது அந்தச் சன்னியாசி தனக்குத் தற்பொழுது சங்கரசிவன் என்னும் பெயர மைந்திருப்பதையும் முன்னாளில் பல பிறவிகளை அடைந்ததையும் ஆராயத் தொடங்கினான்;

*25.* *அவனிமிசை தானெடுத்த காய பேதம்*
*ஐம்பதினோ டைம்பதுள தறிந்து முந்து*
*நுவலருஞ்சன் னாசியரும் சசியும் வேத*
*நூலனுமன் னனுமுதலா நூறு பேதத்*
*துவமையிலா அவரையெல்லாம் கருணை யாலே*
*உருத்திரரா குதிரென் றானுண்மை யாகத்*
*தவலரிய அவர்களும்போய்ச் சிவலோ கத்தில்*
*தக்கசத உருத்திரரா யங்கு வாழ்ந்தார்.*

**பொருள்:** அந்தச் சன்னியாசி, பூமியின் மேல் தானெடுத்த பிராமணன் முதலிய சரீர பேதங்கள் நூறென்று அறிந்தனன். அதன் மேல் அவன், 'யான் முன்பு எடுத்த வடிவுகளெல்லாம் உருத்திரர் ஆகக் கடவன' என்றனன். உடனே அந்தச் சரீரங்களெல்லாம் நூறு உருத்திரர்களாய் சிவலோகம் அடைந்து வாழ்ந்தனர்.

அவனி மிசை - புவியின்மேல். ஐம்பதினோடைம்பது - நூறு. தவலரிய - குறைதலில்லாத. சதம் - நூறு.

*26.* *மற்றதெலா மிகுயோக வாசிட் டத்தும்*
*வையகத் தோரறிய வுரைத்திடுகை யாலே*
*குற்றமிலாச் சாதனையாம் யோக மார்க்கக்*
*கொள்கைநிறை வேறாமல் குறைந்தார் அன்றே*
*கற்றைநறுஞ் சடைபெற்று முக்கண் பெற்றுக்*
*கறைக்கண்டம் பெற்றுக்கைக் கபால மும்பெற்(று)*
*ஒற்றைவிடைப் பரிபெற்றுச் சிவலோ கத்தை*
*உகந்துவாழு வரென்ப துண்மை தானே.*

**பொருள்:** இங்ஙனமுரைக்கப்பட்ட இதுவெல்லாம் யோக வசிஷ்டம் என்ற நூலில் நன்கறியலாமன்றோ! குற்றமற்ற யோகமார்க்கக் கொள்கை நிறைவேறாமல் குறையுற்றவர்கள், கற்றைச்சடையும்



முக்கண்ணையும் நீலகண்டத்தையும் கையிலே கபால ஓட்டையும் ரிஷபம் என்ற எருதையும் பெற்றுச் சிவலோகத்திற் சென்று உகந்து வாழ்வார்கள்.

*27.* *சேலான விழிமயிலே யிதெலாம் நிற்கச்*
*செங்கையிலக் கினியேந்தும் சிவனார் நல்கும்*
*நாலாய பதங்களுக்கும் அழிவுண்(டு) அத்தை*
*நான்சொல்ல வேண்டுமோ நவையொன் றில்லாச்*
*சாலோக சாமீப சாரூ பங்கள்*
*தவறுவரும் என்றுங்கள் தம்பி ரானார்*
*மேலான திருவாக்கால் முன்னாள் ஓத*
*விளங்கியவா கமமெல்லாம் விளம்பா நிற்கும்.*

**பொருள்:** சேல்கொண்டை மீன் போன்ற விழியும், மயில் போன்ற சாயலையுடைய ஆகமப்பெண்ணே! செங்கையில் அக்கினியை ஏந்தும் சிவனார் கொடுக்கும் நான்கு பதங்களாம் சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யம் என்பவை எல்லாம் அழிந்துபோகும். இவற்றை யான் எடுத்தியம்ப வேண்டும் என்பது ஒன்றுண்டோ? உங்கள் தம்பிரானாகிய சிவனால் ஓதப்பட்டுள்ள ஆகமங்கள் எல்லாம் விளம்பா நிற்கும்.

*28.* *இந்திரசந் திரசூரி யாதி தேவர்*
*யாவரும்சா யுச்சபதம் ஈவர் என்று*
*முந்துகட வல்லிமுதற் பருச்சந் தன்னில்*
*மொழிகையினான் மற்றந்த முறைமை போல*
*வந்தனை செய்திடும்அன் பர்தமக்கும் உங்கள்*
*மகதேவன் திருவுள்ளம் மகிழ்ந்து நல்கும்*
*அந்தமுள்ள பதம்நெடுமால் பதத்தைப் போல*
*அச்சுதமா கியபதவி யன்று மன்னோ.*

**பொருள்:** இந்திரன், சந்திரன், சூரியன் முதலான தேவர்கள் தம்மை வழிபட்டார் யாவருக்கும் சாயுஜ்ய பதவியைக் கொடுப்பார்கள்; என்ற வரலாறு கடவல்லி முதல் பரிச்சந்தன்னில் உரைக்கப் பெற்றுள்ளது. அந்த முறையைப்போல உங்கள் மகாதேவன் என்ற பெயரைப் பிரமன் வாயிலாகப் பெற்றிருக்கும் உங்கள் சிவனார் தன்னை வந்தனை செய்திடும் அன்பர்க்கு உகந்து கொடுக்கும்

பதவிக்கும் அழிவுண்டு. அது திருமால் கொடுக்கும் பதம்போல அழிவற்ற பதமாகாது.

*29.* *எத்திறத்தில் தேவர்க ளும்உ பாசித் தாருக்(கு)*
*இலங்கிய சாயுச்ச பதம்ஈவர் ஈய்ந்தால்*
*தத்தமதாம் ஒடுக்கத்தின் அளவே யன்றித்*
*தாம்இறந்(து) அன்பரையி ருத்தும்சத்தி யாமோ*
*நித்தியன்சங் கரனென்று நினைக்கின் றாயேல்*
*நீதிபெறும் உங்கள்சி வாகமத்தால் அந்த*
*உத்தமமாஞ் சங்கரர்க்குத் தோற்றம் தானும்*
*ஒடுக்கமும்உத் தரிக்கின்றேன் உகந்து நீகேள்.*

**பொருள்:** எத்தன்மையுடைய தேவர்களும் தம்மை உபாசித்தார்க்குச் சாயுஜ்ய பதவியைக் கொடுப்பார்கள். ஆனால், அவர்களால் கொடுக்கப்பட்ட பதவிகள் அவர்கள் அழிகின்ற காலத்தில் அழிந்துவிடும். தாம் அழிய தமது பக்தர்களை அழியாதிருக்கும்படி செய்யும் சக்தி அவர்களுக்கு எப்படியுண்டாகும்? உங்கள் சிவபெருமானுக்குச் சாவாமல் நித்தியத்வம் உண்டென நீ நினைப்பதும் தவறாகும். உங்களுடைய சிவாகமத்திலே சிவனுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டென்று உரைக்கப்பட்டுள்ளது. அதனை இங்கு விரித்துரைப்பேன் நீ உகந்து கேள்.

*30.* *வைத்தபுவி யாகியதத் துவமு வெட்டும்*
*மாயாதத் துவமேழும் வந்த தாமுற்*
*பத்தியடை வேயொடுங்கிச் சுத்த மாகப்*
*பகர்ந்திடுதத் துவபஞ்சப் பிரபந் தானும்*
*சுத்திவித்தி யயேச்சுரன்ஈச் வரனிற் கூடித்*
*துலங்குசதா சிவனில்ஈச் வரனுங்கு கூடித்*
*சத்தியிலச் சதாசிவனும் ஒடுங்கிச் சத்தி*
*தான்பரனோ டொன்றாகிச் சாரும் என்றும்;*

**பொருள்:** பிரகிருதி தத்துவம் இருபத்து நாலும், மாயாபுஞ்ச தத்துவம் ஏழும் தோன்றிய அடைவே ஒடுங்கலுமுண்டு. சுத்த தத்துமாகிய பஞ்சப் பிர்ம்மம், சுத்தவித்யேச்வரனில் ஒடுங்கும். வித்யேச்சுவரன் சதாசிவனில் ஒடுங்கும். சதாசிவன் சத்தியிலொடுங்கும். சத்தியும் பரமனுடன் ஒடுங்கும்; (தொடரும்)

# துணுக்குத் தோரணம்

தொகுப்பு: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**1. அஞ்சல் துறையின் நிர்வாகச் சீர்கேடும் பத்திரிகையாளர்கள் எதிர் கொள்ளும் இன்னல்களும்.**

இதழ் எண் 157இல் எழுதப்பட்ட தலையங்கம் குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதழ் எண் 156 சென்னை மாநகர் வாசகர்களை, 38 நாட்களுக்குப் பிறகு சென்று சேர்ந்துள்ளது. இன்னும் பல வாசகர்களை இதழ் 156 இன்றைய தேதி வரை சென்றடையவில்லை. அதேபோன்று பல வாசகர்களுக்கு இதழ் எண் 157உம் சென்றடையவில்லை. இந்தச் சிக்கல்களுக்கு எப்படி தீர்வு காண்பதென்றே தெரியவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் அன்பர் ஒருவர் தொலைபேசியில் எங்கள் தெருவிற்கு வரும் தபால்காரர் மிகவும் நல்லவர். ஏன் பாஞ்சஜன்யம் இதழ் கிடைக்கவில்லை என்பது புதிராக இருக்கிறது என்று தெரிவித்துள்ளார். ஸ்ரீரங்கம் அஞ்சல் அலுவலகத்தில் மொத்தமாக எண்ணூறு பிரதிகளை உரிய தபால்தலை ஒட்டி ஒவ்வொரு 5ஆம் தேதிக்குள் சேர்ப்பிக்கிறோம். அதன்பிறகு என்ன நடக்கின்றது என்றே தெரியவில்லை. கொரியர் மூலம் அனுப்பலாம் என்றால் தமிழ்நாட்டின் உட்பகுதிக்கு எடுத்துச்செல்ல 15ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேபோல் வெளிமாநிலங்களுக்கு 30ரூபாய் கொரியர் கட்டணமாகச் செலுத்த வேண்டியுள்ளது. 500 பிரதிகள் கொரியர் மூலம் அனுப்பக் கூடுமானால் 8ரூபாய் கட்டணத்தில் எடுத்துச் செல்வதாக கூறுகிறார்கள். ''சுண்டைக்காய் கால்பணம் சுமை கூலி முக்கால்பணம்'' என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகின்றது. அடுத்த முயற்சியாக 2ரூபாய் தபால்தலை ஒட்டி Printed Matter Book Parcelஆக, சில ஊர்களுக்கு அனுப்ப எண்ணங் கொண்டுள்ளோம்.

தபால் துறையில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டைப்பற்றி தினமணி இதழில் வெளிவந்துள்ள செய்தியை நம் வாசகர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாளிதழில்

வெளிவந்தவாறு அந்தச் செய்தியை அப்படியே கொடுத்துள்ளோம். குறிப்பாக மூட்டை மூட்டைகளாய் கட்டி வைக்கப்பட்டிருக்கும் அவல நிலையை அந்தச் செய்தியுடன் வெளிவந்துள்ள படத்தில் காணலாம்.

**தினமணி. திருச்சி பதிப்பு, 8.6.2012 தேதியிட்ட நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி.**

**5 கி.மீ. தொலைவுக்கு 6நாள் தாமதமாகும் அஞ்சல் சேவை.**

அஞ்சல் துறை கடைப்பிடிக்கும் புதியமுறை காரணமாக, உள்ளூர் அஞ்சல் உறைகளைப் பட்டுவாடா செய்வதில் கூட தற்போது காலதாமதம் ஏற்பட்டுள்ளது. 1774ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது இந்திய அஞ்சல் துறை. மக்கள் தொடர்பு சாதனங்களில் முக்கியமானதாக விளங்கி வரும் இந்தத் துறையில் 31.3.2011 நிலவரப்படி நாடு முழுவதும் 1,54,865 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 90 சதவீதம் கிராமப் பகுதிகளில் உள்ளன. 7,175 மக்கள் தொகைக்கு ஒரு அஞ்சல் அலுவலகம் என்ற வகையில் இவை சேவை செய்து வருகின்றன. நூற்றாண்டுகளைக் கண்ட இந்தத் துறை எவ்வித போட்டியும் இன்றி செயல்பட்டு வந்த நிலையில், கடந்த 10 ஆண்டுகளாக தனியார் நிறுவனங்களின் கூரியர் சேவையால் சற்று தொய்வடைந்தது.

இருப்பினும், இந்தத் துறைக்கே உள்ள தனித்துவம் மற்றும் நம்பிக்கை காரணமாக பொதுமக்கள் இந்தத் துறையை இன்றும் விரும்பி, அதன் சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அஞ்சல் சேவையை திறம்படி செயல்படுத்தும் துறையாக அஞ்சல் பிரிப்புப் பணியை மேற்கொள்ளும் ஆர்.எம்.எஸ். எனப்படும் ரயில்வே மெயில் சர்வீஸ் செயல்பட்டு வருகிறது. இந்தத்துறையில் தற் போது செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக அஞ்சல் சேவையில் காலதாமதம் ஏற்படுவதாக அனைத்துத் தரப்பினரும் புகார் தெரிவிக்கின்றனர். தமிழகத்தில் ஆர்.எம்.எஸ் அலுவலகங்கள் 4 முக்கிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய மண்டலம் (திருச்சி, விழுப்புரம்), தெற்கு மண்டலம் (திருநெல்வேலி, மதுரை), வடக்கு மண்டலம் (சென்னை, காட்பாடி) மேற்கு மண்டலம் (கோவை, சேலம்) ஆகியவை முதல்நிலை அஞ்சல் பிரிப்பகங்களாகவும், அதன் கீழ் உள்ள ஊர்கள் நிலை 2 பிரிப்பகங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.



ஏற்கெனவே, அந்தந்த ஊர்களில் அஞ்சல் பெட்டிகளில் போடப்படும் உறைகள் அங்குள்ள ஆர்.எம்.எஸ். அலுவலகத்தி லேயே ஊர்வாரியாகப் பிரிக்கப்பட்டு, நேரடியாக அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு விடும்.



ஆனால், ஏப்ரல் 22ஆம் தேதி முதல் புதிய முறையை அஞ்சல்துறை அறிமுகப் படுத்தியுள்ளது. இதன்படி, நிலை 2 அலுவலகங்களில் சேகரிக்கப் படும் அஞ்சல் உறைகளில் உள்ளூர் தவிர மற்ற அனைத்து அஞ்சல் உறைகளும் முதல்நிலை பிரிப்பகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்தே மற்ற ஊர்களுக்கு பட்டுவாடா செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது. உதாரணமாக, திருச்சி முதல்நிலை அலுவ லகத்துக்குள்பட்ட திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் முகவரியிட்ட ஒரு அஞ்சல் உறை திருவாரூரிலிருந்து திருச்சிக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பின்னர் தஞ்சாவூருக்கு அனுப்பப்படுகிறது. இதனால் உரிய நேரத்தில் அஞ்சல் உறைகள் பொதுமக்களுக்கு கிடைப்பதில்லை. இதுகுறித்து ஆர்.எம்.எஸ் ஊழியர் சங்க மாநில அமைப்புச் செயலர் வீ. தர்மதாஸ் கூறியது:

சென்னையிலிருந்து கும்பகோணம் முகவரியிட்ட அஞ்சல் உறைகள் ரயிலில் கும்பகோணம் வழியாகத்தான் திருச்சிக்கு வருகின்றன. ஆனால், அவை கும்பகோணத்தில் இறக்கப்படாமல், திருச்சிக்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து பிரித்து மீண்டும் கும்பகோணத்துக்கு அனுப்பப்படுகிறது. இதனால் உரிய நேரத்தில் அஞ்சல் உறைகளை உரிய நபருக்கு சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக திருச்சி, புதுக்கோட்டை, கரூர், காரைக்குடி, தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகை ஆகிய நிலை 2 அஞ்சல் பிரிப்பகங்களிலிருந்து வரும் ஆயிரக்கணக்கான அஞ்சல் உறைகள் ஓரிடத்தில் (திருச்சியில்) குவிக்கப்பட்டு, அங்கிருந்து பிரித்து அனைத்து ஊர்களுக்கும் அனுப்பப்படுவதால் தான் இந்த பிரச்னை ஏற்படுகிறது. முன்பு இருந்தது போன்று அந்தந்த ஊர்களிலிலேயே அஞ்சல் உறைகள் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டால் இந்த தாமதங்கள் தவிர்க்கப்பட்டு, மறுநாளே மக்களுக்கு அஞ்சல் உறைகள் கிடைக்கும் என்றார்.

கூரியர் உள்ளிட்ட பல்வேறு தனியார் அஞ்சல் சேவை நிறுவனங்கள் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் நிலையில், குறைந்த கட்டணத்தில் சேவை வழங்கும் அஞ்சல் துறை தாமதமின்றி அஞ்சல் உறைகளை பட்டுவாடா செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் துறை மேலும் வளர்ச்சிபெறும் என்பதில் ஐயமில்லை.



**ஆசிரியர் குறிப்பு:**

சென்னையிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் இதழ்கள் எக்மோர் ஆர். எம். எஸ். அலுவலகத்தில் நேரடியாகச் சேர்க்கப்படுகின்றன. அதனால் அந்த இதழ்கள் வாசகர்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைகின்றன. ஆனால் திருவரங்கத்தில் தலைமை தபால் அலுவலகத்தில் 50பைசா தபால்தலை ஒட்டி அனுப்பப்படும் பல்வேறு இதழ்கள் பெருத்த தேக்க நிலையை எதிர்கொள்கின்றனர். திருக்சி ஜங்ஷன் ஆர்.எம்.எஸ். பிரிப்பகத்தில் இந்த இதழ்கள் பல நாட்கள் மூட்டைகளாகக் கட்டப்பட்டு மேலும் தாமதத்தை அடைகின்றன. இதன் முடிவுதான் என்ன? என்பதே தெரியவில்லை. விழுப்புரம் ஆர்.எம்.எஸ். அலுவலகத்தின் முன்பு உறை நீக்கப்பட்ட ‘தத்துவவாதா’ மாத இதழ்கள் நூற்றுக்கணக்கில் காணப்பட்டதாக அறியப்படுகிறது. இது போன்றே பாஞ்சஜன்யம் மாதஇதழும் உறை நீக்கப்பட்டு ஏதோஒரு அஞ்சல் அலுவலகத்தில் முடங்கி கிடக்கின்றன போலும். ✱✱✱

**2. தர்மசக்தி 27.5.2012 வாரஇதழில் வெளிவந்துள்ள செய்தி.**

**ஆலயம் காட்சிப் பொருளல்ல! கடவுளைக் காட்டி காசு பார்க்கும் அரசின் கயமையை எதிர்ப்போம்...**

‘தமிழக அரசு ஆலயத்தையும், ஆலயச் சொத்துக்களையும் இந்து அறநிலையத்துறை என்ற பெயரில் எடுத்து 50 ஆண்டு களுக்கு மேலாகிவிட்டது. ஆலயச் சொத்துகள் பறிபோவதும், அரசியல்வாதிகளின் கூடாரமாகிப்போனதும் தான் கண்ட பலன். ஆலயத்தை எந்த காரணத்திற்காக நிர்மாணம் செய்தார்களோ நம் முன்னோர்கள் இன்று அதன் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. வருமானத்தை மட்டுமே பார்க்கும் தமிழக அரசு, வருமானம் வராத கோயில்களை அலட்சியப்படுத்துகிறது. ஆலயத்தைக் காட்சிப் பொருளாக்கி, கடவுளைக் காட்ட காசு வசூலிப்பது கொடூரமானது. தன்மானமுள்ள எந்த இந்துவும் இதனை அனுமதிக்க முடியாது.

சர்ச்சிலோ, மசூதியிலோ வழிபட பணம் கேட்பதை அரசு பட்டாயப்படுத்த முடியுமா? இந்துக்கள் தங்கள் தெய்வத்தை வணங்க, வழிபட ஏன் காசு தரவேண்டும்? இந்துக்களின் பிறப்

புரிமையை மீட்டெடுக்க இந்து முன்னணி ஒரு பெரும் போராட்டத்தில் குதித்துள்ளது. அரசே! ஆலயத்தில் உள்ள தரிசனக் கட்டணங்களை ரத்து செய்! என்று கோடிக்கணக்கான கையெழுத்து இயக்கம் நடத்தி வருகிறது. இது நமது உரிமை! போராடுவோம்... வெற்றி பெறுவோம்...

ஆலயத்தின் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் சொத்துகளை ஏப்பம்விடும் அரசியல்வாதிகளையும், ஆக்கிரமிப்பாளர்களையும், அரசு துறைகளையும் விரட்டி ஆலயச் சொத்துக்களை மீட்டெடுத்தால் அனைத்து கோயில்களையும் சிறப்பாக நிர்வகிக்க முடியும்!'

**ஆசிரியர் குறிப்பு:** எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் கட்டணமின்றி கடவுளை தரிசிக்க முடியாது. அதிலும் 50ரூபாய் வரிசை, 150ரூபாய் வரிசை, 250ரூபாய் வரிசை, வைகுண்ட ஏகாதசியென்றால் 1000ரூபாய் வரிசை என்று கடவுளைக் காட்டிக் காசு பறிக்கும் பகற்கொள்ளைக்காரர்கள்தான் இந்து சமய அறநிலையத் துறையினர். குருவாயூரிலோ அல்லது கோடிக்கணக்கான மக்கள் கூடும் சபரிமலையிலோ இத்தகையதொரு கட்டண வசூல் கிடையாது. சென்னை உயர்நீதி மன்றத்தில் கடவுளை தரிசிப்பதற்குக் கட்டண வசூல் செய்யக் கூடாது என்று திரு.பிரபாகரன் என்பார் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்படப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சரின் தொகுதியில் அமைந்துள்ளது திருவரங்கம் பெரிய கோயில். இங்கே அரங்கநாதர் அரவணைமேல் துயில் கொண்டுள்ளார். அயோத்தி மாநகரிலிருந்து இலங்கைக்குச் செல்ல இருந்தவர் இங்கேயே தங்கி விட்டார். இராமனால் ஆராதிக்கப்பெற்ற இந்தப் பெரியபெருமாள் இந்தக் கட்டண வசூல் ஏற்படுத்திய பாதிப்பால் தினந்தோறும் குறிப்பிட்ட வேளையில் அமுதுபடிகள் எனப்படும் நைவேத்தியங்களைக் காண்பதில்லை. நேரத்தைக் கணக்கில் கொள்ளாமல் அதிக அளவில் 250ரூபாய் டிக்கெட்டுகளை விற்பனை செய்து அதன்மூலம் மதியம் 1மணிக்கு பெரிய அவசரத்திற்காக (மதிய உணவு படைத்தலுக்காக) மூடப்பட வேண்டிய கதவுகள் மதியம் 2.30 அல்லது 3.00 மணிக்குத்தான் மூடப்படுகின்றன. அதன்பிறகு தூய்மைப்பணிகள் மற்றும் ஆராதனங்கள் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 3.30 மணிக்கு அமுதுபடிகள் ஸமர்பிக்கப்படுகின்றன. சில நாட்கள் இதன் விளைவாக, திருமடைப்பள்ளி ஹோமம் கூட நடைபெறுவதில்லை. இவ்வாறு தெய்வத்தை வஞ்சிக்க வஞ்சிக்க நாட்டிலே பஞ்சமும் இயற்கையின் சீற்றங்களும் அதிகரித்துக் கொண்டே போகும். ஆட்சியாளர்கள் இன்று அதிகாரம் தங்கள் கையில் இருக்கிறது என்பதற்காக இறைவனுக்கு வஞ்சனை செய்தால் மக்கள் அனைவருமே அந்த இறைவனின் சீற்றத்தை எதிர்கொள்ள நேரிடும். ✱✱✱



**3. தினகரன் ஆன்மிக மலர் 9.6.2012 தேதியிட்ட இதழில் வெளிவந்துள்ள நகைப்புக்குரிய சமயம் சார்ந்த செய்தி.**

ஒவ்வொரு நாளும் புற்றீசல் போல ஆன்மீகப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. தற்போதைய காலகட்டத்தில் ஜோதிட குறிப்புகள், பரிகாரத்தலங்களைப் பற்றிய செய்திகள் இடம்பெறாத நாளிதழ்களோ வார இதழ்களோ கிடையாது. இன்று ஆன்மீகம் ஒரு பலசரக்குக்கடையாக மாறிவிட்டது. ஒரு காலத்தில் செப்புத்தகடு விற்பனை மிகப்பெரிய அளவில் நடைபெற்று வந்தது. ஒவ்வொரு இதழிலும் ஒரு மெல்லிய செப்புத்தகடு இடம் பெற்றிருக்கும். 'உங்கள் வீட்டில் நீங்கள் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு ஒரே பரிகாரம் இந்தச் செப்புத்தகடை நரஸிம்ஹர் அல்லது ஏதாவது ஒரு தெய்வத்தின் ஸந்நிதியில் போடுவதே' என்று அதில் ஒரு குறிப்பு இருக்கும். அடுத்த நாள் நரஸிம்ஹர் ஸந்நிதியில் அல்லது ஏதோ ஒரு தெய்வத்தின் ஸந்நிதியில் ஆயிரக்கணக்கான செப்புத்தகடுகள் வாரி இறைக்கப்பட்டிருக்கும்.

நாளிதழ் மற்றும் வாரஇதழ்களில் பல சமயம் திருத்தலங்களைப் பற்றிய கட்டுரைகள் வெளிவருகின்றன. இந்தக் கட்டுரைகளை சமய நிகழ்வுகளை அறியாத பலர் எழுதி வருகின்றனர். இவ்வாறு எழுதுபவர்கள் தாம் எழுதும் குறிப்புகளுக்கு எந்தச் சான்றாதாரங்களையும் காட்டுவதில்லை. பெரும்பாலும் இவைகள் திரிபுபெற்ற புராணக் கதைகளாகவோ அல்லது கட்டுரை ஆசிரியர் கற்பனையிலே எழுதப்பட்ட உண்மைக்கு ஒவ்வாத செய்திகளாகவோ இருக்கும். ஆன்மீகம் என்ற பெயரில் மக்களை மூளைச் சலவை செய்து அவர்கள் எண்ணங்களை திசைதிருப்பி பத்திரிகை விற்பனையை ஏதாவது ஒரு முறையில் அதிகப்படுத்தி பணம் சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன சில நாளிதழ்கள்.

இந்த நாளிதழ்கள் வாரத்தின் ஏழு நாட்களுக்கும் இலவச இணைப்பு என்று ஒரு சிறிய புத்தகத்தை வெளியிடும். தினகரன் என்ற நாளிதழ் சன் குழுமத்தால் வெளியிடப்பட்டு வருகிறது. தினகரன் 9.6.2012 நெல்லை பதிப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஆன்மீக மலரில் பக்கம் 12இல் 'ஆனந்த வாழ்வு அருளும் ஆதிநாதன்' என்றதொரு கட்டுரை பிரபு சங்கர் என்பரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் ஆழ்வார் திருநகரியில், அஹோபில மடத்தின் முதல் ஜீயரான ஆதிவண்சடகோபஜீயர் என்பவர்தான், நம்மாழ்வாரை முகம்மதியர் கலகத்திற்குப்பிறகு மீண்டும் பிரதிஷ்டை செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கண்டுள்ள செய்தியாவது.

***'ஸ்ரீரங்கம் ரங்கநாதரைப் போலவே நம்மாழ்வாரின் அர்ச்சா வதாரமும் சிலகாலம் ஒளித்து வைக்கப்பட்டது. அஹோபில மடத்தின் முதல் ஆசார்யராக விளங்கியவர் ஸ்ரீமத் ஆதிவண் சடகோப யதீந்திர மஹாதேசிகன். இவர் நம்மாழ்வாரை ஸேவிப்பதற்காக ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினார். ஆனால் சந்நிதியில் ஆழ்வாரைக் காணோம். தவித்து மறுகினார் அவர். மாற்று சமயத்தினர் அந்தத் திருமேனியை எடுத்துச் சென்று, மலையில் ஒரு சுனைக்குள் ஒளித்து வைத்து விட்டார்கள். உடனே ஆழ்வாரின் 'கண்ணி நுண் சிறுத்தாம்பினால்.....' என்று ஆரம்பிக்கும் பாசுரங்களை ஆயிரம் முறை ஓதியபடி, அப்போது அப்பகுதியை ஆண்டுவந்த குலசேகரப் பாண்டியனின் உதவியுடன் தேடிச் சென்றார். அப்போது சுனையின் மேல்பகுதியில் ஆழ்வார் தன்னை சடகோப ஜீயருக்கு வெளிப்படுத்தினார். உடனே பரவசத்துடன் அவரை எடுத்து நெஞ்சார அணைத்து கீழே எடுத்து வந்தார் ஜீயர். பழையபடி தன் தனி சந்நதிக்குள் நிலை கொண்டார் நம்மாழ்வார்.'***

'பாட்டி கதை' என்று கிராமப் பகுதிகளில் சிறு பிள்ளை களுக்குக் கதை சொல்லுவார்கள். அந்தக் கதைக்கு எந்த ஆதாரமும் இருக்காது. 'ஒரு ஊரிலே ஒரு ராஜா' என்று அந்தக் கதை தொடங்கும். அந்தக்கதை முழுவதுமே கற்பனையில் பிறந்தக் கதையாகும். அதேபோலத்தான் அமைந்துள்ளது ***மாற்று சமயத்தினர் அந்தத் திருமேனியை எடுத்துச் சென்றதும்,*** ஆதிவண்சடகோபஜீயர் மலை உச்சியில் ஆழ்வாரைத் தேடியதும், கண்ணி நுண் சிறுத்தாம்பை உருச்சொன்னதும், ஆழ்வார் திருநகரியில் மண்டியிருந்த அடர்ந்த காட்டினை நீக்கி ஆழ்வாரை பிரதிஷ்டை செய்ததும் போன்ற ஆதாரமற்றச் செய்திகள்.



இந்தக் கட்டுரை ஆசிரியருக்கு, சமயம் தொடர்பான செய்தி களோ, கல்வெட்டு ஆராய்ச்சியோ, வரலாற்று செய்திகளோ ஏதும் தெரியாது என்பதை இனி நிரூபிப்போம்.

தென்னிந்தியாவின் மீது கி.பி. 1311ஆம் ஆண்டு மாலிக்காஃபூர் தான் முதன் முதலாகப் படையெடுத்தான். இவனு டைய படையெடுப்பின்போது தென்தமிழ்நாடு நிலைகுலைந்தது. இதைத் தொடர்ந்து கி.பி. 1323ஆம் ஆண்டு பிற்காலங்களில் முகம்மதுபின் துக்ளக் என்று அழைக்கப்படும் உலூக்கான் என்பான் பெரும்படையோடு வந்து தென்தமிழ்நாட்டை சூறையாடி மதுரை சுல்தான்களை ஆட்சியில் அமர்த்தி டில்லி சென்றடைந்தான். இதன் விளைவாக திருவரங்கத்திலிருந்து அழகிய மணவாளன் எனப்படும் உத்ஸவ விக்ரஹம் பிள்ளைலோகாசார்யர் மற்றும் அவருடைய சிஷ்யர்களால் மதுரை ஆனைமலையடிவாரத்தில் அமைந்துள்ள ஜோதிஷ்குடி, திருமாலிருஞ்சோலை, பொள்ளாசி, பாலக்காடு, கோழிக்கோடு, முந்திரிக்காடுகள், திருக்கணாம்பி, திருநாராயண புரம், திருமலைக் காடுகள், திருமலை, செஞ்சி, அழகிய மணவாளம் ஆகிய ஊர்களில் பாதுகாக்கப்பட்டு கி.பி. 1371ஆம் ஆண்டு விஜயநகர சாம்ராஜ்யத்தின் சங்கமகுல மன்னனான வீரகம்பண்ண உடையார், கோபணார்யன் ஆகியோருடைய உதவியால் திருவரங்கம் திரும்பினார்.

அதே காலகட்டத்தில் நம்மாழ்வார் அர்ச்சா திருமேனி ஆழ்வார் திருநகரியிலிருந்து கோழிக்கோடு, முந்திரிக்காடுகள், திருக்கணாம்பி ஆகிய ஊர்களில் அழகிய மணவாளனோடு ஒரு சேர ஆராதித்து வந்தனர். முந்திரிக்காடுகளில் நம்மாழ்வாரை பாதுகாப் பாக வைத்திருந்து பள்ளத்தாக்கிலிருந்து மீட்டிடும்போது உயிர்த் தியாகம் செய்தவர் தோழப்பர் என்பார். திருவாய்மொழிப் பிள்ளை என்னும் ஆசார்யரின் காலம் கி.பி. 1301 - 1406. இவர் பாண்டிய அரசவையில் மந்திரியாகப் பணியாற்றி வந்தார். கேரள நாட்டு மன்னனின் உதவி கொண்டு திருக்கணாம்பியில் இருந்த ஆழ்வாரை திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரிக்கு கி.பி. 1371ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட, கி.பி. 1406 முற்பட்ட ஏதோஒரு காலகட்டத்தில் எடுத்துவந்து காடுமண்டிக்கிடந்திருந்த அந்த ஊரைச் சீர்திருத்தி நம்மாழ்வாரை பிரதிஷ்டை செய்தார். அதனால் இவருக்குக் காடுவெட்டி ஐயன் என்ற பெயரும் அமைந்துள்ளது.

ஆதிவண்சடகோப ஜீயர் நம்மாழ்வார் விக்ரஹத்தை மீட்டு வருவதிலும் பிரதிஷ்டை செய்ததிலும் எந்தப் பங்கும் வகிக்க வில்லை. வகித்திருக்கவும் முடியாது. ஏனெனில் அவர் பட்டத்திற்கு வந்த ஆண்டு கி.பி. 1516 ஆகும். கிருஷ்ணதேவராயர் காலத்தில் (கி.பி. 1509 -1529) ஏற்படுத்தப்பட்டது அஹோபில மடம். திருமலையில் நந்தவன கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த ஆதிவண் சடகோப ஜீயர் அஹோபில மடத்தின் முதல் ஜீயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் தான் மதுரை நாயக்கர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டனர். ஒன்றான அஹோபிலமட ஜீயர் காலத்தில் மதுரை நாயக்கர்கள் தான், வழுதி வளநாடு என்று கொண்டாடப்படும் ஆழ்வார் திருநகரிப்பகுதியை ஆண்டு வந்தனர். அந்தக் காலகட்டத்தில்பாண்டிய மன்னர்கள் நிலைகுலைந்து அழிந்து போயினர். மேற்கூறிய செய்திகள் அனைத்தும்16ஆம் நூற்றாண்டில் பிள்ளைலோகம் ஜீயர் என்பாரால் எழுதப்பெற்ற 'யதீந்த்ரப்ரவண ப்ராபாவம்' என்னும் நூலிலும், கோயிலொழுகு எனப்படும் திருவரங்கம் கோயில் வரலாற்றினை தெரிவிக்கும் சுவடிகளிலும்,தென்கலை வைணவ குருபரம்பரை யிலும் விவரிக்கப்பட்டுள்ளன. திரு. T. A. Rajagopalan என்பாரால் கி.பி. 2005ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்ட The Origin and Growth of Ahobila Mutt என்ற கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூலில் ஆதாரங்களின் அடிப்படையில் ஒன்றான அஹோபிலமட ஜீயரின் காலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆகவே உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளி யிட்ட தினகரன் நாளிதழ் ஆசிரியர் அந்தச் செய்திக்கான மறுப்பையும் வெளியிட வேண்டும். அவ்வாறு அவர் செய்வாரா என்பதைப் பொருத்து அவர்மீது உண்மைக்கு மாறான கட்டுரையை வெளியிட்டதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று Press Council of Indiaவிடம் மேல்முறையீடு செய்யப்படும்...

***

**4. கம்பராமனுக்கு ஓர் நினைவஞ்சலி:**

திருவரங்கத்தில் தமிழ்மொழியை வளர்த்து வரும் செண்பகத் தமிழ் அரங்கின் ஆதரவில் கம்பராமன் என்று கற்றோர்களால் கொண்டாடப்பட்டு வரும் கைங்கர்ய ஸ்ரீமான்



எஸ்.கே. இராமராசன் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி. நிகழ்ச்சிகள் 9.6.2012 அன்று நடைபெற்றன.

''கம்பநாடர் மீது ஆராத காதல் கொண்ட கல்விக்கடல் எஸ்.கே. இராமராசனார் 'கம்பராமன்' என்னும் பிறிதொரு பெயரும் கொண்டவர். கம்பராமன் நந்தா விளக்கனைய நாயகர்; நானிலத் தோர் போற்றும் நற்குணச்சீலர்; அகத்தும் புறத்தும் தூய்மைபேணிய அருங்குணக்குன்று ஆவார் என்று பெரியோர்களால் கொண்டாடப் படுபவர். 82ஆண்டுகள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த அவர் 6.6.2004ஆம் ஆண்டு ஆசார்யன் திருவடியை அடைந்தார். இலக்கியப்பெருஞ்செல்வரான கம்பராமன், கம்பராமாயணம், பாலகாண்டம், அயாத்தியாகாண்டம் ஆகிய இரு காண்டங்களுக்கு விளக்கவுரை, மேகநாதம், ஆழ்வார்களும் கம்பனும் ஆகிய நூல்களை எழுதியவர். கம்பராமன் அவர்களின் - நினைவாற்றலும் புலமைத் திறனும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. அன்னார் ''தமிழ் மொழியிடத்து ஆராக்காதல் பூண்டாழுகுபவர். இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்ற கல்வியாளர். கல்வியின் பயனாக நல்லொழுக்கமும் தெய்வ சிந்தனையும் நிரம்பியவர். நன்றே நினைந்து குணமே மொழியும் நற்செயலாளர். நோக்கம் மட்டுமின்றிப் போக்கும் சிறப்புற்ற பண்பாளர். பண்டைய பெருமக்களின் நன்னூல்களைப் பக்தி சிரத்தையுடன் ஓதி இன்புறுபவர். முன்னையோர் கண்ட முறைக்கு முரண்படாதவாறு பின்னையோர் வேண்டும் புதுமைகளைத் தழுவிநிற்கும் சால்பினர். பன்னூற் பயிற்சியும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் உடையவர். கவியரங்கம் பலவற்றில் பங்குகொண்டு பாராட்டுப் பெற்றவர்'' என்று கம்பன் அடிப்பொடி திரு. சா.கணேசன் புகழாரம் சூட்டியுள்ளார்.

திருமதி. பிரேமா நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் முனைவர் திரு. ப. சுப்பிரமணியன் அவர்களால் தொகுக்கப்பட்ட ''கற்றோர் பார்வையில் கம்பராமன்'' என்ற நூல் வெளியீடு செய்யப்பெற்றது. அன்றைய தினம் சிறப்பு விருந்தின ராக சிவகங்கை அரசினர் கலைக்கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் கைங்கர்ய ஸ்ரீமான் ம.பெ. சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். கம்பராமன் அவர்கள் ஆழ்வார் களின் பாடல்களில் ஆழங்கால்பட்டு எவ்வாறு உரை வரைந்

துள்ளார் என்பதை தக்க சான்றுகளுடன் எடுத்துரைத்தார். செவிக்கினிய செஞ்சொல்லாக அமைந்திருந்தது அவருடைய அன்றையச் சொற்பொழிவு. ✱✱✱

**5. அழகியமணவாளம் என்ற கோபுரப்பட்டியில் நந்தன ஆண்டு வைகாசி 17ஆம் நாள் நடைபெற்ற நம்பெருமாள் ஆஸ்தானம் திரும்பிய விழாக் கொண்டாட்டங்கள்.**

திருவரங்கத்திலிருந்து கி.பி. 1323ஆம் ஆண்டு புறப்பட்ட அழகிய மணவாளன் பல்வேறு ஆபத்துக்களைத்தாண்டி கி.பி. 1350ஆம் ஆண்டு திருமலையைச் சென்றடைந்தார். செஞ்சியை ஆண்ட குறுநிலமன்னனான கோபணாரியன், அழகிய மணவாளனை செஞ்சிக்கு எழுந்தருளப் பண்ணினான். விஜயநகர சங்கமகுல மன்னனான வீரகம்பண்ண உடையாரின் உதவியுடன் அழகிய மணவாளன் திருவரங்கம் நோக்கி படைவீரர்களுடன் கி.பி. 1371ஆம் ஆண்டு புறப்பட்டார்.

''திருவரங்கத்தில் அரவணைமேல் அறிதுயில் கொள்ளும் அரங்கனது உறக்கம் கலையாதிருப் பதற்காக மேலிருந்து விழுந்த கற்களை ஆதிசேஷன் தன் தலைமேல் தாங்கி நின்றான். அந்தத் திருக் கோயிலில் மற்றைய கடவுள் சிலைகளுக்கு ஏற்பட்ட ஆபத்தை சொற்களால் வர்ணிக்க முடியாது. திருக் கோயிலின் கதவுகள் செல்லரித்துக் கொண்டிருந்தன. மஹாமண்டபங்களிலும் தோரண வாயில்களிலும் செடிகள் பச்சைக் கொடியை ஆட்டிக் கொண்டு இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.'' என்று மதுராவிஜயத்தில் திருவரங்கத்தின் அவலநிலை குறிப்பிடப் பட்டுள்ளது.

சமயபுரம் என்று அழைக்கப்படும் கண்ணனூரில் கடுமையான போர் நிகழ்ந்தது. அப்போது அழகிய மணவாளன் கொள்ளிடத்தின் வடகரையில் மண்ணச்சநல்லூரிலிருந்து திருப்பைஞ்சீலி செல்லும் பாதையில் அமைந்துள்ள கோபுரப்பட்டி என்னும் அழகிய மணவாளன் கிராமத்தில் உள்ள ஆதிநாயகப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்தார். முகம்மதியர்களை வென்றபிறகு **பரீதாபி ஆண்டு (கி.பி. 1371) வைகாசி 17ஆம் நாள் அழகிய மணவாளம்** கிராமத்திலிருந்து அழகிய மணவாளனும் உபய நாச்சிமார்களும் மூன்றாம் திருச்சுற்றில்



சேரனை வென்றான் மண்டபத்தில் (பவித்ரோத்ஸவ மண்டபத்தில்) எழுந்தருளப் பண்ணப்பட்டனர். ஒரு வண்ணானால் (ஈரங்கொல்லியால்) அழகிய மணவாளனுக்குச் சூட்டப்பட்ட அழகிய திருநாமமே நம்பெருமாள் என்பது. கி.பி. 1371ஆம் ஆண்டு தொடங்கி அழகிய மணவாளனுக்கு நம்பெருமாள் என்ற திருநாமம் வழங்கப்பட்டு வருகிறது.

திருவரங்கம் கோயிலில் சேதமுற்றிருந்த மண்டபங்கள் ஸ்ரீரங்கவிமானம், திருச்சுற்றுகள் ஆகியவற்றை விஜய நகர மன்னர்களான விருப்பண்ண உடையார், இரண்டாம் ஹரிஹரன் ஆகியோர் காணிக்கையாய் அளித்த பொற்காசுகள் கொண்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கொடிக்கம்பம், பலிபீடம் ஆகியன இல்லாமல் இருந்தன. கி.பி 1383ஆம் ஆண்டு சித்திரை மாதம் ரேவதி நக்ஷத்திரத்தில் நம்பெருமாளுக்கு த்வஜா ரோஹண உத்ஸவத்தை விருப்பண்ண உடையார் பேரில் விருப்பன் திருநாள் என்று பல ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தினார். அழகிய மணவாளன் 48 ஆண்டு காலமாக சுமார் பத்து இடங்களில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடமோ தேசமோ எழுந்தருளக் காரணம் ஆங்காங்கே நடைபெற்ற ஆட்சி மாற்றங்களே.

அழகிய மணவாளன் கலாபத்திற்குப் பிறகு திருவரங்கத்திற்கு **மீண்டு வந்ததற்கு கல்வெட்டு ஆதாரம் உள்ளது.** ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண்.286 (A.R. No. 55 of 1892) ***(ஆனால் அந்த கல்வெட்டை மறைத்து மின்கருவிகள் கொண்ட பலகை பொருத்தப் பட்டுள்ளது. அந்தப் பலகையை அந்த இடத்திலிருந்து நீக்கிட அழகிய மணவாளன்தான் அருள்புரிய வேண்டும். வரலாற்றுத் தடயங்களை அழிப்பதில் நம்மவர்களுக்குள்ள விருப்பம் அளத்தற்கரியது.)***

அழகியமணவாளன் திருவரங்கத்திற்கு மீண்டும் எழுந்தருளுவதற்கு முன்பு தமக்குப் புகலிடமாய்க் கொண்ட கோபுரப்பட்டி (அழகிய மணவாளம் கிராமம்) ஆதிநாயகப் பெருமாள் திருக்கோயிலில் வைகாசி 17ஆம் நாள் (புதன்கிழமை 30.5.2012) பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் காலை 10 மணியளவில் நடைபெற்றது.

ஆனால் திருவரங்கத்தில் நம்பெருமாள் திரும்பி வந்த வைபவம் பற்றிய சிந்தனையே இல்லை. நீதிமன்ற உத்தரவின்

பேரில் சென்ற சில ஆண்டுகளாக இடம்பெற்று வந்த நாட்காட்டி குறிப்பு இந்த ஆண்டு இடம்பெறவில்லை. இதன் பின்புலத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. வரலாற்று உணர்வற்ற மனிதர்கள் வாழும் இடமே திருவரங்கம் என்பதை நாட்காட்டியிலிருந்து இந்தக் குறிப்பை நீக்கியவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். இவர்களுக்கு நம்பெரு மாள் இருந்தால் என்ன? மீண்டு வந்தால் என்ன? அவரவர்களுக்கு கிடைக்க வேண்டிய வசூல் பணம் கிடைத்தால் போதும் என்ற எண்ணமே ஓங்கியுள்ளது. ✱✱✱

**6. சேலத்தில் ராமாநுஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான கால்கோள் விழா நிகழ்ச்சி:**

சேலம். ஸ்ரீ பகவத் ராமாநுஜ கைங்கர்ய சொஸைட்டியினர் சேலம் எருமாப்பாளையம் பகுதியில் அமையவுள்ள ஸ்ரீபகவத் ராமாநுஜர் மணிமண்டப கட்டத்திற்கான அடிக்கல் 14.6.2012 வியாழக்கிழமையன்று திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி ஸ்வாமியின் திருக்கரங்களால் நாட்டப்பெற்றது. அன்று மாலை திரிதண்டி. ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி அடிக்கல் நாட்டு விழாவினைச் சிறப்பித்து சிலாசாஸனத்தை திறந்து வைத்தார். இந்த விழாவிற்கு திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி தலைமை வகித்தார். ஆடிட்டர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீராமன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திருச்சித்ரகூடம் ஸ்ரீ.உ.வே. ரங்காசார்யர், ஸ்ரீரங்கம்ஸ்ரீ.உ.வே. கபிஸ்தலம் ஸ்ரீநிவாஸாசார்யர், காஞ்சிபுரம் ஸ்ரீ.உ.வே. ராஜஹம்ஸம், சென்னை ஸ்ரீ.உ.வே. தேவராஜன், சென்னை ஸ்ரீ.உ.வே. அனந்த பத்மநாபன், காஞ்சிபுரம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிதி, ஸ்ரீரங்கம் ஸ்ரீ.உ.வே. பத்ரி நாராயண பராசர பட்டர், மதுராந்தகம் ஸ்ரீ.உ.வே. ரகுவீர பட்டாசார்யர், ஸ்ரீரங்கம் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர், புவனகிரி கைங்கர்ய ஸ்ரீமான். கோகுலாசார்யர், ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீமதி. ஆஸுரி சுதா அம்மங்கார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி தம்முடைய சிறப்புரையில் அனைவரும் இந்த மணிமண்டப கைங்கர்யத்தில் ஏன் பங்கு கொள்ள வேண்டுமென்பதை விரித்து ரைத்தார். மேலும் நன்கொடையாக ரூபாய் மூன்று லட்சம் ஸ்ரீ ஜீயர்



ஸ்வாமியால் வழங்கப்பட்டது. புரவலர்கள் பலர் இந்த மணி மண்டபம் கட்டுவதற்கான நன்கொடைகளை நிர்வாகிகளிடம் சேர்ப்பித்தனர். நிதிஉதவி அளிக்க விரும்பும் பாஞ்சஜன்யம் வாசகர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டிக் கொள்கிறோம்.

ஸ்ரீபகவத் ராமாநுஜ கைங்கர்ய சொஸைட்டி
அலுவலகம் எண்: 277, அரிசிப்பாளையம் மெயின்ரோடு, சேலம்-636 009. போன்: 0427-3290632, கைபேசி: 98947 66501, 98651 11230, 98428 15398.

**7. கைங்கர்ய ஸ்ரீமான் சேலம் A.S. ஸ்ரீராம் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம்.**

ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமியின் சிஷ்யரும், கைங்கர்ய ஸ்ரீமானுமான ஸ்ரீராம் அவர்களின் 60ஆவது ஆண்டு நிறைவு விழா 15.6.2012 வெள்ளிக்கிழமையன்று சேலத்தில் அவருடைய இல்லத்தில் நடைபெற்றது. பல்வேறு திவ்யதேசத்து அத்யாபகர்கள் மற்றும் வேதம் வல்லார்கள் எழுந்தருளியிருந்து அருளிச்செயல் மற்றும் வேதபாராயணங்களை மேற்கொண்டனர். 15.6.2012 அன்று திரிதண்டி சின்ன ஜீயர் ஸ்வாமி எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினார். ஸ்வாமியுனுடைய திருவாராதனப் பெருமாளான சீதா லக்ஷ்மண ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி திருக்கல்யாண வைபவத்தின் பெருமையை பரக்க உபந்யஸித்தார். சீதா ராம விவாஹம் ஆனபிறகு ஸ்ரீமதி. உமா ஸ்ரீராம், ஸ்ரீராம் தம்பதியினரின் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. வைதிகோத்தமர்கள் பலர் எழுந்தருளி தம்பதிகளுக்கு ஆசி நல்கினர். ஸ்ரீராம் தம்பதியினர் இதேபோன்று மேலும் பல வைபவங்களைக் கண்டருளி ''நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே'' ''திருமால் அடியார்களை பூசிக்க நோற்றார்களே'' என்னும்படியாக இருபது ஆண்டுகளில் சதாபிஷேக மஹோத்ஸவம் கண்டருள வேண்டுமென்று திருவரங்கம் திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன். ஷஷ்டியப்தபூர்த்தி விழாவினையொட்டி அன்றைய தினம் 'நம்பெருமாள் வனவாசம்' என்ற விழா மலர் வெளியீடு செய்யப்பெற்றது. ✱✱✱

**8. ஸ்ரீ வைஷ்ணவ அடியார் கோயிலூர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமியின் 70ஆவது ஆண்டு பூர்த்தி விழா.**

அடியேனுடைய உறவினரும் ஆப்தருமான கோயிலூர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமியின் 70ஆவது ஆண்டு பூர்த்தி விழா உற்றார் உறவினரின் விருப்பப்படி தஞ்சை ஜில்லா ஒரத்தநாடு தாலுகாவில் அமைந்துள்ள கோயிலூர் என்னும் கிராமத்தில் வெகு சிறப்புடன் நடைபெற்றது. நாலாயிர திவ்யப் பிரபந்த ஸேவை சாற்றுமுறையுடன் இந்த வைபவம் 7.6.2012 நடைபெற்றது. ஆசார அநுஷ்டானங்களுடன் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் எவ்வாறு வாழ்ந்து காட்ட வேண்டுமென்பதற்கு இந்த ஸ்வாமி ஓர் உதாரண புருஷராகத் திகழ்கிறார். ஸ்வாமி மேலும் பல கைங்கர்யங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இன்னும் பத்து ஆண்டுகளில் சதாபிஷேக மஹோத்ஸவம் கண்டருள வேணும் என்று திருவரங்கம் திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் வேண்டி நிற்கின்றேன். ✱✱✱

**9. மஹநீயரின் பரமபத ப்ராப்தி:**

நந்தன வருஷம் ஆனி மாதம் 2ஆம் தேதி (16.6.2012) சனிக்கிழமை பொடவூர் அனந்தாசார்யர் ஸ்வாமி ஆசார்யன் திருவடியடைந்தார். பாஞ்சஜன்யம் வாசகர்களில் ஒருவரான ஸ்ரீ.உ.வே. அனந்தாசார்யர் ஸ்வாமி பாஞ்சஜன்யத்தில் வெளிவரும் கட்டுரைகளைப் பற்றிய தமது கருத்துக்களை அவ்வப்போது எழுதி வருவார். சிறந்த சமூக சேவகர். ஆண்டுதோறும் கிழக்குத் தாம்பரத்தில் மார்கழி மாதம் முப்பது நாளும் விழா எடுத்துக் கொண்டாடுவார். தெளிவான சிந்தனை படைத்தவர். பிறர் துன்பங்கண்டு ஐயோ என்று இரங்குபவர். 79 திருநக்ஷத்திரம் கண்ட இந்த ஸ்வாமியின் கையெழுத்து அச்சுக்கோர்த்தது போல் காணப்படும். அண்ணாருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பே. அவரைப் பிரிந்து வாடி நிற்கும் குடும்பத்தினருக்குத் தகுந்த ஆறுதலை நல்கிட பெரிய பிராட்டியார், பெரிய பெருமாள் திருவடிகளில் இறைஞ்சி நிற்கிறேன். ✱✱✱

# நெல்லை. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின், தரம் தாழ்ந்த செயல்

பல்கலைக் கழகங்களின் தரம் தாழ்ந்து விட்டது என்பதை தினகரன் 2012 ஜூன் 25ஆம் தேதியிட்ட நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி உறுதிப்படுத்துகிறது.

**தினகரன் திருச்சி பதிப்பில் வெளிவந்துள்ள செய்தி.**

**பல்கலைக்கழக பாடக்குழு மீது அதிருப்தி. கல்லூரி பாடத்தில் ஆண்டாள் பற்றிய சர்ச்சை.**

பல்கலைக்கழகங்களில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாடங்கள் மாற்றப்பட்டு வருகின்றன. இதற்காக ஓராண்டிற்கு முன்பே பாடக்குழு கூடி அனைத்து கல்வியாளர்கள் மற்றும் பதிப்பகங்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். பின்னர் அவர்கள் வழங்கும் ஆய்வுக் கட்டுரைகளை பரிசீலித்து பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகத்தில் 2012-13ஆம் கல்வியாண்டில் முதலாம் பருவத்திற்கு பாடங்கள் மாற்றப்பட்டுள்ளன. பாடங்கள் பற்றிய விவரம் கடந்த 4 நாட்களுக்கு முன்பு பல்கலை. இணையதளத்தில் வெளிடப்பட்டது.

**இதில் தமிழ் பாடத்திட்டத்தில் ஆண்டாளை தேவதாசி யாவும், அவர் பெரியாழ்வாருக்கு திருட்டுத்தனமாக பிறந்த தாகவும், ஆண்டாள் மீது மன்னர் வல்லபதேவன் மோகம் கொண்டு பரிசுகள் அனுப்பியதாகவும் சிறுகதை அமைந்துள் ளது. மேலும் ஆபாச வர்ணணைகளும் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.**

**'முற்றுகை போராட்டம்: ஏ.பி.வி.பி. மண்டல செயலாளர் அனில்குமார் கூறியதாவது:** எம்.எஸ். பல்கலை பாடத்திட்டத்தில் நோன்பு என்ற சிறுகதை இடம் பெற்றுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ் மொழியில் நல்வழி காட்டும் நீதிக்கதைகள் எத்தனையோ இருந்தும் உண்மைக்கு புறம்பான, கீழ்த்தரமான சிறுகதையை தேர்வு செய்தது எப்படி? தமிழ் இலக்கிய ஆன்மீகத்தில் 12 ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வார் ஆண்டாள். அப்படி இருக்கும்போது அவரை தேவதாசியாக சித்தரிப்பது தமிழர்களின் உணர்வை புண்படுத்தும் வகையில் உள்ளது. இதனை நீக்காவிட்டால் பல்கலை. முற்றுகை போராட்டம் நடத்தப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

அவசர கதியில் ஏன்? இதுபற்றி முன்னாள் பேராசிரியர் குமார் கூறியதாவது: துணைவேந்தர் இல்லாத நிலையில் இதுபோன்ற அவசரம் ஏன்? தற்போது எம்.எஸ், பல்கலை.யில் 90 கல்லூரிகள் வரை உள்ளன. இதன் மூலம் ஒரு ஆண்டிற்கு 45, 000 முதல் 80 ஆயிரம் மாணவ, மாணவியரை இந்த பாடங்கள் சென்றடைகின்றன. இதனையே 4 ஆண்டுகளும் மாணவர்கள் பின்பற்ற வேண்டும். எனவே புதிய பாடத்திட்டத்தை அமல்படுத்ாமல் முந்தைய பாடத்திட்டதையே செயல்படுத்தலாம்.

அகில பாரத வித்யாத்தி பரிஷத், பல்கலையில் இப்பாடத்தை சேர்த்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து போஸ்டர்கள் ஒட்டியுள்ளர். இதையடுத்து, பல்கலை பாடத்திட்டக்குழு மீது பல்வேறு புகார்கள் பேராசிரியர்கள் மத்தியில் எழுப்பப்பட்டுள்ளது.

பல்கலை கழகத்தில் கடந்த மே மாதத்தில் கூட்டத்தை கூட்டி பாடதிட்டத்தை மாற்றுவது குறித்து அவசரமாக முடிவு எடுத்துள்ளனர். பெரும்பாலான பேராசிரியர்கள் கோடை விடுமுறைக்கு வெளியூர் சென்றுவிட்டதால் அனைத்து பேராசிரியர்களும் இப்பணியில் பங்கு கொள்ள முடியவில்லை எனவும் கூறப்படுகிறது.''

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் ஏதோவொரு வகையில் ஊழல்கள் மலிந்துள்ளன. விடைத்தாள் திருத்துவதில் மோசடிகள் நடைபெறுகின்றன. ஆசிரியர் நியமனங்களிலும் குளறுபடிகள் காணப்படுகின்றன. பல்கலைக் கழ



கங்கள் ஓர் வரம்பிற்குள் செயல்பட வேண்டும். அரசியல்வாதிகளுக்கு அங்கு இடமில்லை. ஆனால் துணைவேந்தர் நியமனத்திலிருந்து மாணவர் சேர்க்கைவரை அரசியல்வாதிகளே பல்கலைக்கழகங்களை நிர்வகித்து வருகின்றனர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியாரைப்பற்றிய கட்டுரைகள் வரைந்தோருக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி வருவோர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல. கல்வித்தரம் என்பதுவேறு. சாதி சமய உணர்வு என்பதுவேறு. பல்கலைக்கழகங்களில் சாதி உணர்வுக்கு இடமில்லை. பொது மேடைகளில் இவர்கள் முழக்கமிட்டு போகட்டுமே. சமய உணர்வைப் பாதிக்கும் எந்தச் செயல்களிலும் பல்கலைக்கழகங்கள் ஈடுபடக்கூடாது.

அண்மையில் அம்பேத்கார் பற்றிய கார்ட்டூன் C.B.S.E. பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தது தவறு என்று சுட்டிக்காட்டிப் பெரியதொரு போராட்டம் நடைபெற்றது. அதேபோல ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிய கார்ட்டூன் பற்றிய சர்ச்சையும் எழுந்தது. ஆனால் தமிழ்மொழிக்கு வளமூட்டிய ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாளைப்பற்றித் தரம் தாழ்ந்த கட்டுரை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் ஏன் இடம்பெற வேண்டும். நோன்பு சிறுகதையில் ஆண்டாளைப் பற்றிய கற்பனைக் கதைகள் ஏன் இடம்பெற வேண்டும். பாத்திமாவைப் பற்றியோ அல்லது கன்னிமேரியைப் பற்றியோ இதுபோன்றதொரு கட்டுரை இடம்பெற்றிருந்தால் அந்தப் பல்கலைகழக வளாகமே தீப்பற்றி எரிந்திருக்கும். இந்துக்களை எவ்வளவு சீண்டினாலும் 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிப்போவோர்களே 99.9 சதவிகிதம் மக்கள். அதனால் இந்துக்களையும், இந்துக் கடவுளர்களையும், இந்துக்களின் பழக்க வழக்கங்களையும் கேலி செய்வதே தொழிலாகக் கொண்டுள்ளனர் கருங்காலிகளான சில இந்துக்கள். இந்த நாட்டில் இவர்களுடைய திருவிளையாடல்கள் எண்ணிலடங்கா. அகில இந்திய வித்யாபரிஷத் போன்ற தன்மான உணர்வு கொண்ட மாணவர் இயக்கங்கள்தான் ஓரளவிற்கு தமது எதிர்ப்பை காட்டி வருகிறார்கள்.

இத்தகையதொரு கட்டுரை இடம்பெற்றதற்கு அனைத்து தமிழ் மக்களும் குறிப்பாக ஸ்ரீவைஷ்ணவர்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்திட வேண்டும். ஆனால் செய்வார்களா என்பது பெரிய தொரு கேள்விக்குறி. திருப்பாவையை வைத்து அத்புதமாக சொற்பொழிவு ஆற்றும் அறிஞர்கள் தம் எதிர்ப்பை தெரிவிப்ப தோடு மட்டுமல்லாமல் அவர்கள் சொற்பொழிவாற்றும்போது மக்களிடையே நாச்சியாருக்கு ஏற்பட்ட தலைகுனிவை எடுத்துக்கூற வேண்டும். சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்தோர் இதுபோன்ற தொரு செய்திகளை சொற்பொழிவாளர் கூறுவதை விரும்புவ தில்லை என்று தப்பித்துக் கொள்வது ஆண்டாளுக்குச் செய்யும் துரோகமாகும். இவர்களை ஆண்டாள் மன்னிக்கவே மாட்டாள். மேலை நாடுகளில் வசிக்கும் 'Groups' அன்பர்கள் தங்கள் செய்திமடல் மூலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் திற்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். ✱✱✱

## ஓர் அறிவிப்பு

இராமானுசர் ஆயிரம் முதல் பாகத்துடன் (மூன்று பகுதிகள்) இணைக்கப்பெற்ற வினாத்தாளுக்கான விடைகளை அன்பர்கள் 1.8.2012 தேதிவரை எழுதி அனுப்பலாம். பலருடைய வேண்டு கோளுக்கிணங்க இந்த நீட்டிப்பு செய்யப்படுகிறது. 31.5.2012ஆம் தேதி வரை சலுகை விலையான ரூ.500ருக்கு விற்பனை செய்யப்பட்ட இந்த நூலின் விலை ரூ.800 ஆகும். கொரியரில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ரூ.100ஐ சேர்த்து அனுப்ப வேண்டும். 1800 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் எடை இரண்டரை கிலோ ஆகும். ஆகவே கொரியருக்கான கட்டணம் ரூ. 100 ஆகிறது.

✱✱✱